பேராசிரியர்
பொன்விழா
மலர்.
1972
கே. மாதவன்

வண்ணத்துப்பூச்சி தரும் உன்னத பட்டுகள்

கோ-ஆப்டெக்ஸ்

''நீலவான் ஆடைக்குள்
நடமாடும் விண்மீன்கள்;
வண்ணங்கள் பலகோடி,
எண்ணங்கள் இன்பம் தரும்;
தறியில் பிறக்கின்ற,
ஆடைகளைக் கண்டிடுவீர்!
உங்களைக் கவர்ந்திடும் ஓர்
கோ-ஆப்டெக்ஸ் புடவை!''

வண்ணத்துப் பூச்சி வழங்கும் நேர்த்தியான அழகுமிக்க அசல் பட்டாடைகள் தென்னகத்தின் தனிச் சிறப்பாகும். கோ-ஆப்டெக்ஸ், உன்னதமான தரத்திற்கு உத்திரவாதமளிக்கிறது. தறியிலிருந்து நேராக வந்திருக்கும் புத்தம் புதிய கைத்தறி ஆடைகள்!

கோ-ஆப்டெக்ஸ், கைத்தறி நெசவாளர்களின் கைத்திறன் பெருமைப்படத் தக்கதாகும்.

விற்பனையாளர்களின் கனிவு ஒரு இனிய நல்வரவு.

Criterion CO 2686

திருமதி வெற்றிச் செல்வி - அன்பழகன்

அன்னையே!

இம்மலர்

எம் பேராசிரியர் இதய மலரில் இருக்கும்

உமக்கே காணிக்கை!

காணிக்கை

★

மாண்புமிகு பேராசிரியர் பொன்விழா மலர் உங்கள் கரங்களில் திகழ் கின்றது; எங்கள் உள்ளம் மகிழ்கின்றது.

பொன்விழா மலர் வெளியிட வேண்டுமென்ற பலர் விருப்பத்தைப் பேராசிரியர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஒப்புதலைப் பெறுவதற்குப் பெரும் பாடு...!

கால் நூற்றுண்டுக் காலத்துக்கும் மேலாகத் தமிழுக்கும் தன்மான இயக்கங் களுக்கும் பேராசிரியர் அவர்கள் ஆற்றியிருக்கும் பயன்கருதாப் பணிகள் அளவிடற்கரியன. அவற்றின் சிறப்புகளையெல்லாம் செந்தமிழ் வல்ல அறிஞர் களும் கவிஞர்களும் இம்மலரில் செவ்வனே வடித்துத் தந்துள்ளார்கள்.

இந்தியத் துணைக்கண்டமே வியந்து பாராட்டிய அரசியல் நாகரிகத்தை அறிஞர் அண்ணு அவர்கள் அளித்துச் சென்றுர்கள். அந்த அண்ணனுக்குத் தொடக்க காலத்திலிருந்து 'துணைத் தம்பி'யாக இருந்து தூய தொண்டாற்றி வருபவர் நம் பேராசிரியர். அரசியல் உலகிலும் அறம் பிறழாமல் அவர்கள் ஒழுகிவரும் உயர் பண்பாட்டை அனைத்துக் கட்சித் தலைவர்களும் தம் கட்டுரை களில் அழகுறப் போற்றியுள்ளார்கள்.

பொன்விழா மலர்ப் பணியைத் தொடங்குவதற்கு முன் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைக் கண்டோம். மலர்ந்த முகங் காட்டி, கனிந்த சொற்கள் கூறி மலர்ப் பணியைச் செய்யச் சொன்னுர்கள். பேராசிரியர் தம் ஒரு சாலை மாணுக்கராம் டாக்டர் நாவலர் அவர்களும் நல்வாழ்த்துச் சொல்லி ஊக்குவித்தார்கள்.

பேராசிரியர் பொன்விழாவைக் கண்டு மகிழ இன்று பொன்னுன அண்ணன் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு எழுகின்றது!

பேராசிரியர் தம் நல்ல குடும்பத்தைப் பல்கலைக் கழகமாக உருவாக்கி — கொண்ட கொழுநர் குணமறிந்து, கொள்கையறிந்து ஒழுகி — வீட்டுக்கு விளக் காகவும், நாட்டுக்கு நன்மை பயப்பவராகவும் விளங்கிய திருமதி வெற்றிச் செல்வி அன்பழகன் அவர்களும் இன்று இல்லையே என்னும் உண்மை உள்ளத்தை உருக்குகின்றது. அந்த அன்னைக்குப் பொன்விழா மலரைக் காணிக்கையாக்கி ஆறுதல் பெறுகின்றோம்.

மலர் மணம் பெறுவதற்கு நல்லோர் பலர் மனம் எங்களுக்கு உறுதுணையாக இருந்தது. அவர்கள் எல்லார்க்கும் எங்கள் இதயமார்ந்த நன்றியை உரிமையாக்குகின்றோம்.

அன்பன்,

சா. அமீது

செயலாளர்,

பொன்விழா மலர்க் குழு.

9, ஒய். எம். சி. ஏ. விடுதி,
சென்னை - 14.
20 — 4 — 1972



சா. அமீது, M.A.,

தொகுப்பாசிரியர் – வெளியீட்டாளர்

தம் மகனைச் சான்றோன் எனக் கேட்டுவக்கும் தாய் — தந்தையர்.



மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.



PRESS SECRETARY TO THE PRESIDENT OF INDIA
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI-4
April 3, 1972.



Dear Professor Hameed,

The President thanks you for your letter of the 25th March, 1972, informing him that you are bringing out a souvenir in connection with the 50th birthday of Professor K. Anbazhagan. He has asked me to convey his felicitations to Thiru Anbazhagan. He wishes your souvenir volume all success.

Yours sincerely,

(Sd.) **A. M. Abdul Hamid**

K. K. SHAH
GOVERNOR OF TAMILNADU

Raj Bhavan,
Madras-22,
28th March 1972.



MESSAGE

I offer my warmest greetings to Thiru K. Anbazhagan on the occasion of his 50th birthday and wish him many happy returns of the day.

(Sd.) *K. K. Shah*

“கொள்கைக் குடும்பத்தின் இலட்சியக் குன்றம்”

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்



30 ஆண்டுகளுக்கு முன்னர், திருவாரூரில் ‘‘தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்’’ என்ற ஒரு மாணவர் அமைப்பினைத் தொடங்கினேன். சேலம், இராசிபுரம் போன்ற ஊர்களில் அதற்குக் கிளைகளும் அமைந்தன. அப்போது நாட்டில் ஏற்பட்டிருந்த இந்தி எதிர்ப்பு, சுயமரியாதை இயக்கங்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு உணர்ச்சியும், எழுச்சியும் ஊட்டிடத் தக்க விதத்தில் இந்த அமைப்புச் செயல்பட்டு வந்தது.

இதனுடைய முதலாவது ஆண்டுவிழாவினை 1943-ஆம் ஆண்டு திருவாரூரில் நடத்தினேன். முக்கிய சொற்பொழிவாளராக அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. வகுப்பு மாணவராயிருந்த ஒருவரை அழைத்திருந்தேன். ஒல்லியான, மெலிந்த உருவம் என்றாலும் துல்லியமான செந்தமிழ்ப் பேச்சு; அணை உடைத்த வெள்ளமெனத் தடைபடா அருவி நடை; தன்மானக்

கருத்துக்கள்; தமிழ் முழக்கம்—இவைகளால் எங்களையெல்லாம் ஈர்த்துத் தன்வயமாக்கிக் கொண்டார், அந்தச் சொற்பொழிவாளர். அவர்தாம் இன்றைய தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். அவர் இன்றைக்கு 50 ஆண்டைக் கடந்து நிற்கிறார் என்பதை நினைத்திட நெஞ்சு இனிக்கிறது.

என்னைவிட ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளே மூத்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றாலும் பின்னர் அண்ணாவின் பல்கலைக் கழகத்தில் தம்மை இணைத்துக்கொண்டு, கல்லிலும் முள்ளிலும் நடந்து, அல்லும், பகலும் சுற்றிச் சுழன்று, கண்ணீரும், செந்நீரும் சிந்தி இந்தக் கழகத்தை வளர்த்த பெரும் தொண்டர்களின் வரிசையில் அவருக்கு ஒரு சிறப்பான இடமுண்டு என்பதனை நாடு நன்கு அறியும். நெஞ்சத்தில் தோன்றும் கருத்துக்களை அஞ்சாமல் எடுத்துரைத்து—யாரிடம் பேசுகிறோம், அவர்கள் என்ன சொல்வார்கள்? என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், தயவுதாட்சண்ய மின்றி எடுத்துரைப்பதில் அவர் ஒரு தனித்தன்மை கொண்டவர்.

அவர் மாத்திரமல்லாமல், அவர் தந்தையாரே கல்யாணசுந்தரம் என்ற தம் பெயரை மணவழகனார் என்று மாற்றிக்கொண்டு தன்மான இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட தகைமையாளர் ஆவார். பேராசிரியர் அவர்களின் இளவல்களான புலவர் திருமாறன், அறிவழகன், பாலகிருஷ்ணன் ஆகிய அனைவரும் இந்த இயக்கத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அனைத்திற்கும் மேலாக இவருடைய அருமைத் துணைவியார் திருமதி. வெற்றிச் செல்வி அவர்கள் இன்று நம்மிடையே இல்லையென்றாலும் அவர்கள் இந்த இயக்கத்திலே முழுமையாக ஈடுபட்டுப் போராட்டங்களில் பங்குபெற்றுக் குறிப் பிடத்தக்கதோர் இடத்தைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

இப்படிப்பட்ட தன்மான உணர்வுகளையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ்க் குடும்பத்தின் முன்னவர் பொதுத் தொண்டிலேதான் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்து வரும் அன்பாளர் பொன்விழா வயதடைந்தார் என்கின்ற சிறப்பான செய்தியினை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன். அவர் மேலும் பல்லாண்டுகள் தொடர்ந்து தூய தொண்டாற்றி, எங்கள் இலட்சியப் பயணத்தில் இடையறாது நடைபோட விரும்பி, மனமார வாழ்த்துகின்றேன்.

27/3/72

"போற்றுதலுக்குரிய பேராசிரியர்!"

மாண்பு மிகு டாக்டர், நாவலர்



பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிருர்; அந்த நிறைவு விழா பொன் விழாவாகக் கொண்டாடப் பெறுகிறது; பொன் விழாவைத் தக்க முறையில் கொண்டாடி மகிழ நண்பர்கள் குழாம் கூடுகிறது; அந்தக் குழாத்துள் என்னையும் ஒருவனுக இணைத்துக்கொள்வதில் நான் பூரிப்பும், பெருமையும் கொள்கிறேன்.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் வாழ்க! பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! பல்லாயிரத்தாண்டு வாழ்க! பல்கோடி நூருயிரம் ஆண்டு வாழ்க! என மனதார வழுத்துவதிலும், வாயார வாழ்த்துவதிலும் பெருமகிழ்வடைகிறேன்.

பேராசிரியர் அவர்களை நான் 1939ஆம் ஆண்டிலிருந்து நன்கு அறிவேன். பேராசிரியர் அவர்களோடு நீண்ட காலம் தொடர்பு கொண்டு, நெருங்கிப் பழகி, ஒன்ருகவே சேர்ந்து வளர்ந்து, ஒன்ருகவே பொதுப்பணி ஆற்றி வருபவர்களில் என்னை மிஞ்சி நிற்பவர்கள் எவரும் இருக்கமுடியாது என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு.

1939ஆம் ஆண்டில் நான் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இடைநிலை வகுப்பில் (இண்டர் மீடியட்) சேர்ந்தபோது, பேராசிரியர் அன்பழகன் அவர்களும் இடைநிலை வகுப்பில் வந்து சேர்ந்தார்கள். நான் கணக்கியல் பிரிவில் சேர்ந்தேன்; அவர் வரலாற்றியல் பிரிவில் சேர்ந்தார். நான் 'நாராயணசாமி' பெயரோடு பல்கலைக்கழகத்தில் புகுந்தேன்; அவர் 'இராமையா' என்ற பெயரோடு புகுந்தார். ஆனர்சு வகுப்பில் நாங்கள் இருவரும் ஒன்ருக இணைந்தோம். ஒரே பிரிவில் மூன்று ஆண்டுக் காலம் சேர்ந்து இருந்து படித்தோம். பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறும்போது நான் 'நெடுஞ்செழியன்' என்ற பெயரோடு வெளி யேறினேன்; அவர் 'அன்பழகன்' என்ற பெயரோடு வெளியேறினர்.

பேராசிரியர் மட்டுமல்லாமல் அவரது குடும்பமே சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்ருேடு நீங்காப் பற்றுக் கொண்டு விளங்கி வந்ததாகும். பேராசிரியர் அவர்கள் திராவிட இயக்கத்தில் பங்கு கொள்ளுவதற்கான சூழ்நிலையை உருவாக்கிய பெருமை முழுவதும் அவரது அருமைத் தந்தையார் மணவழகனர் (கல்யாண சுந்தரனர்) அவர்களைச் சாரும். பேராசிரியர் அவர்களைப் பின்பற்றித்தான் அவருடைய இளவல்களான திருமாறன், அறிவழகன், இளவழகன் ஆகியோர் இயக்கத் தொண்டாற்றி வருகின்றனர்.

தொடக்கக் காலத்தில் சிதம்பரத்தில் நீதிக்கட்சியும், திராவிட இயக்கமும் வேரூன்றி வளர்வதற்கு உறுதுணையாக இருந்தவர் பேராசிரியர் அவர்களின் தந்தையாரேயாவார். இயக்கச் சார்புடைய ஏடுகளையும், இதழ்களையும் வரவழைத்துச் சிதம்பரம் பகுதியிலும் அண்ணுமலை நகர்ப் பகுதியிலும் பரப்பிய பெருமை அவரையே சாரும். 'விடுதலை', 'குடியரசு' போன்ற இதழ்களை வாங்க அவர் வீட்டிற்குச் சென்றபோதுதான் நானும், இளவல் செழியனும் பேராசிரியர் அவர்களுக்கு அறிமுகமானேம்.

பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது நான் 'கொள்கைப்பற்ருேடு' இருந்தேன் என்ருல், அவர் 'கொள்கை வெறியோடு' திகழ்ந்தார். அப்பொழுது பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பெரும்பாலோர் காங்கிரசு – கம்யூனிசுட்டுக் கட்சிப் பற்றுடையவர் களாகத்தான் விளங்கினர்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் திராவிட இயக்கப் பற்றுடையவர்களாக இருந்தோம். பல்கலைக் கழக மன்றங்களின் சார்பில் நடைபெறும் சிறப்புக் கூட்டம் அல்லது பட்டி மன்றம் ஆகியவற்றில் கலந்துகொண்டு இயக்கக் கருத்துக்களை ஆணித்தரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் எடுத்துச் சொல்லுகிற ஆற்றலைப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்தாம் பெற்றிருந்தார். மூன்ருவது ஆனர்சு வகுப்புப் படிக்கும் காலம் வரையில் பல்கலைக் கழக மேடைகளில் ஏறிச் சொற்பொழிவாற்றும் வல்லமையை நான் பெற்றேனில்லை. பேராசிரியர் அவர்களின் சொற்பொழிவுகளைக் கூட்டத்தில் உட்கார்ந்து கைதட்டி வரவேற்றேனேயல்லாமல், மேடை ஏறி அவர் முன் மொழிந்ததை நான் வழிமொழியும் ஆற்றலைப் பெறவில்லை. அவருக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மூன்ருவது ஆனர்சு வகுப்பில் படிக்கும்போது துணிந்து மேடை ஏறிப் பேசத் தொடங்கினேன். அதிலிருந்து அவரும் நானும் அரசியல் பணிகளில் இணைந்து நின்று செயல்படத் தொடங்கினேம்.

பட்டி மன்றக் கூட்டங்களில் மாற்றுக் கட்சி மாணவர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவார்கள். நான் பொருளாதாரப் புள்ளி விவரங்களையும், இலக்கியச் சான்று களையும், வரலாற்றுச் சான்றுகளையும் திரட்டி வைத்துக்கொண்டு, அவருக்குப் பக்கத்துணையாக நின்று வாதாடுவேன். பொதுவான மாணவர்கள் முதலில் எங்கள் பக்கம் வர மறுத்தாலும், ஆதாரங்களையும், வாதங்களையும் கேட்ட பிறகு எங்கள் பக்கம் வருவார்கள். இறுதியாக நாங்கள் எடுத்துவைக்கும் கருத்து வாக்கெடுப்பில் வெல்லும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாகப் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள நானும் பேராசிரியர் அவர்களும் பெங்களூர் சென்றோம். பேச்சுப் போட்டியில் இருவரும் வென்று வெற்றிக் கோப்பைகளையும், வெற்றிக் கேடயத்தையும் பெற்று மீண்டோம்.

1943இல் நானும், பேராசிரியர் அவர்களும் கலைஞரின் அழைப்பினை ஏற்று, 'முரசொலி மன்ற' ஆண்டு விழாவில் கலந்துகொள்ளத் திருவாரூர் சென்றோம்.

1944இல் குடந்தையில் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டில் கலந்துகொள்ள ஒன்றாகவே சென்றோம்.

பல்கலைக் கழகத்தை விட்டு வெறியேறிய உடனேயே ஈரோட்டில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றோம். அந்த மாநாட்டைப் பெரியார் அவர்கள் கூட்டினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். நான் கொடியேற்றுவிழாவை ஆற்றினேன்; பேராசிரியர் அவர்கள் திறப்புவிழாவாற்றினார்.

1944இல் கொள்கை விளக்கத்திற்கான மாணவர் சுற்றுப் பயணத்தை நான் கோவை மாவட்டத்தில் மேற்கொண்டேன்; பேராசிரியர் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் மேற்கொண்டார்.

இயக்கப்பணிகளில் தொடர்ந்து சேர்ந்து நின்று பணியாற்றி வருகிற நாங்கள் இன்று தமிழகக் கழக அமைச்சர் அவையில் சேர்ந்து இருந்து பணியாற்றி வருகிறோம்.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கொள்கை வெறிகொண்டவர்; இயக்கத்திலே அழுத்தமான பிடிப்பு உடையவர்; மனதில் பட்டதை அஞ்சாமல் எடுத்துச் சொல்பவர்; ஆட்களைவிடக் கொள்கைகளுக்கும், முறைகளுக்கும் மதிப்புத் தரவேண்டும் என்று வாதாடுபவர்; நீர்வீழ்ச்சியெனச் சொற்பொழிவாற்றும் தகைமையவர்; எழுத்தாற்றலிலே சிறந்தவர்; எந்தக் கருத்தையும் தெளிவுபடுத்திக் காட்டுவதிலே வல்லவர்.

போற்றுதலுக்குரிய பண்புகளையும், திறமைகளையும் பெற்றிருக்கிற பேராசிரியர் அன்பழகன் அவர்கள் வளம்பல பெற்று, நலம் பல எய்தி, பெருமையும் புகழும் பெற்று நெடிது காலம் இனிது வாழ்வார்களாக! என வாழ்த்துகிறேன்.

"கருணையும் கண்டிப்பும் கலந்தவர்!"

சிந்தனைச் சிற்பி மாண்பு மிகு சி.பி.சிற்றரசு

தோற்றம் எளிமை. ஏற்றம் விரைவு. கருமமே கண். காரியமே கவலை. இவைகள் ஒரு சேர்ந்த உருவம்தான் நமது தமிழகத்தின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. க. அன்பழகன் எம்.ஏ. அவர்கள்.

நான் அவர் தவழ்ந்து விளையாடிய சிதம்பரத்தின் குறுகிய தெருவிலிருந்த ஒட்டு வீட்டை எண்ணுகின்றேன். உழைப்பே உருவான இவருடைய தந்தையார் திரு. கலியாண சுந்தரனாரை எண்ணுகிறேன். தாயின் இடுப்பில் ஒட்டிக் கொண்டிருந்த இன்றைய மேலவை உறுப்பினர் திரு. அறிவழகனை எண்ணுகிறேன். எனக்கும் தோழர் மொய்தீனுக்கும் சோறு பரிமாறிய காட்சியை எண்ணுகிறேன்.

குடும்பப் படகு எவ்வளவு சூறுவளியில் தத்தளித்தது. அவர்களுடைய கொள்கைப் பற்றின் காரணத்தால் எங்களை உபசரிக்க வேண்டிய ஆசையும் கடமையும் ஒருபுறம், மற்றோர் புறம், கொள்கையேந்தி வழி நடந்த அகதிகளாகிய எங்களுக்கும் அந்த வீடு தவிர வேறு கதியில்லை என்ற நிலை. அவ்வளவு எளிய குடும்பத்திலே தோன்றிய ஆண்கள் நால்வரில் மூத்தவர் திரு. அன்பழகன். இவர்களுக்குச் சோறூட்டி வளர்க்க அந்த முதியவர் தொல்லைப் பட்டாரேயன்றி அறிவூட்டி வளர்க்க அவ்வளவு சிரமப்படவில்லையென்றே நான் துணிந்து கூறுவேன். ஏனெனில் இந்தப் பிள்ளைகள் சிறுவயதிலேயே வளரும் பருவத்தில் கடமையை யுணர்ந்தனர். ஒழுங்காகப் படித்தனர். முன்னுக்கு வந்தனர். தக்கார் போற்றும் அளவுக்கு மிக உயர்ந்தனர். உழைப்பால் உயர்ந்தவர்கள். உறுதியால் உயர்ந்தவர்கள். அறிவால் உயர்ந்தவர்கள். ஆற்றலால் உயர்ந்தவர்கள் என்று பலரைப் பேசுகின்றோமல்லவா. அந்த நிலையில் திரு. அன்பழகன் அவர்கள் உழைப்பால், உறுதியால் நாடாளு மன்றத்திலேயும், சட்ட மன்றத்திலேயும், சட்ட மன்ற மேலவையின் எதிர்க்கட்சி வரிசையிலேயும் பெற்ற பாராளுமன்றப் பயிற்சியோடு இன்று ஆளும் கட்சியின் அரியாசனத்தில் மக்கள் நல்வாழ்வைக் கவனிக்கும் அமைச்சராயிருக்கின்றார். அவரைச் சந்தித்துவிட்டு வரும் சில நண்பர்கள் 'அன்பழகன் பொல்லாத கண்டிப்பாக இருக்கிறார்' என்று கண்டிப்பாக இருப்பதைப் பொல்லாத என்ற அடைமொழி சேர்த்துச் சொல்வார்கள். கண்டிப்பாக இருப்பது நல்லதே தவிரப் பொல்லாததல்ல; அவர் கண்டிப்பாயிருப்பது அவருக்கு மட்டிலும் பெருமையல்ல, அவர் சார்ந்திருக்கிற கழகத்திற்கும் அவரைச் சூழ்ந்திருக்கின்ற கழக நண்பர்களுக்கும் பொது மக்களுக்கும் நோயாளிகளிடம் கண்டிப்பாக இருந்து தீரவேண்டிய மருத்துவத் துறைக்கும் நல்லதுதானே. நானறிந்த மட்டில் அவர் கண்டிப்பானவர் மாத்திரமல்ல, கருணையும் மிகுந்தவர்.

எது நியாயமோ, எது நீதியோ அதைக் கருணையோடு கவனிப்பார். எது அநீதியோ, எது அநியாயமோ அதை நெருங்கமாட்டேன் என்று கண்டிப்பாக இருப்பார். இது சரியல்ல என்பவர்கள் 'இப்படி நினைப்பது சரி அல்ல, என்று மறுத்து, அவர் நீடுழி வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

'இக்காலப் பிசிராந்தையார்'

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்
தொழிலாளர் நல அமைச்சர்



மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களின் 50-ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கும் எனக்கும் ஏறத்தாழ 30 ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு. அவரும், அவரது குடும்பத்தினரும் பகுத்தறிவுப் பாசறையில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றவர்கள்.

அவருடைய தந்தையார் திரு. கல்யாணசுந்தரனார் அவர்கள் இயக்கத்தின் ஆரம்ப நாட்களில் இயக்க இதழ்களை விற்பனை செய்து — இலாபம் கருதியல்ல — இயக்க இலட்சியங்கள் பரவவேண்டும் என்ற ஆர்வத்தினால் — கொள்கையைப் பரப்பி வந்தவர் ஆவார்.

தந்தை பெரியார் அவர்களிடத்தும், அறிஞர் அண்ணா அவர்களிடத்தும் தோழர் அன்பழகன் அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பற்றும் பாசமும் வைத்துப் பழகி வந்தனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ப்யிலும்போதே பேராசிரியர் அன்பழகன் அவர்கள் நமது கழகப் பொதுச் செயலாளர் நாவலர், பேரவைத் தலைவர் மதியழகன், பாராளுமன்ற உறுப்பினர் செழியன் ஆகியோரோடு தொடர்புகொண்டு இயக்கத்தை வளர்ப்பதற்கு இன்றியமையாத பணியாற்றி யுள்ளார்.

தமது கல்வி வாழ்க்கை முடிந்ததும் தோழர் அன்பழகன் அவர்கள் பச்சை யப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகவும், பிறகு துணைப் பேராசிரியராகவும் தமிழ்த்துறையில் பணியாற்றினார்.

1957-ஆம் ஆண்டு தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் ஈடுபட்டபோது, நண்பர் அன்பழகன் அவர்கள் தமது கல்லூரிப் பதவியினின்றும் விலகி எழும்பூர்த் தொகுதியில் இருந்து தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பிறகு சட்டமன்ற மேலவையிலும் பணியாற்றினார். பாராளுமன்ற உறுப்பினராக 1967 முதல் 1971 வரை இருந்திருக்கிறார்.

இப்படிப் பல துறைகளிலும், பல அரங்குகளிலும் அவர் பங்குகொண்டு பணியாற்றி வந்துள்ளார்.

தமிழில் பேச்சுத் துறையில் தமக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டவர். அவரது தமிழ்மொழியின் உச்சரிப்பை மாற்றாரும் பாராட்டுவர்.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்துகொண்டே, தம்மாலியன்றவரையில் இயக்கப் பணியாற்றி வந்தார்.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் சென்று முன்னேற்றக் கருத்துக்களை முழங்கியவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கு உரியவரான தோழர் அன்பழகன் அவர்கள், தமிழ் வளர்ச்சிக்கு உற்ற பணியாற்றியிருக்கிறார் — பணியாற்றியும் வருகிறார்.

படித்த இளைஞர்கள் கட்சிக்கு வரவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, நமது பொதுச் செயலாளர் நாவலர் அவர்களையும் மாண்புமிகு அன்பழகன் அவர்களையும் பேரவைத் தலைவர் மதியழகன் அவர்களையும் பின்பற்றி ஏராளமானபேர் இயக்கத்துக்கு வந்தனர்.

இன்று மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு அமைச்சராக இருக்கும் மாண்புமிகு அன்பழகன் அவர்கள், அந்தத் துறையை மிகச் சீரிய முறையில் நடாத்தி வருவது மட்டுமல்லாமல், நமது மாநிலத்தின் ''குடும்பக் கட்டுப்பாடு'' முறைகளைக் குவலயமே மகிழ்ந்து போற்றும்படி செய்துள்ளார்.

தோழர் அன்பழகன் அவர்களது கட்சிப் பணியில் அவரது துணைவியார் மறைந்த திருமதி வெற்றிச் செல்வி அவர்களுக்கும் பெரும் பங்குண்டு. தோழர் அன்பழகன் அவர்களுக்கு இணையாகத் திருமதி வெற்றிச்செல்வி அவர்களும் மகளிர் மன்றம் போன்ற அமைப்புகளில் தீவிரப் பங்கு கொண்டு பணியாற்றி வந்தார். அவரது பிரிவு நண்பர் அன்பழகன் அவர்களுக்கு மட்டுமல்ல — நமது கழகத்துக்கும் — குறிப்பாக மகளிர் மன்றத்திற்கும் பெருத்த இழப்பாகும்.

காண்பதற்கு இன்றும் இளைஞரைப்போல் தோன்றும் மாண்புமிகு அன்பழகன் அவர்களை, இருபதாம் நூற்றாண்டின் பிசிராந்தையார் என்று அழைக்கலாம். தமது திறமையாலும், ஆற்றலாலும், டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் சீரிய பணியாற்றிவரும் மாண்புமிகு அன்பழகன் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து வெற்றி பல காண இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

பல்லாண்டு பாடுவோம்

மாண்பு மிகு திருமதி சத்தியவாணி முத்து
அரிசன நல அமைச்சர்

அறிவுக்கு வயது ஐம்பது! ஆன்றவிந்தடங்கிய கருத்துச் செறிவுக்கு வயது ஐம்பது! கழகக் காவலருள் ஒருவராம் பேராசிரியருக்கு வயது ஐம்பது! பீடுநடைத் தமிழ் வித்தக நூலாசிரியருக்கு வயது ஐம்பது! பெரியாரின் வழி வந்த தங்கத்துக்கு வயது ஐம்பது! தன்மானக் குரல் கொடுத்த சிங்கத்துக்கு வயது ஐம்பது! தகைமை சால் அண்ணாவின் தம்பிக்கு வயது ஐம்பது! தமிழையே உயிராய் எண்ணும் நம்பிக்கு வயது ஐம்பது! தோற்றத்தில் எளிமை கொண்ட அன்புக்கு வயது ஐம்பது! தூயநேர் உள்ளம் வாய்ந்த பண்புக்கு வயது ஐம்பது! பகுத்தறிவு மணம் பரப்பிய வீரருக்கு வயது ஐம்பது! விழுமிய நோக்குக் கொண்ட தீரருக்கு வயது ஐம்பது! திருவிடம் போற்று கின்ற தகைமைக்கு வயது ஐம்பது! தன்னல எண்ணங் கட்குப் பகைவருக்கு வயது ஐம்பது! பொதுமக்கள் நலனைப் பேணும் அமைச்சுக்கு வயது ஐம்பது! அன்பழகனாருக்கு வயது ஐம்பது! அன்னார்,

நீர் போல் வாழ்க! நிலம் போல் வாழ்க!
கார் போல் வாழ்க! கடல் போல் வாழ்க!
சீர் மிகு அன்னைத் தமிழ்போல் வாழ்க!
பார் உள்ளளவும் பல்லாண்டு வாழ்க!

பகுத்தறிவுப் பாசறையே வாழ்க!

மாண்புமிகு செ. மாதவன், தொழில் அமைச்சர்.



மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்களின் பொன்விழா மலர் வெளியிடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

அமரர் அண்ணா அவர்களின் அருமைத் தம்பியர்களில் பேராசிரியராய்ப் பெருமையுடன் விளங்கி, தம் நாவன்மையால் இளம் மாணவ உள்ளங்களிலே பகுத்தறிவையும் தாய்மொழிப் பற்றையும் பதிய வைத்த தலைவர் அவர். பச்சையப்பர் கல்லூரி பகுத்தறிவுப் பாசறையாக அன்று விளங்கியதென்றால் அதற்குக் காரணமாக இருந்தவர்கள் பேராசிரியர் அவர்கள்.

எந்த வாதத்தை அவர்கள் எடுத்து உரைத்தாலும் அதிலே ஒரு தெளிவு இருக்கும். சீரிய சிந்தனைப் பொறிகளால் ஒளிபெறும் அவர்களது பேச்சிலே உள்ள துல்லியமும் துடிப்பும் எவரையும் ஈர்க்கும் தன்மையன.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்த கழக அமைச்சரவை என்ற ஆரத்திலுள்ள முகப்பு மணிகளில் ஒன்றாகப் பேராசிரியர் திகழ்கின்றார்கள்.

அவர்கள் நீடு வாழ்ந்து நாட்டிற்கும், மொழிக்கும் நற்பணியினைத் தொடர்ந்து ஆற்றிட எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

தெளிந்த சிந்தனை; தேர்ந்த புலமை!

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா
பொதுப் பணித்துறை அமைச்சர்



பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்குப் பொன்விழா நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்வு கொள்கிறேன். முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பினுக்கும் நீண்ட காலமாகத் தொண்டு செய்து, அந்த உயரிய இயக்கத்தின் இயக்கத்திற்குத் தம்மை ஒப்படைத்துக்கொண்ட பெருமைக்குரியவர் பேராசிரியர் அவர்கள். தெளிந்த சிந்தனையும் தேர்ந்த புலமையும் மிகப்பெற்ற பேராசிரியர் அவர்கள், பேராசிரியராகக் கல்லூரியில் பணியாற்றிய நாட்களில் பகுத்தறிவு இயக்கத்தில் வீறு பெற்றுத் தொண்டாற்றத்தக்க மாணவ மணிகளை உருவாக்கினார்கள். சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பணியாற்றியமையால் சட்டமன்ற அனுபவம் செம்மையாகப் பெற்ற பேராசிரியர் அவர்கள், சிறந்த வகையில் அமைச்சர் பணியைச் சீரிய முறையில் ஆற்றி வருகிறார்கள்.

பேராசிரியர் அவர்கள் பல்லாண்டுகள் பல நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவேண்டுமென்று மனம் உவந்து வாழ்த்துகின்றேன்.

“என்றும் இளைஞர்!”

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்,
கூட்டுறவுத் துறை அமைச்சர்.



மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாள் விழாவினையொட்டி மலர் ஒன்று வெளியிடுவதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த மலரில் பேராசிரியர் அவர்களின் புகைப்படங்கள் பல வெளியிடப்படும் என்று நினைக்கிறேன். அந்தப் படங்களைப் பார்க்கின்ற எவரும் பேராசிரியர் அவர்களுக்கு 50 வயது ஆகிறது என்பதனை நம்ப மாட்டார்கள். நேரில் பார்க்கிறவர்களே நம்புவதில்லை! அப்படியிருக்க, படத்தில் இளமைத் தோற்றம் இன்னும் மிகுதியாகக் காணப்படும்.

இவ்வாறு இளமையோடு அவர்கள் காட்சியளிப்பதற்கு, அவர்களுடைய உள்ளத்தின் இளமையும், உள்ளத்தில் எழுகின்ற கருத்துக்களின் இளமைத் துடிப்புமே காரணங்கள் ஆகும்.

மக்கள் நல்வாழ்வுத்துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள அவர்களின் நிர்வாகத் திறமை, நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். தமிழக மக்கள் உடலுறுதி உள்ளவர்களாகவும், உடலின் உறுதியைப்போல் உள்ளத்தில் உறுதி உள்ளவர்களாகவும் வாழ, வளர, பேராசிரியர் அவர்களின் பணி சிறப்புற்றோங்க என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழர் வாழ்வே வாழி!

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன், மின்துறை அமைச்சர்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வரலாறு, முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியோடு ஒன்றியதாகும். மாணவர் சமுதாயம் பகுத்தறிவுக் கருத்துக்களை உணர்ந்திடவும், தமிழக மக்கள் கழகக் கோட்பாடுகளை அறிந்திடவும் அரும்பணியாற்றிய பெருமை பேராசிரியர் அவர்களைச் சாரும். திருக்குறள் கருத்துக்களைத் தமிழகமெங்கும் பரப்பியவர் நம் பேராசிரியர். தமிழ் வாழ்வாய்த் திகழும் பேராசிரியர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழ் வளர்ச்சியுறவும், தமிழர்கள் உயர்ச்சியுறவும் தொண்டாற்ற வாழ்த்துகிறேன்.

நமது காலத்து நக்கீரர்

மாண்பு மிகு ச. இராமச்சந்திரன்
போக்கு வரத்துத்துறை அமைச்சர்

சரியெனப்பட்டதை அறிந்து தெளிந்து துணிந்து, காய்தல் உவத்தல் இன்றி எடுத்துச் சொல்லும் இயல்பினர், இவ்வுலகின் கண் மிகக் குறைந்த எண்ணிக்கையினராவர். அத்தகையோருள் தலை சிறந்து விளங்கக் கூடியவர் நம் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஆவார்கள். அழகான தமிழ், இனிய குரல், எளிய தோற்றம், இவை அமையப் பெற்ற, அருமைத் தமிழரே நம் பேராசிரியர். பேரறிஞர் அண்ணா அவர்களோடு மிக நெருங்கிப் பழகிய, தொடர்ந்து நடைபோட்ட முன்னணி வீரர்களில் ஒருவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மக்களுக்குத் தயாரித்துத் தந்து சென்ற மிகச் சிறந்த படைக் கலன்களில் ஒருவர்.

பேராசிரியர் அவர்களுக்கு 50 வயது தொடங்கியதை ஒட்டிய பொன்விழா எனக் கேட்டுத் தமிழ் மக்கள் மகிழ்ச்சி எய்துகின்றனர். ஆண்டுகள் ஐம்பதெனக் காலம் கணக்கிட்டாலும், பேராசிரியர் உள்ளத்தாலும், உடலாலும் என்றும் தமிழ்போல் இளமை உடையரே. பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, தன்னலங் கருதாது தமிழ் மக்களுக்குச் சட்டமன்றமாயினும், நாடாளு மன்றமாயினும் நல்ல பல தொண்டாற்றியவர் என்பதை நாடறியும்.

நம் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையிலான ஆட்சியின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பொறுப்பேற்று அவர் ஆற்றிவரும் பணிகள் அளவிடற்கரியன. குறிப்பாக, குடும்ப நலத் திட்டத்தில் இந்தியாவில், தமிழகத்திற்கு முதலிடம் வாங்கித் தந்துள்ள பெருமை அவரையே சாரும். இந்தியத்துணைக் கண்டத்திற்கே, சிறந்த எடுத்துக்காட்டான முற்போக்குக் கொள்கையைக் கொண்ட சமதர்ம ஆட்சியின் கொள்கைகளும் திட்டங்களும் நிறைவேற என்றும் அவர் பணி இன்றியமையாதது.

வாழ்க பேராசிரியர். வளர்க அவர் தொண்டு.

வழிகாட்டியாய் வாழ்க!

திரு. அ. பெ. தர்மலிங்கம், முன்னாள் அமைச்சர்



திராவிடர் கழகம் வலிவுறத் தொடங்கிய நாள் தொட்டு முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டுள்ள இந் நாள் வரையில் பேராசிரியர் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் அரிய வாய்ப்பு எனக்கு உண்டு. அறிவியக்க வளர்ச்சிக்காகவும் கழகத்தின் மலர்ச்சிக்காகவும் மாணவர் உலகின் சீர்திருத்த எழுச்சிக்காகவும் தளராது பணியாற்றிய பெருமகனுர் பேராசிரியர் ஆவார். பேரறிஞர் அண்ணு அவர்களுடன் நெருங்கிப்பழகிய சிறப்பு அவருக்கு உண்டு. இத்தகு புகழுக்குரிய நண்பர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்து தமிழ் இனத்திற்கு வழிகாட்டியாய் விளங்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகிறேன்.

S. MUTHU, M.L.C.
MAYOR
CORPORATION OF MADURAI

Phone : Off. 22433—Resi. 22302

நாள் : 11-4-72.

பேராசிரியர் வாழ்க!

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கொள்கைப் பிடிப்பும், தொண்டுள்ளமும் கொண்ட தூயவராவார். அண்ணாமலைப் பல்கழக மாணவராயிருந்த காலத்திலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் பாதையிலே நடந்து தமது அறிவாலும், ஆற்றலாலும், அருந்தமிழ்ப் பணியாலும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் இதயத்தில் நீங்காத இடம் பெற்ற செம்மல் ஆவார். பச்சையப்பன் கல்லூரியில் இன்றைய மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வ. அவர்களுடன் தமிழ்ப்பணி புரிந்தவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாம் ஒரே குடும்பமாகப் பாசத்தோடு வாழ்ந்து வளரும் பண்பைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள். அந்தப் பாச உணர்வோடு நமது இதயங்கவர்ந்த தலைவர்களை "அறிஞர்" என்றும் கலைஞரென்றும், நாவலரென்றும், சிந்தனைச் சிற்பி என்றும் உரிமையோடும், பெருமையோடும், அழைப்பதுபோலப் "பேராசிரியர்" என்று அழைத்துச் சிறப்பிக்கும் பெருமை பெற்றவர் நமது நலத்துறை அமைச்சர்.

பாராளுமன்ற உறுப்பினராகவும், தி. மு. க. பாராளுமன்றக் கட்சித் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றிய நமது பேராசிரியர் கலைஞரவர்களது அமைச்சரவையில் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்து வருகிறார்கள். அவர்களுடைய அறிவு, ஆற்றல், தெளிவு, திண்மை, தொண்டுள்ளம் தமிழகத்திற்கு மேலும் பயன் பெற்றுத் திகழ அவர் பன்னெடுங்காலம் நல்வாழ்வு வாழ்ந்து நற்றொண்டாற்ற இந்த நன்னாளிலே உளமார வாயார வாழ்த்துகிறேன்.

வாழ்க பேராசிரியர்! வளர்க அவர் தொண்டு!

சிந்தனை கமழும் நோக்கு!

இந்நாட்டின் பொன்னணியே!

பாவேந்தர் பாரதிதாசனார்

நன்றுண்ட மூவேந்தர் நாகரிக மேமாற்றி
வென்றுண்ட ஆரியத்தை வென்றுளத் தோன்றியவர்
குன்று மறவக் குரிசிலார் அன்பழகர்
என்றேழர் என்னல் எனக்குப் பெருமையதே.

திருநின்ற என்றன் தமிழகத்துச் சீர்த்தி
உருநின் றழியாமே ஓம்புபடை கூட்டி
வருகின்றார் அன்பழகர் என்றொருநாள் கேட்டு
விரிகின்ற செந்தமிழ்க்கு வெற்றிஇனி' என்றேனே.

மண்டு புதுநினைவு வாயூறும் மாப்புலவர்
கண்டதமிழ் நாட்டில் கருத்திருண்டு கெட்டொழியும்
நொண்டிப் பசங்களின் நோக்கழிக்க அன்பழகர்
தண்டமிழ் பேசித் தமிழர்நலம் காத்தாரே.

பன்மொழியில் பல்கலையில் ஆய்வும் பழந்தமிழாம்
பொன்மொழியைத் தம்முயிராய்ப் போற்றும் பெருமாண்பும்
இன்மொழியில் நாட்டின் இருளகற்றும் நற்றிறனும்
என்மொழிவேன்! அன்பழகர் இந்நாட்டின் பொன்னணியே.

பற்றலரை வீழ்த்தும் பகுத்தறிவார் அன்பழகர்
பெற்றி யறிந்து பிழிந்தபழச் சாற்றுமொழி
வெற்றி மகளார் விரும்புவதும் மேவுவதும்
முற்றுமியல் பென்று முழங்கும்என் முத்தமிழே!

வெற்றிச் செல்வி-அன்புமகன்

மன்றல் நாளன்று

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் அளித்த நல் வாழ்த்து

வாழ்த்துதும் யாமே! வாழ்த்துதும் யாமே!
வண்டமிழ் மொழியால் வாழ்த்துதும் யாமே!
அன்பு மழகும் வெற்றியுஞ் செல்வமும்
இயல்பிற் றேன்றி யியைந்தாற் போல
அப்பெய ரேற்ற நம்பியு நங்கையும்
மன்றல் முடிக்கு மகிழ்வுறு நாளில்
ஆவி னிருகோ டமையும் பெற்றி
ஒன்றிய வுள்ள மன்றிலிற் றேன்றியும்
அன்புறு நெறியி லின்புற வொழுகியும்
அறிவின் வழியதா வாக்கம் பெற்றும்
அளவொடு மக்களை யழகுற வீன்றும்
திராவிட மென்றுந் திராவிடர்க் காக
மூளும் போரில் வாகை
வழிவழி சூடியும் வாழிநெ டிதென்றே!

சென்னை
21—2—1945

வாழிய பல்லாண்டு!

மதுரைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தர் டாக்டர்
மு.வரதராசனார்

ஐம்ப தாண்டுகள் அமைவுற நிரம்பும்
செந்தமிழ் அறிஞ! சீர்மிகு நண்ப!
மெச்சிட அறிஞர் மேன்மையுற் றொளிரும்
பச்சை யப்பனில் பலநல் லாண்டுகள்
மாணவர் போற்ற மாண்புறு பணிகள்
ஆற்றிய புலவ! அரும்புகழ் பெற்றிடு
பேரா சிரிய! பெட்புறு நெஞ்சினோய்!
தமிழக எழுச்சியில் தமிழ்மொழி தழைப்பினில்
எத்தகு தடையும் எதிர்த்திடும் வீர!
சொற்பொழி வெனுங்கலை செழிப்புறச் செறிவுற
மணிக்கணக் காக அணியணி யாக
அடுக்கடுக் காக அருவிதான் என்ன
மின்விசை யாகச் சொன்முறை பாய
மிடுக்குறப் பேசிடும் மேடை மன்ன!
எதுவா யினும்பொருள் தெளிவுற எழுதிப்
புதுவாழ் வெனுமிதழ் போற்புற நடத்தினை!
சட்ட மன்றப் பேரவை மேலவை
கிட்டுறும் இரண்டிலும் கிளர்பணி ஆற்றினை!
பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினில்
நல்வகை நோக்குடன் நயப்புற விளங்கினை!
நாடாள் மன்றக் கட்சித் தலைமையைப்
பீடார் வகையில் பேணிக் காத்தனை!
நேர்மை துணிவு சீர்மைப் பண்பால்
மக்களின் உள்ளம் மாண்புறக் கவர்ந்தனை!
நல்வாழ் வுத்துறை நாடுறும் அமைச்சராய்ப்
பல்லாற் றானும் பணிபுரி கின்றனை!
நின்றன் தொண்டுகள் சிறப்புற
என்றும் பல்லாண் டிசைக்குதும் யாமே.

சட்டமன்றத் துறையில் சாதனை கண்டவர்!

எம். பக்தவத்சலம் (முன்னாள் முதல்வர்)

மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களை நான் நேராகத் தெரிந்து கொண்டது சட்டமன்றத்தில்தான்.

சென்னை நகரில் சட்டமன்ற உறுப்பின ராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பின ராக அவர் பணியாற்றி வந்தார்.

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிக்கு முக்கிய இடம் உண்டு. என்னைப் பொறுத்தமட்டில் எதிர்க்கட்சியினர் எவ்வளவு பலமாக ஆளும் கட்சியைத் தாக்கிய போதிலும் அதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பதுண்டு.

நான் ஆளும் கட்சியிலிருந்த போதும் எதிர்க்கட்சியின் பலமான தாக்குதல் இருந்தது. அதைச் சமாளிப்பதில் என்னைப் போன்றவர் களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பளிப்பது என்று தான் நான் அதை நினைப்பதுண்டு.

எதிர்க் கட்சியில் வீற்றிருக்கின்ற சில உறுப்பினர்களின் தாக்குதல் சில சமயங்களில் தரக்குறைவாக இருக்கும்.

ஆனால் பேராசிரியர் அவர்கள் எந்த விஷயம் பற்றிச் சட்டமன்றத்தில் பேசினாலும் எத்தகைய குற்றத்தை அமைச்சர்களின் நிர்வாகத்தின் மீது சாட்டினாலும் அது உறுதி யாகவும், கண்ணியமாகவும் இருக்கும்.

நிர்வாகத்தை நடத்தி வந்த அமைச்சர் களைவிட நல்லதோர் எதிர்க்கட்சியில் பணி யாற்றிக் கொண்டிருந்த உறுப்பினர்கள்தாம் அதிகமாகத் தங்களைத் தயார் படுத்திக் கொள்வார்கள் என்பது என் எண்ணம்.

திரு. அன்பழகன் கல்லூரியில் பேராசிரி யராக இருந்ததோடு தி. மு. க. வில் முழு நம்பிக்கையோடு பணியாற்றி வந்தவர். ஆனால் அவரைப் போன்றவர்கள் முதன் முதலாகச் சட்டமன்றத்தில் நுழைந்ததும் அந்தப் பணியை ஆற்றுவதில் போதிய ஆற்றல் பெற்றவர்களாக இருந்ததைக் கண்டு நான் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்ததுண்டு. முன் அனுபவம் இல்லையென்றாலும் தலைசிறந்த பார்லிமெண்டேரியனாகவே விளங்கினர்.

சில விஷயங்களைப்பற்றிச் சட்ட மன்றத்தில் அவர் விமர்சனம் செய்கிறபோது அரசாங்கத் தையோ குறிப்பிட்ட அதிகாரிகளையோ மிகக் கடுமையாகவே தாக்குவார். அந்தப் பேச்சைக் கேட்கும் போது இதற்குச் சரியான விடை யளிக்க வேண்டுமே என்ற கவலை அமைச்சர் களுக்கு ஏற்படுவதுண்டு.

ஆனால் எனக்குப் பேராசிரியரின் பேச்சைப் பற்றி வருத்தமோ, கோபமோ எப்போதும் ஏற்பட்டதில்லை. அவரும் எவ்வளவு அழுத்த மாகக் கண்டித்துப் பேசினாலும் விவாதம் முடிந்த பிறகு அவரிடத்தில் எவ்விதமான கசப்பும் இருப்பதாகத் தென்படாது. நாங்கள்

ஒருவருக்கொருவர் சிறிதும் விட்டுக்கொடுக்கா தவர்கள் என்றாலும் சட்டமன்றத்திற்குள்ளே பல சமயங்களிலும், வெளியே எப்பொழுதும் சுமுகமாகவே பழகுவோம். அதுதான் அரசியல் நாகரிகம் என்பது.

நாடாளுமன்றத்தில் பேராசிரியர் பணி யாற்றிய போதும் மற்றக் கட்சி உறுப்பினர் களின் பாராட்டுதல்களைப் பெற்றவர். தி. மு. க. வின் உறுப்பினராகப் பணியாற்றிய போதும் மற்றக் கட்சி உறுப்பினர்களின் பாராட்டுதல் களைப் பெற்றவர் பேராசிரியர்.

இன்று அமைச்சராகப் பேராசிரியர் விளங்கு கிறார். எல்லோருடைய மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறார். கட்சியில் அழுத்தமான பிடிப்பு அவருக்கு உண்டு. எனினும் பல பிரச்சினைகளைக் கையாளும்போது விருப்பு—வெறுப்பின்றி உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாமல் சீரிய வகையில் பணி யாற்றி வருகிறார்.

எனவே கட்சியில் உள்ள சகாக்களின் மதிப்பைப் பெறுவதோடு வெளியே உள்ள மற்றவர்களின் பாராட்டுதல்களையும் பெறுகிறார்.

பொது நலனில் அக்கறை கொண்டு பாடுபடுவதில் தவறுதலுக்குச் சிறிதும் இடம் கொடுக்கமாட்டார் என்ற நம்பிக்கை அவரைப் பற்றிப் பரவலாக உண்டு.

எனவே பேராசிரியர் கட்சிக்கு உள்ளும் வெளியிலும், சட்டமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் பெருமதிப்புப் பெற்றவராகவே விளங்குகின்றார்.

அவருடைய பொன்விழா நடைபெறுவது பற்றி மகிழ்ச்சி. அவருக்கு என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

●

நன்மை பல நல்கி வரும் நாயகனே!

ஈரோட்டுப் பள்ளியில் பாடங்கற்று
ஈடற்ற அரசியல் மேதையென்று
பாராட்டுப் பலபெற்றுத் தமிழகத்தில்
புத்தாட்சி தோற்றுவித்துக் கடலோரம்
சீராட்டும் அலைமகளும் தாலாட்டச்
சிங்காரத் துயில்கொள்ளும் அண்ணாவின்
பேராற்றல் போல்வந்த மாண்புமிகு
பேராசிரியப் பெருமானே வருக! வருக!!

பகுத்தறிவுப் போர்முரசே! மடமைக்கங்குல்
போக்கிவிடும் மணிவிளக்கே! தி. மு. கழகம்
வகுத்திடும் திட்டங்களைக் கடைப்பிடித்து
வழிநடத்தி வருகின்ற கடமைவீரா!
நகைத்திடும் பகைவர்க்கும் முறுவல்காட்டி
நன்மைபல நல்கிவரும் நாயகனே!
புகைத்திடும் எரிமலைதான் நின்றன்செய்கை
புரட்சிக்கும் புதுமைக்கும் எடுத்துக்காட்டே!

— செங்கை நகரமன்றத்தின் சார்பில் படித்தளித்த
வரவேற்பு மடலின் ஒரு பகுதி. 18—11—71.

இனிய நல்ல நண்பர்

எம். கல்யாணசுந்தரம் (தமிழகப் பொதுவுடைமைக் கட்சிச் செயலாளர்)

அன்பழகன் அவர்களுக்கு 50ஆவது ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு சிறப்பு மலர் கொண்டு வருவது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பழகன் அவர்களை முதன் முதலில் நான் சந்தித்தது சட்டமன்றத்தில்தான். அதற்கு முன்பு அவர் தி. மு. கழகப் பெரும் தலைவர்களில் ஒருவர் என்பது தெரியுமே தவிர நான் நேரில் சந்தித்துப் பழகியதில்லை. 1957ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அவர் வெற்றிபெற்றுச் சட்ட மன்றத்திற்கு வந்த பின்னர்தான் அவருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்தச் சட்ட மன்றத்தில் தி. மு. கழகம் திரு. அண்ணதுரை அவர்களின் தலைமையில் 15 பேர்களைக் கொண்ட சட்ட மன்றக் கட்சியாக இருந்து வந்தது. தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு எடுத்த பின்னர் 15 பேர்கள் தாம் சட்டமன்றத்திற்கு வந்தனர். என்னுடைய கட்சி 4 பேர் கொண்டதாக இருந்தது.

பிரதான எதிர்க் கட்சியாக ஜனநாயகக் காங்கிரஸ் கட்சி வி.கே. இராமசாமி முதலியார் தலைமையில் இருந்தது.

1957ஆம் ஆண்டில் 15 பேர்களையே கொண்ட கட்சி 1967ஆம் ஆண்டு 138 இடங்களைப் பிடித்து ஆளும் கட்சியாக வந்தது. அந்தச் சமயத்தில் அன்பழகன் தில்லி நாடாளு மன்றத்திற்குச் சென்று விட்டார்.

இப்போது 1971-ஆம் ஆண்டு இடைத் தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சராகப் பணி புரிந்து வருகிறார். தமிழக அமைச்சரவைக்கு ஊக்கமும் விறுவிறுப்பும் அரசியல் பலமும் கொடுக்கக் கூடியவர்களில் அன்பழகன் முக்கியமானவர் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர்.

1957 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சட்ட மன்றத்திலும் வெளியே அரசியல் மேடைகளிலும் பழகுவதற்கு அடிக்கடி சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. பள்ளி ஆசிரியர்கள், என். ஜி. ஓக்கள், தொழிலாளர்கள் மாநாடுகளில் அவரோடு சேர்ந்து பேசும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தி. மு. கழகத்திற்கும் திராவிட நாடு கோரிக்கை, மொழிப் பிரச்சினை ஆகிய பல பிரச்சினைகளில் தெளிவான கருத்து வேற்றுமை உண்டு. இருப்பினும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவை வளர்க்க வேண்டும் என்று விரும்புகிறவர்களில் அன்பழகனும் ஒருவராவர். அண்ணதுரை அவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவு வளரவேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். தொழிலாளர்களின் பிரச்சினைகளிலும் அரசியல் பிரச்சினைகளிலும் கம்யூனிஸ்டுகளுக்குச் சிறந்த ஞானம் உண்டு என்பதை அண்ணதுரை அவர்கள் பாராட்டுவதுமின்றி உடன்பாடும் இருக்க வேண்டும் என்று விரும்பியவர். அவர் விரும்புகின்ற ஒரு சோஷலிச சமதர்ம சமுதாயத்தை உருவாக்கக் கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை அண்ணதுரை அவர்கள் உணர்ந்து இருந்தார்கள்.

இனியவர் :

இப்போது தி. மு. கழகத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே உடன்பாடும்

முதல்வர் கலைஞர் முகமும் அகமும் மலர வாழ்த்துகின்றார்

ஒத்துழைப்பும் கூட்டணி அமைக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளன. ஆனால் 1957ஆம் ஆண்டுக்கும் 1962ஆம் ஆண்டுக்கும் இடையில் கம்யூனிஸ்ட் கட்சியும் தி. மு. கழகமும் எதிர்க் கட்சிகளாக அமர்ந்து இருந்த போதிலும் எங்கள் இரு கட்சிகளுக்கும் இடையே கருத்து வேற்றுமை உண்டு. காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க் கட்சியாக இருப்பதில் ஒற்றுமை உண்டு. ஆனால் இவர்களுடைய 'வட நாடு வாழ்கிறது; தென்னாடு தேய்கிறது' என்ற கோஷத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டதில்லை. தேசிய ஒற்றுமை சம்பந்தமாகவும், அரசியல் அமைப்புச் சட்டத்தை எரித்தல் மொழிப்பிரச்சினை ஆகிய வற்றில் எங்களுக்கும் தி. மு. கழகத்திற்கும் இடையே சட்ட மன்றத்தில் மாறுபட்ட நிலை எழுந்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வளவு அரசியல் வேற்றுமைகள் இருந்தபோதிலும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் எதிர்க் கட்சியாகப் பணியாற்றி வந்திருக்கின்றோம். தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒருமித்த நிலைகள் எடுத்து இருக்கிறோம். அன்பழகன் அவர்கள் சிறந்த பேச்சாளர். தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு 1956ஆம் ஆண்டு சட்டம் இயற்றிய பின்னர் 1957ஆம் ஆண்டு முதல் சட்டமன்றத்தில் ஆங்கிலமும் தமிழும் சேர்ந்து வழங்கப்பட்டு வந்தது. தி. மு. கழகம் சட்டமன்றத்திற்குள் வருவதற்கும் சட்டமன்றத்தில் தமிழ் ஆட்சி மொழி யாவதற்கும் பொருத்தமாக இருந்தது. தமிழ் ஆட்சி மொழியாகும் வளர்ச்சிக்குத் தி. மு. க உறுப்பினர்களில் பலர் உதவி செய்து வந்திருக்கின்றனர். சில ஆங்கிலச் சொற்களுக் கேற்ற தமிழ்ச்சொல் என்ன என்று அன்று அமைச்சர்கள் அன்பழகனைக் கேட்பார்கள். அன்பழகன் இனிய பழக்க வழக்கம் உடைய வர். அரசியல் கருத்து மாறுபாட்டுக்கு அப்பால் பழகுவதற்கு நல்ல நண்பராவார். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கு நல்ல பணிபுரிய வாழ்த்துகிறோம்.

★

தமிழ்க்கலை வலவ !

பண்பெல்லாம் சேர்ந்து வந்தபெரியீர் ஆவீர் !
பல்கலையும் கற்றுணர்ந்த நல்லீர், வல்லீர் !
பழகு தமிழ் ஆசிரியப் பணியும் பூண்டீர்
அறப்பணியாம் ஆசிரியப் பணியும் செய்தீர் !
அதன் வழியாய் நாட்டுக்கு மொழிக்கு உழைத்தீர் !
பெரும் புலமை பெற்றிட்டீர் பின்னும் கற்றீர் !
பேராசிரியப் பணியில் பெருமை பெற்றீர் !
அறிஞர் என்றால் அண்ணாவைக் குறிப்பதுபோலே

தமிழ் என்றால் இனிமை என்று உணர்வதுபோலே
பேராசிரியர் என்றால் அன்பழகன் ஆனீர் !
அன்புக்கும் அழகுக்கும் இடையில் நின்றீர் !
அன்பினையும் அழகினையும் இணைத்தே விட்டீர் !
அன்பும் அழகும் சேர்ந்தால் ஆவது அமைதி
அமைதியைத்தான் தேடித் தேடி அலைந்தோம் அந்நாள்
அமைதி அன்பழகப் பெயரோய் வருக !
ஆன்ற தமிழ்க்கலை வலவ வருக ! வருக !!

—பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக வாசித்தளித்த வரவேற்பு இதழில் ஒரு பகுதி 5-11-'71

தமிழகத்திற்கு ஒரு வைர முடி!

பி.கே.மூக்கையாத் தேவர்,
(அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்)

அறிவாற்றல்!
தன்னடக்கம்!
துணிச்சல்!
கண்டிப்பு!

இத்தனை இனிய பண்புகளும் கொண்ட பேராசிரியர் அன்பழகனை 1957-ஆம் ஆண்டு முதன் முதலாக நான் சட்டமன்றத்தில் சந்தித்தேன். அதற்கு முன்னரே அவரைப்பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தாலும், அவர் சட்டமன்றத்திற்கு வந்த பின்னர்தான் அவருடைய அறிவாற்றலை, வாதாடும் திறனை அறிகின்ற வாய்ப்புக் கிடைத்தது.

அண்ணாவோடு அன்பழகன் முதன் முதலாகச் சட்டமன்றத்தில் அடியெடுத்து வைத்தார். சட்டமன்றத்திற்குப் புதிய கட்சியான தி. மு. கழகம் எப்படிச் செயல்படப் போகிறது என்று பல்வேறு தரப்பினரும் வியப்போடு எதிர்பார்த்தனர். ஆனால் எல்லோரது வியப்பிற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணம் 15 உறுப்பினர்களுடன் சட்டமன்றத்தில் அண்ணாவின் தலைமையில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்த தி. மு. கழகம் சக்திமிக்க ஜனநாயக எதிர்க்கட்சி என்பதை மெய்ப்பித்துக் காட்டியது. அண்ணா எந்தக் கருத்தையும் அழகு தமிழில் சுவைபட எடுத்துக் கூறுவார். ஆனால் பேராசிரியரோ இனிய தமிழில் எந்தக் கருத்தையும் ''வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப்'' புட்டுப் புட்டுக் கூறுவார். அன்பழகன் பேசுகிறார் என்றால் அன்றைக்கு அமைச்சர்களுக்குக் கூடக் கிலிதான். இவ்வளவு கண்டிப்பாக, துணிச்சலாக — பேசுகின்ற அன்பழகன் பழகுவதற்கு இனியவர். சட்டமன்றத் தி. மு. கழகத் துணைத் தலைவராக—அண்ணாவுக்குச் சரியான துணையாக — இருந்தார். இன்றைக்குக் கழக அரசுக்குச் சரியான துணையாக நிற்கிறார்.

நியாயத்திற்கு நல்ல தீர்ப்பு!

எந்தச் சிபாரிசையும் அவரிடம் கூறுவதற்கு முன்னர் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துதான் சொல்ல வேண்டும். சொல்லப்படுகின்ற சிபாரிசின் எல்லா அம்சங்களையும் நாமே நன்கு பரிசீலித்து விசாரித்து ஏற்ற சிபாரிசைத்தான் சொல்கிறோம் என்பதை உறுதி செய்து கொண்டுதான் சொல்ல வேண்டும். நாம் சொல்கின்ற சிபாரிசில் நியாயம் இருந்தால் உடனடியாக நியாயத் தீர்ப்புக் கிடைக்கும்; இல்லையென்றால் சிபாரிசினைக் கூறுபவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் ''இல்லை'' என்ற பதில்தான் கிடைக்கும்.

குடும்ப நலத்திட்டம் எத்தனையோ ஆண்டுகளாகச் செயல்படத்தான் செய்கின்றது. ஆனால் குடும்பநலத்திட்டப் பிரசாரம் என்றால் நேற்றுவரை மக்கள் முகம் சுளித்தனர். இன்றைக்கு அந்தப் பிரச்சாரம் உத்வேகமும் மக்களின் உற்சாகத்தையும் பெற்று இருக்

கிறது. எளிய முறையில்—கிராமத்து மக்கள் விரும்பிக் கேட்கும் முறையில்—அன்பழகனின் குடும்பநலத்திட்டப் பிரச்சாரம் அமைந்து இருப்பதாக மதுரை மாவட்ட மக்கள் பலர் கூறி னர். எந்தக் கூட்டமாக இருந்தாலும் அவர் குடும்ப நலத்திட்டம் பற்றிக் கூருமல் இருப்ப தில்லே. தாம் ஏற்று இருக்கின்ற துறை எவ் வளவு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதில் அவர் எவ்வளவு கண்ணும் கருத்து மாக இருக்கின்ருர் என்பதற்கு இது ஒரு சான்று.

சுயமரியாதை மனம்:

அன்பழகன் சுயமரியாதை இயக்கத்தில் தொண்டராகித் தி. மு. கழகத்தில் முன்னணித் தலேவர்களில் ஒருவராக ஏற்றம் கண்டவர். இன்றைக்கும் அவருடைய சொற்பொழிவுகளில் சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் மணம் பரப்புவதைக் காணலாம். சுயமரியாதை இயக் கக் கருத்துக்களோடு மக்கள் பெருக்கக் கட்டுப் பாட்டுக் கருத்துக்களும் இணைந்துவரும்போது குடும்பநலத் திட்டத்திற்குப் புதிய தத்துவங் கள் பிறக்கின்றன.

தன்னடக்கம்:

மக்கள் நல்வாழ்வுத் துறையை ஏற்ற அன்பழகன் கழகத்திற்கு ஒரு வைரமுடியைச் சூட்டியிருக்கிருர். ஏழத்தாழ 25 ஆண்டுகளாக நானும் சட்டமன்ற உறுப்பினராக, நாடாளு மன்ற உறுப்பினராக, இருந்து வருகிறேன். ஒவ்வோர் ஆண்டும் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு நடைபெற்றதும் வழக்கு மன்றங்களுக்கு வழக்குகள் செல்லும். ஏன்? சுப்ரீம் கோர்ட் வரை கூட வழக்குகள் சென்றிருக்கின்றன. ஆனல் அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர், வழக்கம் போல் இந்த ஆண்டும் மருத்துவக் கல்லூரி களுக்கு மாணவர்களேத் தேர்ந்தெடுக்கத் தேர்வு நடைபெறத்தான் செய்தது. ஆனல் ''எனக்குத் தகுதியிருந்தும் என்னேத் தேர்ந் தெடுக்கவில்லேயே'' என்று எந்த ஒரு மாண வரும் நீதிமன்றத்தின் படிக்கட்டுகளிலே ஏறி நீதி கோரி நிற்கவில்லே. மருந்துக்குக்கூட ஒரு வழக்கும் வரவில்லே. ஆனல் பிற மாநிலங்களில் இத்தகைய வழக்குகள் வந்தன.

பேராசிரியரின் ஆட்சித் திறமைக்கு, அறி வாற்றலுக்கு, கண்டிப்புக்கு, துணிச்சலுக்கு இது ஒன்றே சிறந்த உதாரணமாகும். இவ் வளவு பெரிய சாதனே கண்ட பேராசிரியர் அதனே ஏனே உலகத்துக்கு உரத்த குரலில் கூற மறுத்துவிட்டார். ஒருவேளே இது அவருடைய தன்னடக்கத்திற்குச் சான்ருக இருக்கக் கூடும்.

தமிழகத்திற்கு ஒரு வைர முடி!

பி.கே. மூக்கையாத் தேவர்,
(அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்)

அறிவாற்றல்!
தன்னடக்கம்!
துணிச்சல்!
கண்டிப்பு!

இத்தனை இனிய பண்புகளும் கொண்ட பேராசிரியர் அன்பழகனை 1957-ஆம் ஆண்டு முதன் முதலாக நான் சட்டமன்றத்தில் சந்தித்தேன். அதற்கு முன்னரே அவரைப்பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தாலும், அவர் சட்டமன்றத்திற்கு வந்த பின்னர்தான் அவருடைய அறிவாற்றலை, வாதாடும் திறனை அறிகின்ற வாய்ப்புக் கிடைத்தது.

அண்ணாவோடு அன்பழகன் முதன் முதலாகச் சட்டமன்றத்தில் அடியெடுத்து வைத்தார். சட்டமன்றத்திற்குப் புதிய கட்சியான தி. மு. கழகம் எப்படிச் செயல்படப் போகிறது என்று பல்வேறு தரப்பினரும் வியப்போடு எதிர்பார்த்தனர். ஆனால் எல்லோரது வியப்பிற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணம் 15 உறுப்பினர்களுடன் சட்டமன்றத்தில் அண்ணாவின் தலைமையில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்த தி. மு. கழகம் சக்திமிக்க ஜனநாயக எதிர்க்கட்சி என்பதை மெய்ப்பித்துக் காட்டியது. அண்ணா எந்தக் கருத்தையும் அழகு தமிழில் சுவைபட எடுத்துக் கூறுவார். ஆனால் பேராசிரியரோ இனிய தமிழில் எந்தக் கருத்தையும் ''வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப்'' புட்டுப் புட்டுக் கூறுவார். அன்பழகன் பேசுகிறார் என்றால் அன்றைக்கு அமைச்சர்களுக்குக் கூடக் கிலிதான். இவ்வளவு கண்டிப்பாக, துணிச்சலாக — பேசுகின்ற அன்பழகன் பழகுவதற்கு இனியவர். சட்டமன்றத் தி. மு. கழகத் துணைத் தலைவராக—அண்ணாவுக்குச் சரியான துணையாக — இருந்தார். இன்றைக்குக் கழக அரசுக்குச் சரியான துணையாக நிற்கிறார்.

நியாயத்திற்கு நல்ல தீர்ப்பு!

எந்தச் சிபாரிசையும் அவரிடம் கூறுவதற்கு முன்னர் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துதான் சொல்ல வேண்டும். சொல்லப்படுகின்ற சிபாரிசின் எல்லா அம்சங்களையும் நாமே நன்கு பரிசீலித்து விசாரித்து ஏற்ற சிபாரிசைத்தான் சொல்கிறோம் என்பதை உறுதி செய்து கொண்டுதான் சொல்ல வேண்டும். நாம் சொல்கின்ற சிபாரிசில் நியாயம் இருந்தால் உடனடியாக நியாயத் தீர்ப்புக் கிடைக்கும்; இல்லையென்றால் சிபாரிசினைக் கூறுபவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் ''இல்லை'' என்ற பதில்தான் கிடைக்கும்.

குடும்ப நலத்திட்டம் எத்தனையோ ஆண்டுகளாகச் செயல்படத்தான் செய்கின்றது. ஆனால் குடும்பநலத்திட்டப் பிரசாரம் என்றால் நேற்றுவரை மக்கள் முகம் சுளித்தனர். இன்றைக்கு அந்தப் பிரச்சாரம் உத்வேகமும் மக்களின் உற்சாகத்தையும் பெற்று இருக்

கிறது. எளிய முறையில்—கிராமத்து மக்கள் விரும்பிக் கேட்கும் முறையில்—அன்பழகனின் குடும்பநலத்திட்டப் பிரச்சாரம் அமைந்து இருப்பதாக மதுரை மாவட்ட மக்கள் பலர் கூறினர். எந்தக் கூட்டமாக இருந்தாலும் அவர் குடும்ப நலத்திட்டம் பற்றிக் கூருமல் இருப்பதில்லை. தாம் ஏற்று இருக்கின்ற துறை எவ்வளவு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதில் அவர் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கின்ருர் என்பதற்கு இது ஒரு சான்று.

சுயமரியாதை மனம்:

அன்பழகன் சுயமரியாதை இயக்கத்தில் தொண்டராகித் தி. மு. கழகத்தில் முன்னணித் தலைவர்களில் ஒருவராக ஏற்றம் கண்டவர். இன்றைக்கும் அவருடைய சொற்பொழிவுகளில் சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் மணம் பரப்புவதைக் காணலாம். சுயமரியாதை இயக்கக் கருத்துக்களோடு மக்கள் பெருக்கக் கட்டுப்பாட்டுக் கருத்துக்களும் இணைந்துவரும்போது குடும்பநலத் திட்டத்திற்குப் புதிய தத்துவங்கள் பிறக்கின்றன.

தன்னடக்கம்:

மக்கள் நல்வாழ்வுத் துறையை ஏற்ற அன்பழகன் கழகத்திற்கு ஒரு வைரமுடியைச் சூட்டியிருக்கிருர். ஏழத்தாழ 25 ஆண்டுகளாக நானும் சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக, இருந்து வருகிறேன். ஒவ்வோர் ஆண்டும் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு நடைபெற்றதும் வழக்கு மன்றங்களுக்கு வழக்குகள் செல்லும். ஏன்? சுப்ரீம் கோர்ட் வரை கூட வழக்குகள் சென்றிருக்கின்றன. ஆனல் அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர், வழக்கம் போல் இந்த ஆண்டும் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு நடைபெறத்தான் செய்தது. ஆனல் "எனக்குத் தகுதியிருந்தும் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லையே" என்று எந்த ஒரு மாணவரும் நீதிமன்றத்தின் படிக்கட்டுகளிலே ஏறி நீதி கோரி நிற்கவில்லை. மருந்துக்குக்கூட ஒரு வழக்கும் வரவில்லை. ஆனல் பிற மாநிலங்களில் இத்தகைய வழக்குகள் வந்தன.

பேராசிரியரின் ஆட்சித் திறமைக்கு, அறிவாற்றலுக்கு, கண்டிப்புக்கு, துணிச்சலுக்கு இது ஒன்றே சிறந்த உதாரணமாகும். இவ்வளவு பெரிய சாதனை கண்ட பேராசிரியர் அதனை ஏனே உலகத்துக்கு உரத்த குரலில் கூற மறுத்துவிட்டார். ஒருவேளை இது அவருடைய தன்னடக்கத்திற்குச் சான்ருக இருக்கக் கூடும்.

அஞ்சா நெஞ்சன்!

திருப்பூர் மொய்தீன்,
சட்டமன்ற முஸ்லிம் லீக் கட்சித் தலைவர்.

மாண்புமிகு அமைச்சர் அன்பழகன் இளமைப் பருவத்திலிருந்து—அதாவது பள்ளிப் பருவத்திலிருந்து—எனக்குத் தெரிந்தவராவார். அதுமட்டுமல்ல; அவரது அன்புத்தந்தையும் என் அரசியல் தோழராவார். அவர் அந்தக் காலத்திலேயே தமிழர் இயக்கத்திலும், திராவிடர் நலத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் நீண்ட ஈடுபாடு உடையவர்.

தாம் மட்டும் பணிக்கு அர்ப்பணம் ஆனார் என்பதைவிட, தம் குடும்பத்தையே தமிழர் நலத்துறைக்கு அர்ப்பணித்த பெருமகன் ஆவர். அவருடைய விடா முயற்சியும், ஆர்வமும், ஆவலும் தமிழர்களுடைய நலனுக்குப் பெரிதும் பயன்பட்டு இருக்கின்றன என்பதை நான் மிக நன்கறிவேன். தம் எண்ணத்தையும் உணர்ச்சியையும் தம் அன்பு மக்களுக்கு ஊட்டி வளர்த்த பெருமையும் அப்பெருமகனையே சாரும்.

திறந்த உள்ளம் :-

பேராசிரியர் அன்பழகனுடைய வளர்ச்சி அவருடைய விடாமுயற்சி என்றாலும் அதற்கு முற்றிலும் துணை நின்றவர் அவருடைய அன்புத் தந்தையாவார். அன்பழகனின் பேச்சும் எழுத்தும் மிக விறுவிறுப்பானவை. யாருக்காகவும் தம் கருத்தை ஒளித்துப் பழக்கமில்லாதவர்.

தமக்குத் தோன்றிய கருத்தை வெளிப்படுத்துவதில் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். தி. மு. கழகத்தின் முன்னணி வீரர்களில் நெஞ்சழுத்தமிக்க ஒரு தொண்டர்—தலைவர்—அமைச்சர் ஆவார்.

அவருடைய 50ஆவது ஆண்டு தொடங்கும் இந்த நாளை நாணயம் கொண்ட தமிழர்கள் திருநாளாகக் கருதுவார்கள். அவருடைய பேச்சு, எழுத்து, இடைவிடா உழைப்பு பன்னெடுங்காலம் தமிழர்களுக்குப் பயன்படும் என்பது அவரை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அறிந்த எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அவர் இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு, பல நலனும் பெற்று வாழ அவரின் பிறந்த நாளின் பெயரால் என் அன்பு கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்விழா நாயகர் வாழ்க

கவிஞர் ஆனந்தம்

தேன்என இனிக்கும் பேச்சு
தென்னவர் போற்றும் மேன்மை
கூன்எதும் இல்லாக் கொள்கை
கூரிய அறிவுப் பாங்காம்
ஊன்உயிர் தமிழுக் காக
உழைத்திடும் உயர்ந்த உள்ளம்
தான்எனக் கொண்டார் எங்கள்
தஞ்சையின் மண்ணில் பூத்தார்.

அன்புடன் அழகும் சேரும்
அருந்தமிழ்ப் பெயரைக் கொண்டு
பண்புடன் தொண்டு செய்யும்
பாவலர் இவர்தான்; காஞ்சி
அண்ணனின் கழகப் பாதை
ஆர்வமாய் நாடி வந்தே
எண்ணிலா இன்னல் ஏற்றல்
இன்பமாய் எண்ணி வாழ்ந்தார்.

எத்துயர் வந்த போதும்
இம்மியும் கலங்கா ராகிச்
சித்திரை நிலவாய்த் தோன்றும்
செம்மையின் உருவம்; முன்னர்
எத்தனை களங்கள் நாட்டில்
எழுந்தன! அவற்றில் எல்லாம்
மெத்தவும் மகிழ்ச்சி கொண்டிம்
மெல்லிய உடலார் சென்றார்.

தூயதோர் கொள்கை காக்கத்
துடிப்புடன் முனையும் வீரர்
தீயவர் சூழ்ச்சி யெல்லாம்
தெருவிலே வீழ்த்தி வென்று
தாயகம் காத்து நிற்கும்
தகவுடைக் கலைஞர் போற்றும்
நாயகர் வாழ்க; நாட்டின்
நலத்துறை அமைச்சர் வாழ்க!

OUR BELOVED PROFESSOR

A. P. JANARTHANAM M.A., M.L.C.

The Dravidian Renaissance movement, for the past sixty years, has highlighted the superiority of the Dravidian culture, civilisation and languages. The great historic role played by the Dravidians from Mohenja-Daro to Thanjavur has been acknowledged by eminent historians. From 1916, great patriots like Sir Thyagaraya, Dr. T. M. Nair and Dr. C. Natesan fought for the rights of the great masses of the Depressed and Backward classes. 'Justice to all' was their motto. Periyar Ramasami, through his self respect movement, revolutionised thought and sought to remove the strangle-hold of superstition and caste. Anna was the finest flower of Dravidian genius. He guided, moulded and encouraged a great band of heroes who are at the helm of Tamilnadu today.

Prof. Anbazhagan's father was a staunch justicite. He took his son to Periyar in 19'5. Reading 'Viduthalai' and 'Kudi Arasu', learning from his father the exploits of the justicites and fiery self-respect revolutionaries, Anbazhagan was very much impressed. In 1942, at the justice party conference held in Chidambaram, he had the pleasure of listening to great orators like Alagirisami and Anna. Every week he eagerly read 'Dravida nadu' which stood for a Dravidian Renaissance.

In the Annamalai University, the debating societies provided him great opportunities to improve his debating skill. Against heavy odds, despite the stiff opposition and obstruction by Congress students, he presented the justice case. In the later stages, Navalar Nedunchezhian came to his support.

Anna, at their invitation, stayed in the campus for 3 days. He addressed the students on 'The Riverside'. Brilliant ly analysing the growth of civilisations on the river-sides, he contrasted the Gangetic Valley Civilisation of the Aryans with the Dravidian civilisation of the Indus Valley and the Cauvery. The young comrades asked Annna why he should champion the Justice party which was dominated by the Zamindars and the big landholders. Anna assured them that if they all backed him, he would convert the Justice party into a common man's organisation. The Kumbakonam Students' Conference, the Erode Camps, the Tiruvarur Students' organisation, were milestones in the Dravidian Students' movement. Anbazhagan took active part in the whir wind campaigns and his speeches made a great mark.

In 1944, Anbazhagan joined the Tamil department in the Pachaiappas College. He resigned his post in 1957 and jumped into active politics.

From 1949, Professor Anbazhagan became a lieutenant of Anna in the D.M.K. carrying the D.M.K. message to every nook and corner of Tamilnadu, he galvanised the youth. In his magazine, 'New Life',

he spread the ideals of Social Reform, Socialism and Renaissance of Tamil culture.

From 1957 to 1967, both in the Assembly and the Council, he was a keen debater and forceful speaker. From 1967 to 1970, he led the D.M.K. group in the Lok Sabha. He attended the Commonwealth Parliamentary Association Conference, as a delegate from Parliament of India held in Bahamas in 1968. He touched the United States and met our revered late Anna (his colleagues Sezhian & Rajaram M.P.s) who had gone there for treatment of cancer.

He took part in the Anti-Hindi and the Anti-Price rise agitations and courted imprisonment.

In 1971, he came back to state politics. He is now Health Minister in Dr. Karunanithi's cabinet. He is the guiding spirit behind the Family Planning drive.

The death of his wife, Mrs. Vetrichelvi, in 1969, was deeply mourned by all. She played an active part in enlisting the support of the women to the movement.

Even now, in spite of all the years of hectic campaigning and touring, he looks fresh and young. He does not mince words. His approach to the problems is straight, without fear or favour; he has held strong opinions about men and matters. An able lieutenant of Anna, a live-wire in Dr. Karunanithi's Cabinet, a niagaral orator in Tamil, dashing, dynamic, he will certainly enhance our reputation. I wish him all success!!

Palanivel Rajan, B.Sc., B.L., M.L.A

PALAYAM HOUSE,
MADURAI-2.

30—3—72

offer my respectful felicitations to Prof. Anbhazhagan on his fiftieth birthday. In dedicating himself to the Self-Respect movement he has forsaken a brilliant and prospective academic career. He is a rare example of an intellectual at home in the company of the masses. I wish him long years of fruitful public life.

(Sd.) **Palanivel Rajan.**

குடியரசுத் தலைவருடன் கொள்கையரசுத் தலைவர்கள்!

இந்தியக் குடியரசுத் தலைவருடன் மேதகு ஆளுநர், டாக்டர் கலைஞர், பேராசிரியர்

நேர்மை நிமிர்ந்துதானே நிற்கும்!

யான் கண்ட பேராசிரியர்

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்
தமிழ்த் துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக் கழகம்

பேராசிரியர் க. அன்பழகனாரிடம் சென்ற 34 ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் பேறு பெற்றவன் நான். நுண்மாண் நுழை புலமும் எதனையும் கூர்ந்து அறியும் மதியும் பெற்றவர் அவர் என்பதைப் பலரும் அறிவர். கூர்த்த மதியும் நுழைபுலமும் மனிதனுக்கு மிக இன்றியமையாத தேவைகள்தாம். ஆனால் இவற்றை மட்டும் பெற்றிருப்பதால் மனிதன் உயர்ந்து விடுவதில்லை. அதனாலேயே போலும் அறிவு, கல்வி என்பவற்றின் சிறப்பை மிக வலுவாக அறிவுறுத்திய வள்ளுவப் பெருந்தகை முக்கியமான இடம் வந்ததும் இவை இரண்டையும் கைவிட்டு விடுகிறார்.

உலகம் யாரால் நிலைபெற்று வாழ்கிறது? என்ற வினாவைச் சங்கப் புலவர்களும், திருவள்ளுவனாரும் எழுப்பியுள்ளனர்; அவ்வினாவிற்கு விடையுந் தந்துள்ளனர். இதில் வியப்பு என்னையெனில் இருவரும் ஒரே மாதிரியான விடையையே தந்து சென்றனர். இலக்கியப் புலவன் ஒருவனும், நீதிநூல் பாடிய புலவன் ஒருவனும் ஒரே வினாவைக் கேட்பதே விந்தையானது. அதைவிட விந்தையானது இருவரும் ஒரேமாதிரி விடையைத் தருவதுமாகும். வினாவை எழுப்பியவர்களுள் ஒருவன் அரசன்; மற்றவன் துணி நெய்யும் தொழிலுடையவன். அரசனின் கல்வியும் நெசவாளனின் கல்வியும் ஒன்றாக இருக்கலாம். எனினும் உலகை ஆளும் அரசனுடைய அனுபவ அறிவு பரந்துபட்டதாகவே இருக்கும். தன் வீட்டிலமர்ந்து சிந்தனையை ஓட்டிப் பெருநூல் செய்யும் நீதி நூற்புலவன் அறிவு ஆழமுடையதாகவே இருக்கும்.

பரந்துபட்ட அறிவுடையவன் தன் வாணாள் முழுவதும் ஆய்ந்து கண்ட பேருண்மையும், வீட்டிலிருந்து சிந்தனையை ஓட்டிப் புலவன் கண்ட பேருண்மையும் ஒன்றாக இருத்தல் வியப்பன்றோ? கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற பாண்டியமன்னன் இவ்வுலகம் ஏன் நிலைபெற்றிருக்கிறது? என்ற வினாவை எழுப்புகிறான். ஒரு சிலர் இருப்பதனால்தான் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறது என்ற முடிவுக்கு வருகிறான். யார் இந்த ஒரு சிலர்? ''இந்திரனுடைய அமிழ்தமே கிடைப்பதாயினும் பிறருக்குத் தாராமல் தாம் உண்ண மாட்டார்கள்; பிறர் மாட்டு வெறுப்புக் கொள்ள மாட்டார்கள்; பிறர் கண்டு அஞ்சும் துன்பத்தைக் கண்டு தாம் அஞ்சமாட்டார்கள்; புகழ் வருவதாயின் உயிரைக் கொடுத்தேனும் பெறுவர்; பழி வருவதாயின் உலக முழுவதும் கிடைப்பதாயினும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்; சோம்பல் அற்றவர்கள்; எத்தகைய பெருமுயற்சியையும் தமக்கெனச் செய்யாமல் பிறருக்காகவே உழைப்பவர்கள் சிலர் இவ்வுலகில் உள்ள காரணத்தால்தான் இவ்வுலகம் நிலை

பெற்றிருக்கிறது'' என்ற பொருளில்

உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

அப் புறப்பாடல் அமைந்துள்ளது. இனி இதே வினாவைக் கேட்கத் தொடங்கிய வள்ளுவர் வினாவை மனத்துட் கொண்டு விடையை மட்டும் கூறுகிறார். ''பண்புடையார்ப்பட்டு உண்டு உலகம் அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்'' என்ற குறளில் புறநானூற்றுப் புலவன் ஒரு நீண்ட பாடல் மூலம் விளக்கியதைப் ''பண்புடையார்'' என்ற ஒரு சொல்லால் குறிக்கிறது கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்.

பேராசிரியருடன் நீண்டநாள் பழகியவர்கட்கு அவருடைய பண்புடைமை நன்கு விளங்கும். தம் கருத்துடன் மாறுபட்டு நிற்பவர்களையும் அன்பழகனார் அன்புடன் ஏற்றுக் கொள்வதைப் பலரும் அறிவர். பண்புடைமையாவது யாது? பிறரையும் அவர்தம் கொள்கைகளையும் மதித்து அவர்கட்கும் இப்பரந்த உலகில் இடம் உண்டு என்று கருதுவதேயாகும். இவ்வாறு கூறுவதால் பிறருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற தேவையில்லை. பிறரை மதிப்பதற்கும், அவர்கள் மாட்டு அன்பு செலுத்துவதற்கும் இதற்கும் தொடர்பில்லை. யாரையும் மதித்து அன்பு செய்வது என்பது பண்புடைமையாகும். அறிவு, கல்வி என்பவற்றை நிரம்பப் பெற்றவர்கள் இவ்வுலகிடை நிரம்ப உண்டு. அவர்கள் இவ்வுலகிற்குப் பல பயன்களை விளைவித்துள்ளனர். விஞ்ஞானம் கண்டு தந்த புதுமைகள் எல்லாம் இதன்பாற்படும். ஆனால் இவற்றால் முற்றிலும் நலமே விளைந்ததா என்று கூறமுடியாது. பண்பாடு என்ற ஒன்று மட்டும் பிறருக்கு நலமே விளைவிக்கும் இயல்பினது.

எனவே அறிவுடையார், கல்வியுடையார், விஞ்ஞானிகள் என்பவர்களைக் காட்டிலும் பண்பாளர்களே இற்றை உலகிற்கு மிகுதியுந்தேவை. சிறந்த பண்பாளராகிய பேராசிரியர் இன்னும் ஒரு நூற்றாண்டிருந்து நாட்டிற்கு நலஞ்செய்ய இறைவன் திருவருள் பாலிப்பானாக.

தனிப்பெரும் தலைமை பெற்றுச் சிறக்க!

முத்து இராசாக்கண்ணனூர்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு உயர்திரு. க. அன்பழகனூர் அவர்கள்தம் சீரிய நல் இயல்புகளை அறியாத தமிழர் இருக்கமாட்டார். அமைச்சர் பெருமகனார் அவர்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர்கள் பயின்ற நாள்தொட்டு அறிந்துவரும் பேறு எனக்குண்டு. அரிய மாணவப் பருவம்தொட்டு அமைச்சராகப் பணிபுரியும் இந்நாள் வரை தூய நல் வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தி வரும் இவ்வின்பத் தமிழ்ச் செம்மல் மக்கள் நல்வாழ்வு இன்னது என்பதனையும் அதனை எவ்வாறு ஆக்கி அமைத்தல் வேண்டுமென்பதனையும் அவ்வாறே ஆக்கி அமைக்கும் திறத்தினையும் பெற்றவர் ஆவார்கள்.

அறியாமைக்கு வித்திட்டு அந்நெறியால் அறிவு நலம் அறவே அழிதற்குரிய பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் களைந்தெறிந்து தன்னிகரற்றுத் தமிழ்ச் சமுதாயம் தலைதூக்கி நடமாடுதற்கெனத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட ஆருயிர் அண்ணா அவர்களுடன் நெஞ்சாரக் கலந்து செயலாற்றி வரும் அரிய தியாகத் தொண்டர்களுள் அமைச்சர் பெருமகனாரும் சிறந்த ஒருவர் ஆவர்.

வாய்மையே வாழ்க்கை, தூய்மையே அதன் உயிர்நாடி, பொய்மையே அதன் கொடும்பகை எனும் சொள்கைகளைத் தம்முன் நிறுத்தி அப்பழுக்கற்ற அரசியல் அறிஞராகத் திகழ்பவரும் மாண்புமிகு அமைச்சர் க. அன்பழகனார் ஆவார்கள்.

எவரோடும், எக்காலத்தும் கலகலவெனக் கலந்துபேசி, அவர்தம் நெஞ்சத்திலோடும் நினைவுகளை எளிதில் புரிந்துகொண்டு, அவற்றுள் நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்படும் நல்லனவற்றை உடனடியாகச் செயற்படுத்தும் சீரிய செந்தமிழ்ச் செம்மல் அமைச்சர் அவர்கள் ஆவர்.

இளவேனிற் காலத்தே முழு நிலவு நிறைந்த வேளையிலே தென்னம் பொதியலினின்றும் சிலுசிலு என வீசும் இனிய தென்றல் காற்றை ஒத்த இவர்தம் விழுமிய பேச்சு, தமிழக மக்களுக்கு அரிய விருந்தாகித் தமிழர்களாகிய அவர்களையும் உணரவைத்துத் தமிழரே தம்மை ஆளும் தமிழக ஆட்சியையும் கைகூட்டி வைத்தது என்றால் இவர்களின் அறிவு நலம்தோய்ந்த இன்பப் பேச்சின் சிறப்பினை எடுத்து இயம்புதல் எளிதாகாது.

தமிழகத்தில் வறுமையின் கொடுமை இன்னும் தணியவில்லை. தம்மொழியையே பாராட்டிக்கொள்ள அறியாத பரிதாபத்திற்குரிய மக்களின் எண்ணிக்கையும் குறையவில்லை. கல்லூரிகளிலும் சிறப்பாகப் பல்கலைக் கழகங்களிலும் இன்னும் தமிழ் நடைமுறையில் பயன்படுவதற்கு உரியதாக ஆக்கப்பெறவில்லை. வள்ளுவர் வகுத்துக் கூறிய வாழ்க்கைக்கு உரியனவாக அமைந்த பண்புகள் விரிவாகப் பரவவேண்டிய இன்றியமையாத நிலைமையும் இருக்கிறது. பொன்விழாத் தலைவராகத் திகழும் அருமை அண்ணல் அன்பழகனார் அவர்களின் தொண்டின் மேன்மை மேலும் மேலும் இத் தமிழகத்திற்கு நல் ஒளியாய்ப் - பேராற்றலாய்ச் - சீரிய வழிகாட்டியாய்த் - திகழும் என்பதில் ஐயமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இமயமென உயர்ந்து தமிழெனச் சிறந்து தனிப்பெரும் தலைமை நலம்பல பெற்றுச் சிறப்பார்களாக. ●

நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்

வி. கே. இராமசாமி முதலியார்

"நின்றசொல்லர் நீடுதோன்றினியர்" என்று ஓர் அழகான தொடர் நற்றிணையில் உண்டு. அந்த அழகிய தொடருக்கு இலக்கிய மாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்ற பெருமக்களில் மாண்புமிகு. க. அன்பழகனும் ஒருவர். எனது பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய அன்னருக்குப் பொன்விழாமலர் வெளியிடுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராசிரியர் அன்பழகன் அவர்களோடு எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அவருடைய பொதுவாழ்க்கைப் பணியைத் தூர இருந்தும், நெருங்கி நின்றும் நான் கவனித்து வந்திருக்கிறேன். அவருடைய பொது வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் ஆற்றி வந்த பணிகளையும், மேற்கொண்டிருந்த கடமை உணர்ச்சியையும் நான் நன்கு அறிவேன்.

அரசியல்துறையில் ஈடுபடுகிறவர்கள் சிலர் வல்லவராக இருப்பர்; சிலர் நல்லவராக இருப்பர். ஒரே சமயத்தில் நல்லவராகவும், வல்லவராகவும் இருப்பது அரிது. பேராசிரியர் அன்பழகன் பண்பால் நல்லவராகவும், வினையாற்றலால் வல்லவராகவும் திகழ்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்க நேரும்போதெல்லாம் அன்பழகனார் அவர்களைத் தேடி அவருடைய புரசைப்பாக்கம் இல்லத்திற்கு வந்து விவாதிப்பது உண்டு. அண்ணாவின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய முக்கியமான நண்பர்களில் அன்பழகனாரும் ஒருவர்.

தம்முடைய வாழ்வின் பெரும்பகுதியைக் கல்வித் துறையில் செலவிட்டு, பழுத்த அனுபவமும், பண்பட்ட புலமையும் உடையவராக அன்பழகன் திகழ்கிறார். அவருடைய நெஞ்சம் தமிழர் வாழ்வையும் தமிழர் நலனையுமே நாடுகிற பேரருள் நெஞ்சமாகும்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேன்
மீக்கூறும் மன்னன் நிலம்."

என்பது வள்ளுவர் வாக்கு. காட்சிக்கெளியவராயும், மறந்தும் சுடுசொல் பேசாத மாண்பினராயும் அன்பழகன் திகழ்வதாலேயே தமிழ் கூறும் நல்லுலகம் அவரைத் தன் இதயத்தில் ஏற்றிப் போற்றுகிறது.

பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் பன்முக மேதைமை (Multi-faced Genius.) கொண்டவர். சிறந்த ஆசிரியர். நல்ல அரசியல்வாதி—பண்பட்ட பேச்சாளர்—திறம் பெற்ற பத்திரிகையாளர்—ஆற்றல் மிக்க எழுத்தாளர்—என்று பலபடப் பாராட்டிக் கூறும் அளவுக்கு அவருடைய மேதைமை சகலவிதமான துறைகளிலும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதை நாம் காண்கிறோம். பட்டை தீட்டப்பட்ட முழு வைரம் கண்ணைப் பறிக்கும் பேரொளி



" இக்காலப் பிசிராந்தையார் "

" பல்லாண்டு பாடுவோம் "



" என்றும் இளைஞர் "



" நமது காலத்து நக்கீரர் "

19—12—1971



தெளிந்த சிந்தனை; தேர்ந்த புலமை!

செந்தமிழ் ஆட்சியின் மலர்ச்சி!
செயல் வீரர் மகிழ்ச்சி!

யோடு விட்டுவிட்டு மின்னுவது போல அன்பழகனாரின் திறமையும் அவர் ஈடுபடுகிற ஒவ்வொரு துறையிலும் சிறந்து மிளிர்கிறது. தில்லி நாடாளுமன்றத்தில் அவர் உறுப்பின ராக இருந்தபோது, அவர் நிகழ்த்திய கருத்துவளம் மிக்க சொற்பொழிவுகளை அறியா தார் யார்? கூர்த்த மதியும், பரந்த கண்ணோட்டமும், எந்தப் பிரச்சினையையும் மனிதாபிமான நோக்கில் அணுகும் திறமும், எல்லாவற்றிற்கும் மேலாக அவரது அசைக்க முடியாத, ஆணித்தரமான விவாதமும் நாடாளு மன்றத்தையே தன்பக்கம் ஈர்த்தது எனலாம். அன்னாருடைய இப்பேராற்றல் தமிழகத்திற்கு முழுவதும் பயன்படுகின்ற வாய்ப்பு அவர் தமிழக அமைச்சர் ஆனதன் மூலம் நமக்கெல் லாம் கிட்டியது நாம் பெற்ற பெரும் பேறே யாகும்.

அன்பழகனார் எழுதியிருக்கும் சில நூல்களை எப்பொழுதோ காணுகிற வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டதுண்டு. "வகுப்புரிமைப் போராட்டம்", "கலையும் வாழ்வும்", "தொண்டா? துவேசமா?" முதலிய நூல் களில் பேராசிரியருடைய அறிவாண்மையும், எழுத்தாற்றலும் நன்கு வெளிப்படுவதைப் படிக்கின்றவர்கள் உணர்ந்து போற்ற முடியும்.

அன்பழகனாரிடத்தில் நான் கண்ட மற்றொரு பண்பு மாற்றுக் கட்சியினரையும் மதித்துப் போற்றும் இனிய சுபாவமாகும். தம் கொள்கைகளை உறுதியாக எடுத்துக் கூறும் நேரத்தில் மாற்றாரின் எண்ணங்களையும் மதித்துக் கேட்டுச் செயல்படும் போக்கு அவருக்கு உண்டு.

இத்தகைய பெருமகனார் இன்று ஐம்பதாவது ஆண்டிலே அடியெடுத்து வைக்கிறார் என்று அறிகிறபோதுபெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அகவை ஐம்பதாக இருந்தாலும், நாற்பது வயதே மதிக்கத்தக்க இளம்பருவத்தாராக அவர் காணப்படுவது இன்னும் மகிழ்ச்சி யளிக்கிறது. என் வழிபடு தெய்வமாகிய முருகன் அவருக்கு எல்லா நலன்களையும் அருளிப் பயன்வாழ்வு வாழச் செய்வாராக!

இறுதியாக இன்னொன்றையும் சொல்லிக் கொள்கிறேன். தமிழ் மொழியின் மீதும், தமிழ் இனத்தின் மீதும், தமிழ்நாட்டின் மீதும் பேராசிரியர் அவர்கள் ஈடுபாடு கொண்டிருப் பது போலவே இறைவன்பாலும் அவர் ஈடுபாடு கொள்வாரேல் பொன்மலர் மணம் பெற்றாற் போலச் சிறப்புடையதாகுமன்றோ?

வாழ்க அன்பழகனார்!

வளர்க அவர் திருப்பணி.!

நல்லவரே வல்லவரே!

அன்பிற்கு அன்பராய்ப் பேரறிஞர் மாமேதை
அண்ணாவின் அன்பின் தம்பியராய் ஆகியே
புன்மை பிணியகற்றப் பாடுபடும் மருத்துவமாம்
புகழ்த்துறை அமைச்சராய்த் தொண்டாற்றும்
நன்மை உளங்கொண்ட நல்லவரே வல்லவரே
நாடெல்லாம் புகழ்சேர் பேராசிரியப் பெருமானே
அன்பழகப் பேர்தாங்கும் அண்ணலே வருகவென
அகமகிழ வரவேற்றோம் வருக வருகவே!

— பூதப்பாண்டிப் பேரூராட்சி மன்றத்தாரால் அளிக்கப்பட்ட வரவேற்புப்பா மலரில் ஒரு பகுதி 5-10-'71

பேராசிரியப் பெருந்தகை

கல்லிடை டி.எம்.பீர்முகம்மது

தன்மானம் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாததாகும். அந்தத் தன்மானம் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இனமானமும் இன்றியமையாததாகும். தமிழரில் பலருக்குத் தன்மானம் உண்டு; ஆனல் அவர்களுக்கு இனமானம் அவ்வளவாக இல்லை. அதாவது ஒரு தமிழனை இன்னொருவன் தனிப்பட்டமுறையில் இழித்துப் பழித்துப் பேசினுல் ஆத்திரப்படுவான்; ஆவேசம் கொள்வான். ஆனல் அதே நேரத்தில் அவனுடைய இனத்தையும், மொழியையும் இழித்தோ பழித்தோ பேசினல் அமைதியாகக் கேட்டும் கேளாததுமாகச் சென்று விடுவான். இந்த இழி நிலைகளும் இதுபோன்ற பழி நிலைகளும் தமிழினத்திலிருந்து முற்ருக அகல அல்லும் பகலும் அயராது உழைத்து வருபவர்தாம் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் அன்பழகன் அவர்கள்.

1953 துவக்கத்தில் ஈழத்திருநாட்டின் எழில் நகராம் தலைநகர் கொழும்பில் அங்குள்ள தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திருக்குறள் விழா நடைபெற்றது. அந்தத் தமிழ்ச் சங்கத்தில் சைவ மெய்யன்பர்களே அதிகமிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எப்படியோ வேண்டாவெறுப்புடன் அவ்வாண்டு திருக்குறள் விழாவில் சொற்பெருக்காற்ற நம் பேராசிரியர் அன்பழகன் அவர்களை அழைத்திருந்தார்கள். விழா, மருதானை சாகிராக் கல்லூரி திறந்த வெளித்திடலில் சாகிராக் கல்லூரி முதல்வர் ஜனப். A. M. A. அசீஸ் (சி. சி. எஸ்.) அவர்கள் தலைமையில் கோலாகலமாகத் துவங்கியது.

மேடையின் பின்புறம், எல்லாரும் அறியும் வண்ணம், சிவநடனச் சித்திரத்திரை தொங்க விடப்பட்டிருந்தது. சூடம் சாம்பிராணி கொளுத்தி ஆராதனைகளுடன், தேவாரத் திருப்பாசுரப் பாடல்கள் பாட விழாவில் வரவேற்புரை நடைபெற்றது. எல்லாச் சமயத்தினரும் எதுவும் எண்ணுது கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற இவ்விழாவை, இப்படி ஒரு சமய வழிபாட்டு விழாவாகச் செய்து கொண்டிருக்கின்றனரே என்று கூறிப் பலரும் வருந்திக் கொண்டிருந்தனர். தலைவரின் முதலுரைக்குப் பின் ஒரு சில தமிழ்ப் பண்டிதர்கள், (பேராசிரியர் ஔவை துரைசாமி அவர்களும் அவ்விழாவில் சொற்பொழிவாற்றினுர்) சொற்பொழிவுகளுக்குப் பிறகு அன்பர்களும் நண்பர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெருமைமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள், பெரும் கையொலிகளுக்கிடையே சொற்பெருக்காற்றத் தலைவர் முன்வந்து நின்ருர். அங்குக் கூடியிருந்த மக்கள் வெள்ளத்திடையே ஓர் ஊசி விழுந்தாலும் ஒலி கேட்கும் அமைதி அவ்வமயம் நிலவியது.

"தகுதி மிக்க தலைவர் அவர்களே!
தமிழ் வளர்க்கும் சங்கத்தினரே!!
தன் மானத் தமிழ் மக்களே!!!
தோழர்களே!!!!

இங்கு இந்த மேடையிலே நடைபெற்ற, திருவிளக்கேற்றித் தேங்காய் உடைத்துச் சூடம் சாம்பிராணி கொளுத்தித் தூபதீப நைவேத்திய ஆராதனைகளைக் கண்டதும், இந்த மேடையைச் சிவன் கோவிலாகவே மாற்றிவிடுவார்களோ என்று அஞ்சினேன். ஆனல் நல்ல வேளையாக இங்குத் தலைமை தாங்கியிருப்பவர் உயர்திரு. அசீஸ் அவர்கள் என்று தெரிந்ததும் நிச்சயமாக அவ்வாறு நடைபெருது என்று எண்ணிக் கொண்டேன்'' என்று நகைச் சுவை ததும்ப—அந்த நகைச் சுவைக்குள் ஆயிரம் பொருட்களை அழுத்தம் திருத்தமாக உள்ளடக்கி வைத்துக்—கூறிய அந்தச் சொற்சுவையைக் கண்ட மக்களின் கையொலி அடங்கச் சில நிமிடங்களாயின என்ருல் பேராசிரியர் அவர்களின் திண்ணிய நுண்ணிய கருத்துக்கள் எத்தனை மதிப்பு வாய்ந்தவை என்பதை எண்ணிப் பார்த்து எழுச்சி கொள்ள வேண்டும்.

''தென் திசையைப் பார்க்கின்றேன் என் செய்வேன். எந்தன் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குதடடா! அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன் ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன், குன்றெடுக்கும் பெரும் தோளான், கொடை கொடுக்கும் கையான் குள்ள நரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்; என் தமிழன் இராவணன் காண் அவன் நாமம் இவ்வையம் அறியும்'' என்ற புரட்சிக்கவி பாவேந்தரின் புதுமைப் பாடலை அவ்விழாவில் முதலில் கூறியே தம் சொற்பெருக்கைத் துவக்கினர் என்ருல் எத்தகைய துணிச்சலும் தன்மானமும் இனமானமும் மொழியார்வமும் உள்ளவர் நமது பேராசிரியர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தங்களின் சொந்த நலத்திற்காகவும், தனிப்பட்ட விரோத குரோதத்திற்காகவும் கட்சிவிட்டுக் கட்சி மாறுதல் என்பது இன்று மிகச் சாதாரணமாகி விட்டதைக் கண் கூடாகக் காண்கிருேம். இவ்வித அரசியல் பச்சோந்திகளாக இருப்பவர்கள்தாம் அரசியலில் தன்மானமோ நேர்மையோ ஒழுங்குமுறையோ அறவே இல்லாத மனித உருவில் நடமாடும் பேர்வழிகளாக வாழ்கிருர்களென்ருல் இந்தப் பேர்வழிகளுக்கு ஆதரவும் உதவியும் ஒத்துழைப்பும் தந்து தங்கள் தங்கள் கட்சிகளை வலுப்பெற்றதாக—உயர்வு பெற்றதாக—மாற்றிவிட்டோம், ஆக்கிவிட்டோம் என்று பறை சாற்றி, பகட்டிவரும் கட்சிகளின் தலைவர்கள் என்பவர்களிடமும் அரசியல் துறையில் இருக்க வேண்டிய நேர்மை, நாணயம், தூய்மை தன்மானம் முதலியவை அறவே அழிந்து ஒழிந்து போய்விட்டன என்றுதான் கூறமுடியும்.

தாம் ஈடுபாடுகொண்டு பணியாற்றி வரும் இயக்கம் அல்லது கட்சி தனது சொந்தக் கொள்கையிலிருந்து விலகிச் செல்லும்போது அதை எடுத்துக் காட்டித் திருத்த முனைய வேண்டும்; திருந்தாவிடில் அக்கட்சியை விட்டுவெளியேறிவிடுவதுதான் நாணயமான—நேர்மையான—அரசியல்வாதிக் கழகாகும். ஆனல் தனது சொந்த ஆதிக்கத்திற்கும்—ஆசாபாசத்திற்கும் சுயநல வேட்டைக்கும் கட்சியில் இடமில்லை என்று தெரிந்ததும் உடனே வேறுகட்சிக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, நேற்று ''ஒழிக'' என்று கூறிய வாய்கிழிய இன்று ''வாழ்க'' என்று

நாடாளுமன்ற உறுப்பினராய்ப் பொறுப்பேற்று ஈடில்லாத் தமிழ்ப் பண்பை இந்தியத் திருநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பறைசாற்றிய தங்கள் தகுதியின் மிகுதியைக் கண்டு களித்த தமிழகம், இந்நாளில் தங்களை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராய்ப் பெற்று பெருமைகொள்கிறது.

அருமந்தன்ன தமிழாய்வில் என்றும் தோய்ந்திருக்கும் தாங்கள் அறிவியல் ஆய்வுக் கூடத்தைத் திறந்து வைப்பது நெஞ்சத்திற்கு நிறைவைத் தருகின்றது. அறிவாளர் தம்மால் ஆய்வகம் திறக்கின்ற செறிவான செயலால் சிந்தை களிக்கின்ருேம்.

—பாளையங்கோட்டை சதக்கத் துல்லாஹ் அப்பா கல்லூரி ஆட்சிக் குழுவினர் அளித்த வரவேற்பிதழில் ஒரு பகுதி.
7—10—'71

அலறி ஆர்ப்பாட்டம் செய்து திரியும் அரசியல் வாதியாராக இருந்தாலும் அவர்கள் இன்றைய அரசியல் அநாகரிகத்திற்கும் சீர்கேட்டிற்கும் காரணமாக இருப்பவர்கள் என்பது மாத்திர மின்றி, எதிர்காலச் சந்ததியினருக்கும் ஒரு பெரும் துரோகமும் இழிவும் செய்தவர்களாவர் என்பதே அரசியல் நேர்மையாளர்களின் முடி வாகும்.

பதவி பெறப் பல்லிளித்துப் பரணி பாடிப் பகைவரிடம் மண்டியிடும் இக்காலத்தில் உதவி பெற உலுத்தர் தமை உயர்த்திப் பேசி உள்ளத் தின் உணர்ச்சிகளை விற்கத் துணியும் இக் காலத்தில், அன்புப் பெருந்தகை அன்பழகனார் போன்ற அறிவுக் கருவூலங்கள் தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப் பேற்று இருப்பது இந்தியத் துணைக்கண்டத்துக்கே பெருமையாகும். பேரறி ஞர் அண்ணா அவர்களின் பாதையில் நம் பேராசிரியப் பெருந்தகை பயணம் துவங்கிய காலத்திலிருந்து, இன்று டாக்டர் கலைஞர் அவர் களின் ஆட்சியில் அமைச்சர் பொறுப்பேற்றிருப் பது வரை அவர் இயக்கப்பற்றும், கொள்கைப் பிடிப்பும், கடமையுணர்வும் கொண்டவராகவே காட்சியளித்து, செயல்பட்டு நின்று மக்களுக் குப் பணியாற்றி உயர்ந்து வந்திருக்கின்றார் என்பதை எவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

அன்று எட்டுத் திக்கிலுமிருந்து கழகத் திற்கு எதிர்ப்பும் ஏசலும் புயலெனக் கிளம்பி, ‘பொசுக்கிடுவோம் நசுக்கிடுவோம்’ என்று எக் காளமிட்டபோது பேராசிரியர் அவர்கள் தமது மேடைப் பேச்சால், மேதினி போற்றும் எழுத் தாற்றலால், வலிவும் பொலிவும் கொண்ட தமது வாதத் திறமையால் அவற்றை முறியடித்துக் கழகம் வளர்ச்சி பெறுவதற்கும் வெற்றி பெறு வதற்கும் காரணமாக இருந்த நிலையை எவரும் எளிதில் மறுத்துவிடமுடியாது.

கிராமப் புறங்களிலும் கடல்தாண்டி வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்களிடமும் அவர்கள் அறிந்து புரிந்துகொள்ளும் வகையில் கலை நயத் தோடும் கன்னித் தமிழ் நடையோடும் கருத்து மிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தி, அவர்களைக் கழகக் கொள்கை வழி திருப்பிய பெருமை பேராசிரியர் அவர்களையும் சார்ந்ததாகும்.

பலவிதக் காரணங்களால் சீரழிந்து கிடக் கும் இந்தச் சமுதாயம் மீண்டும் சீரும் சிறப்பும் பெற்றுயர்ந்து செழித்து வளரவேண்டும் என்ற தூய்மையான எண்ணம் கொண்டு, நாட்டுத் தொண்டையும் கழகப் பணியையும் இரு கண்களாக மதித்துப் பணியாற்றி வரும் மகிழ்ச்சி மிகு பேரன்பர் மதிப்புமிகு பேராசிரியர் மாண்புமிகு அமைச்சர் திரு. க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் தம் வாழ்வில் ஐம்பதாம் ஆண்டுப் பிறந்த நாளாம் பொன்விழாவில் நுழைகின்றார் என்ற நல்ல செய்தி நமக் கெல்லாம் தேனாக — பாகாக — தெவிட்டாத இன்னமுதாக இனிக்கிறது.

தமிழகத்திலும் ஈழநாட்டிலும் என்னுடன் நெருங்கிப் பழகிய நேர்மையாளரை, பெருந் தன்மையும் பேரன்பும் கொண்ட பேராசிரியப் பெருந்தகையை, தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தகுதி மிக்க அமைச்சரை எல்லாவற்றிற்கும் மேலாக எனது இதயம் கவர்ந்த இன்பத்தமிழ் இனிய சொல்லேருழவரைப் பாராட்டுவது வாழ்த்துவது எனது கடமையென உணர்ந்து, அவர் நீடு வாழ நிறைந்த உள்ளத்துடன் வாழ்த்துகிறேன்.

வாழ்க பேராசிரியர் பணி!

வளர்க அவர்தம் நெறி!

ஓங்குக அவர்தம் புகழ்!

அலைகடலுக்கு அப்பால்! அமெரிக்காவில்!



அருந்தமிழ் ஆராய்ச்சியோ?
அரசியல் ஆய்வோ?

தண்டமிழ்ப் பேராசான்!

டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்த் துறைத் தலைவர், மாநிலக்கல்லூரி, சென்னை.

அரை வெள்ளிவிழாக் காலம் அருந்தமிழ்ப் பேராசானாய்ப் பணியாற்றி, அரை நூற்றாண்டுக் காலம் மொழியுணர்வையும் நாட்டுணர்வையும் நாட்டில் பரப்பி, இன்று அரசுகட்டில் ஏறியிருக்கும் அருந்தமிழாசான் அன்பழகனார் அவர்கள், மொழியுலகிலும், ஆட்சி உலகிலும் முடிசூடா மன்னராவார். பண்பும் அன்பும் மேவிய இப் பைந்தமிழ் நல்லாசான், அண்ணாமலைச் செழுங்கலை நியமம் அளித்த கல்விக் கொடை என்பது மகிழ்வூட்டும் நற்செய்தியாகும்.

அண்ணாமலை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலிற் புகுந்த அன்பழகனார் அண்ணா பல்கலைக் கழகத்தின் வாயில் வழியாக வெளியேறினார். பல்கலைக் கழகத்தில் அண்ணா கண்டெடுத்த பல முத்துக்களில் பாங்கான நன் முத்து அன்பழகனார் முத்து. முத்தமிழ்க் கடலில் அறிஞர் அண்ணா அவர்கள் மூச்சடக்கி முத்துக் குளித்தபோது, கிடைத்த முதல் முத்து, மூத்த முத்து அருமை அன்பழக முத்து. பெருமை தரும் அம்முத்து இறுதிவரை தன்பீடு குன்றாமல் பிறங்கிவருவது பெருஞ்சிறப்பிற்குரியது.

சங்கச் சான்றோர் சால்பு

சங்கமிருந்து தமிழாராய்ந்த சான்றோரின் சால்பனைத்தும் நிறையப் பெற்றவர் பேராசிரியர்.

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

என்ற குறள் கூறும் முப் பண்புகளும் முறையே கைவரப் பெற்றவர். எதனையும் காலப் பாணிப்பின்றி உரிய காலத்தோடு கிளத்தல், புலமை நல முற்றல், துணிந்து கூறல் ஆகிய முப்பணிகளும், பேராசிரியருக்கு அன்றும், இன்றும் அணிகலன்களாகத் திகழ்கின்றன.

'அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு'

என்று குறள் கூறுமாப்போலே, அஞ்சாமைப் பண்பு என்றும் எஞ்சாதிருப்பது பேராசிரியர் பால் பாராட்டத்தக்க பெரும்பணியாகும்.

குறள் ஒலி ஆசான்

வள்ளுவன் குறளை வண்டமிழ் நாடெங்கும் பரப்பும் தலையாய பெரும்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பேராசிரியர், தமிழ் கூறும் நல்லுலகில் நடைபெற்ற குறள் விழாக்கள் அனைத்திலும் குறைவறக் கலந்து கொண்டு தம் உரையால் அவ்விழாக்களை நிறைவு செய்தார். புலமை நலந் தெரிக்கும் பொலிவான கருத்து, வெண்கல ஒலி நாணும் நாவோசை, எடுப்பான தொடுப்பு, களையான நகைச்சுவை அனைத்தும் பேராசிரியர் பேச்சின் முத்திரைகள் ஆகும். கண்டிக்க வேண்டிய இடத்தில் இலக்கியக் கணைகள் புறப்பட்டு, மாற்றார் மார்ப

கத்தில், மலர் வாளிபோல் தைத்து மீட்டும் மகிழ்வோடு அன்பழகனரின் அம்பருத்தூணி யில் வந்து சேரும். பகைப் புலமும் விரும்பும் நகைப்புலம் அவர்தம் பேச்சில் நடைபோடும்; இலக்கியச் சொல்லாட்சி அவர்தம் உரைக்கு உறைகல்லாக இருக்கும்; இனிய நடை குற்ருலக் குளிர்பூந் தென்றலை நினைவூட்டும்.

புதுமையும் புரட்சியும்

இத்தனைக்கும் இடையில் புதுமையும் புரட்சியும் அவர்தம் சிந்தனையில் போட்டி போட்டுக் கொண்டு முந்தி வந்து நிற்கும். தொன்மைக் குறளின் தொல்வடிவம் காட்டு வார்போல் அவர் மூன்று குறட்பாக்களுக்கு வகுத்த புத்துரை, தமிழுக்கு வாய்த்த பொலிவான நல்லுரையாகும்.

> அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
> பொறுத்தானேடு ஊர்ந்தா னிடை.
> தெய்வம் தொழாஅள் கொழுநன்
> தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யுமழை.
> பிறப்பொக்கும் எல்லம் வுயிர்க்கும்
> சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்.

என்ற முப்பாலின் மூன்று குறட்பாக்களுக்கும் பேராசிரியர் அவர்கள் காரைக்குடி, தேவ கோட்டை, பொன்னமராபதி ஆகிய இடங் களில் திருவிழாப் போன்று நிகழ்ந்த திருக் குறள் விழாக்களில், கூறிய புதிய உரைகள் பேராசிரியரின் புதிய கண்ணேட்டத்தையும், உரை வகுக்கும் புலமை நலத்தையும் எடுத் துரைக்கும்.

தலைமாணக்கர்

பதின் மூன்ருண்டு பேராசிரியக் கட்டிலை அணி செய்ததின் விளைவாக நூற்றுக்கணக் கான தலை மாணக்கரை அவர் உருவாக்கினர். அவர்கள் இன்று நிலை மாணக்கராய், கலை மாணக்கராய், நாடெங்கிலும் காட்சி அளித்து வருகின்றனர். அவர்தம் ஆராய்ச்சியுணர்வினை மாணக்கர் தக்காங்குப் பயன்படுத்திக் கொண் டனர்; இன்று பலர் ஆராய்ச்சி அறிஞர்களாய் நாட்டில் உலா வருகின்றனர்.

முப்பாலுக்கு உவமை

உவமை யொன்றில்லா முப்பால், உவமை களால் நீதிக் கருத்துக்களை நீணிலத்திற்கு அறிவுறுத்துகின்றது. அந்த முப்பாலுக்கே ஒப்பற்ற உவமை யொன்றினை நல்கிய பெருமை நற்றமிழ்ப் பேராசானுக்கு உரியது.

குறளில் உள்ள அறத்துப்பால், பொருட் பால், காமத்துப்பால் ஆகிய மூன்றும், வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு போன்றவை. சிலர் வீடுபேறு உளதென்று கூறுவர். அது புகையிலையை ஒக்கும்; புகையிலையைப் போடாமலும் ஒதுக்கி விடலாம். 'வீடுபேறும் அத்தகையதென்று விளம்புவர்' என்று முத்தாய்ப்பு வைத்தது போன்று முடிப்பவர் பேராசிரியர். இந்தப் பேச்சழகை எண்ணிறந்த மக்கள் கேட்டு இன்புற்றதுண்டு. இந்த முப்பால் உவமை வள்ளுவப் பேராசானை விளக்க வந்த வண்டமிழ்ப் பேராசான் இவர் என்பதைத் தெள்ளிதின் விளக்கிக் காட்டும்.

ஆல்பர்ட் சுவைசர்

குறளில் உள்ளம் பறி கொடுத்து, அதனைக் கற்று, உணர்ந்து, உலகிற்கு அறிவுறுத்திய டாக்டர் 'ஆல்பர்ட் சுவைசர்' பற்றி அடிக்கடி பேராசிரியர் குறள் விழாக்களில் கூறுவதுண்டு. இது பேராசிரியரின் நன்றி பாராட்டும் கடப் பாட்டை உணர்த்தும்; தொண்டு செய்தவர் பாராட்டப்பட வேண்டும் என்ற தூய சிந்தனை யைக் காட்டும்.

முத்தமிழ்

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் ஒன்றற்கொன்று எத்துணை இயைபுடையன என்பதைத் தம் மதி நலத்தால் கண்டு, அதனை மக்கள் மன்றம் புரிந்துகொள்ளும் வகையில் உரைக்குந் திறன் பெரிதும் பாராட்டுதற் குரியது. இடல் இன்றேல் இசையில்லை; இசை யின்றேல் நாடகம் இல்லை; மூன்றின் சேர்க்கை யும் முறைப்படி இன்றேல், முத்தமிழ் இல்லை என்ற இவர்தம் பகுப்பாராய்ச்சி, பைந்தமிழ் மரபைப் படம் பிடித்துக் காட்டுவதாம்.

விளக்கு

'சங்கப் புலவர்கள் நற்றமிழ் என்னும் நந்தா விளக்கைக் காப்பியப் புலவர்க்கு அளித் தார்கள். காப்பியப் புலவோர் இடைக் காலப் புலவோர்க்கு அதனை ஈந்தனர்; இடைக் காலத்தோர் இக்காலத்தோர்க்கு அளித்தனர். நாம் அதனை நம் பின்னேர்க்கு அளிப்போமா,

அல்லது அழிப்போமா என்பதைக் காலந் தான் கணித்துக் கூற வேண்டும்' என்று அவர்கள் சில வேளைகளில் கூறுவது, இலக்கியத்தில் அவர்கள் கொண்டுள்ள ஈடு பாட்டினையும் அதனை இழத்தற்கு உடன்படாத இறுகப் பிடித்த இலக்கிய உள்ளத்தினையும் தெள்ளிதின் எடுத்துக்காட்டும்.

பண்பாடு

'சங்கச் சான்றோர் தண்டமிழ்ப் பண் பாட்டை மடந்தை மணிமேகலையிடம் தந்து சென்றனர். அம்மாதரசி அதனைச் சமய காலச் சான்றோரிடமும், ஆன்றோரிடமும் அளித்துச் சென்றனள். அவர்கள் நம்மிடம் அத்தமிழ்ப் பண்பாட்டை அளித்துச் சென்றனர். நாம் அப்பண்பாட்டைப் பாதுகாப்போமா, அல்லது பண்பாடு கண்பாடு பெறச் செய்வோமா என்ப தைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்' என்று பேராசிரியர் ஆற்றும் வீரவுரை பண்பாட்டில் அவர் கொண்டுள்ள பற்றுள்ளத் தைக் காட்டும்.

பண்பாட்டின் பாசறை

பேராசிரியரே பண்பாட்டின் பாசறை. ஆதலின் அதன் அருமை அவருக்கு நன்கு தெரியும். அண்ணாவின் அருங் குணத் தம்பி யரில் மூத்த தம்பியாகிய அவர், பண்பின் சின்னமாகவும் நண்பின் கொள்கலமாகவும் விளங்குவதில் வியப்பில்லை.

சிறப்பியல்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த 'தமிழ் மலர்' நாளேட்டில், தண்டமிழ்ச் சான்றோர் பலர் பற்றிப் பேராசிரியர் பல கட்டுரைகள் வரைந் திருந்தார். ஒவ்வொரு தமிழ்த் தக்காரிடமும் காணப்படும் புலமைச் சிறப்பியல்பு என்ன வென்பதை நுண்ணிதின் ஆராய்ந்து,தேர்ந்து, தெளிந்து, அவர் குறிப்பிட்டிருந்தது, அவர்தம் கூர்த்த மதிநலத்தைக் காட்டுவதாகும்.

இளங்கோவும் பேராசிரியரும்

இங்ஙனம் பல்புகழ் மேவிய பைந்தமிழ்ப் பேராசிரியர், ஆசான் நிலை நீங்கி, அரசு கட்டில் ஏறியவர். ஆனால் இளங்கோவடி களோ, அரசு கட்டில் நீங்கி ஆசான் நிலை எய்தியவர். இருவரும் தம் நிலை துறந்தவரே. துறத்தல், பொதுநலம் சிறத்தலுக்கு என்று இருவரும் எண்ணினர். ஒருவர் முடி துறந் தார்; இன்னொருவர் முடி சிறந்தார். ஆனால் இருவரும் காப்பிய உள்ளங் கொண்ட கன்னித் தமிழ்ப் பெருமக்கள்.

பொன்மனச் செம்மல்

முடிகொண்ட பேராசிரியர் முத்தமிழ்த் துறை ஒருவி அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து செங்கோல் செலுத்தும் கண் கொள்ளாக் காட்சியை நாடு கண்டு களித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காட்சி—அகக் காட்சி — புறக் காட்சியும் புறமுதுகிடும் பொலிவான காட்சி—இன்று நாடு செய்த நற் பேற்றால் வாய்த்திருக்கின்றது. அந்த வாய்ப்புச் செந்தமிழின் இழப்பு; செந்தமிழ் நாட்டின் ஏற்பு. இத்தகைய ஏற்றத்திற்குக் கரணியம் பேராசிரியரின் கட்டுப்பாடான வாழ்வும், ஒருமித்த உள்ளமுந்தாம். தூய்மையான உள்ளமும், வாய்மையான வாழ்வுந்தாம் பேராசிரியரை இத்தகு பெருநிலையில் பிறங்கச் செய்தன. பண்பு மொழியில் கூறவேண்டு மானால், அவர் பொன்மனச் செம்மல்—நன் மனச் செம்மல்.

மரபு வழி

பேராசிரியர் அவர்கள் தம் காலத்துத் தலை சிறந்த பேராசியப் பெருமக்களிடம் பாடம் கேட்டவர். நாவலர் சோமசுந்தர பாரதியார், கா. சு. பிள்ளை, விபுலாநந்த அடிகள், பண்டித மணி கதிரேசச் செட்டியார், டாக்டர் அ. சிதம்பரநாதனார் போன்ற புலமை மக்களிடம் பயின்றமையால், பேராசிரியர் என்றுமே துணி வான கொள்கை கொண்டு விளங்கினர். கோல் கைக் கொண்ட போதும், அதற்கு முன்பும் அக் கொள்கைத் துணிவின் கொற்றவ ரகை விளங்கினார்.

இக்கால நக்கீரர்

நாவலர் சோமசுந்தர பாரதியாரை இருபதாம் நூற்றாண்டின் நக்கீரர் என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டுவதுண்டு. அவரிடம் பயின்றமையால் பேராசிரியரும், தம் ஆசிரியர் போலவே, விளங்கி வருகிறார். சரியான முடிவைச் சாதிப்பதில் இவர் இக்கால நக்கீரர்.

எழுத்தும் பேச்சும்

'வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக' இருக்கும் பேராசிரியர் பேச்சும் எழுத்தும். ஆதலால் இவரை அணுகவே பலர் தயங்குவர். உண்மை இறுதி வரை நிலைபெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர் கண்டிப்பாக உரைப்பதைப் பலர் புரிந்து கொண்டுள்ளனர்; சிலர் புரிந்து கொள்ளவில்லை. நியாயம் நிலைத்து நிற்க வேண்டும்; நீதி தழைக்க வேண்டும்; என்ற நினைப்பில்தான் அவர் கண்டிப்பாக இருந்து வருகிறாரே தவிர, வேறு எதனாலும் அன்று. இது அவரோடு நெருங்கிப் பழகிய கேண்மையுடையவர்க்கு எளிதில் விளங்கும்.

பொன்விழா

இத்தகைய பீடுசான்ற பேராசிரியப் பெருந்தகைக்கு இன்று பொன்விழா அயரப் பெறுகிறது. ஆனால் அவர் தோற்றத்தைப் பார்த்தால் முப்பது ஆண்டு இளைஞர் போல் காட்சி அளிக்கிறார். பேச்சோ இருபது ஆண்டை எட்டிப் பிடிக்கிறது. வலிமையோ பதினாறின் படிக்கட்டில் இருக்கிறது. இங்ஙனம் வயது அதிகம் ஆக ஆக, வலிமை மிகுந்து வரும் பேராசிரியர் தமிழ் நாட்டின் எழுச்சியின் சின்னமாக, ஏற்றத்தின் திருவுருவாக இலங்கி வருகிறார்.

கொற்றவன் வாழியர்

கொற்றம் புரக்கும் இந்நற்றமிழ்ச் செம்மல், தண்டமிழ் அன்னையின் தலைமகன், இப் பொன் விழாப் போன்று அடுத்து வரும் பல நல் விழாக்களையும் கண்டு களிக்க விழைகிறோம்; பெருந்தமிழ் மரபில் தோன்றிய இப்பெருங்குடி மகனார் மணி விழாவும், அதனைத் தொடரும் அணிவிழாப் பலவும் கண்டு, அகமிக மகிழ்ந்து, நாட்டுக் கப்பலை நல்வள மென்னும் கரைக்கு அழைக்கும் கலங்கரை விளக்கமாய் விளங்க வழுத்துகிறோம்.

தண்டமிழ்போல் வாழ்க

பெருந்தமிழ்க் குடியில் தோன்றிய பெருமகன் பேராசிரியர், பீடுசால் தமிழைப் போன்று பிறங்கி, நாடு காத்து, நல்ல தமிழ்க் குடி காத்து, நானிலம் போற்ற வாழியர் நெடிதென வாழ்த்தெடுக்கின்றேன். வண்டமிழ் புரக்கும் நாடு கிழவோனாகி, செந்தமிழ்க் கொடி சிறக்கப் பறக்கச் செய்து, வையை யாற்று மணலினும் பலவாய், வாழியர் பன்னாள் வளம்பல புரந்தென வாழ்த்துகின்றேன். ★

காட்சிக்கு எளியவர்!

காட்சிக்கு எளியராகக் கடுஞ்சொலில் இயல்பினின்ற
கண்கவர் எழிலீர்! எங்க ளன்புசால் அமைச்சரே! நல்
ஆட்சியி னிறைவைமக்க ளமைதியிற் காணுமைய!
அன்பினைப் பண்பாய்க்கொண்ட அருந்தவப்பேறே! யின்ப
மாட்சியாம் மருந்தால்மக்கள் மனக்குறைப் பிணியைப்போக்கும்
மாண்புறு அமைச்சரே! நும் வரவுநல் வரவாமின்று
காட்சியாற் கவினைப்பெற்றோம் களிப்பினை யடைந்தோமிங்கு
கனிமொழி யதனைத்தந்தீர்! கலந்துநீர் வாழ்க! வாழ்க!

— குருந்தங்கோடு குடும்பநலத் திட்டச் சிறப்பு முகாமினைத் துவக்கி வைத்தபோது, குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாகப் படித்தளித்த வாழ்த்து மடலில் ஒரு பகுதி. 5-10-1971

வாழ்த்துவோமே!

கவிஞரேறு
வாணிதாசன்

காரோடு நீள்வானைப் போல நாட்டில்
கவிழ்ந்திருந்த பழமையினை வெட்டிச் சாய்க்கும்
தேரோடு நெடுஞ்சாலை நன்செய் புன்செய்
திருக்குளங்கள் பூஞ்சோலை அழகைச் செய்யும்
ஈரோடு மக்கட்கே அளித்த தந்தை
இணையில்லாப் பெரியாரின் அரவ ணைப்பில்
சீரோடு தழைத்தவர்அன் பழகன் ஆவார்
செந்தமிழ்போல் பல்லாண்டு வாழ்க நீடே!

மாமணக்கப் பலாமணக்கும்; நீண்டு தாழ்ந்த
வாழைமரக் குலைமணக்கும்; வற்றுப் பொய்கைப்
பூமணக்க இலைமணக்கும் தமிழ கத்துப்
பொற்கதிரே நமதண்ணா! அண்ணா ஈர்ப்பால்
நாமணக்கும் பேச்சாளர் பல்லோர் கண்டோம்
நல்லோரில் அன்பழகன் ஒருவர் ஆவார்
காமணக்கும் முல்லைமலர்ச் சிரிப்புச் செல்வர்;
காவிரியின் மணற்போல்பல் லாண்டு வாழ்க!

சொல்லறிஞர் கடல்மல்லைக் காஞ்சி தந்த
தோடுவான இளம்பரிதி; மக்கள் போற்றும்
நல்லறிஞர் நமதண்ணா கண்டெ டுத்த
தம்பியரில் முதற்றம்பி; நாட்டில் வாழும்
பல்லறிஞர் புகழ்பாடும் கலைஞர் ஆட்சிப்
பண்பினிலே நல்வாழ்வுத் துறைய மைச்சர்;
தொல்லறிஞர் சீரேஅன் பழகன்; ஆவார்;
தொகைப்பாடல் போலென்றும் வாழ்க நீடே!

கார்தாவும் மலையுச்சி அருவிச் சாரல்
கழைதாவும்; பலாத்தூக்கி மந்தி தாவும்;
நீர்தாவும் இடுக்கினிலே; பாறை மீது
நெடுந்தோகை மயில்தாவும்; யானைத் தந்தக்
கூர்தாவும் வாழையிலே; குறிஞ்சிச் செல்வம்
கொடுத்துதவும் மாமருந்தை ஒப்பார் நீண்ட
சீர்தாவும் அன்பழகன்; பன்னூ றாண்டு
செந்தமிழ்போல் வாழ்கவென வாழ்த்துவோமே!

காட்டகத்து முக்கனியும் மலைமு கட்டுக்
கருவண்டுத் தேனடையும் வெண்கற் கண்டின்
கூட்டகத்துச் சுவைக்கின்ற இன்பம் தேக்கும்
கொஞ்சுதமிழ்ப் பேச்சழகர்; வளம்சேர் பொன்னி
நாட்டகத்து முதலமைச்சர், கலைஞர், டாக்டர்
நற்றமிழ வேள் மு.க. விரும்பும் அன்பர்;
பாட்டகத்து நற்சுவைஅன் பழகன் ஆவார்;
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்து வோமே!

நாவரசர் அன்பழகன் பிணிக்கும் பேச்சை
நாடறியும் வீடறியும்; இளைஞர் உள்ளக்
காவரசர்; காட்சிக்கே எளியர்; வற்றாக்
கடல்போன்ற தமிழறிஞர்; எவர்க்கும் நல்லார்;
மாவரசர் வளர்த்ததமிழ் வளர்க்கும் செம்மல்;
வற்றாத குளிரருவி; தென்றற் காற்று;
பாவரசர் புரட்சிப்பா இனிமை போலப்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்து வோமே!!

தோலா நாவின் தொல்புகழோய்!

தோலா நாவின் தோல்புக ழுடையோய்!
ஏலாப் பழக்கம் ஏகத் திருத்தம்
மேலாக் கருதி மேற்கொண் டொழுகும்
அறிவும் பரிவும் ஆற்றலும் மிக்கோய்!
மக்கள் நலமே நம்நலம் என்று
தக்க வகையில் தமிழ்நா டெங்கணும்
சுற்றிச் சோர்விலா துழைக்கும் தலைவ!

— ஒரத்த நாட்டில் நடைபெற்ற மாநிலக் கால்
நடை வளர்ப்பு வாரியக் கூட்டத்தில் வாசித்
தளித்த வாழ்த்துப் பாவின் ஒரு பகுதி.
19—1—'72

நான் அறிந்த பேராசிரியர்

எவி.எம். ஜாபர்தீன். கோலாலம்பூர்

கோலாம்பூரில் உள்ள அக்பர் உணவு விடுதியின் ஷா ஜஹான் மண்டபத்தில் பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கு ஒரு வரவேற்பு விருந்துக் கூட்டம் நடைபெறுகிறது. தலைமை வகித்தவர் தமது தலைமையுரையில் தேவையற்ற ஒரு கருத்தைத் துணிந்து வெளியிட்டார். ''இங்கு ஒருகாலும் அங்கு ஒருகாலுமாக இருப்பதாகவும், இரை தேடும் பறவை என்றும் நம் தமிழர்களைக் குற்றம் சாட்டுகிறார்கள். இந்நாட்டுத் தமிழர்கள் தமிழ் நாட்டுடன் கொண்டிருக்கும் தொடர்பு துண்டிக்க முடியாதது. மொழி கலாசாரத் தொடர்புடன், தமிழ்நாட்டில் வசிக்கும் வயோதிகத் தாய் தந்தையர்க்கு வெற்றிலை பாக்குக்காகச் சிறுபணம் அனுப்புவதைக் குறை கூறுவது தகாது. அங்குச் சென்று உற்றார் உறவினரை, நண்பர்களைக் கண்டு வருவதால் இங்குள்ளவர்களுக்கு நாட்டுப்பற்று இல்லை என்று கூறலாகாது'' என்று தம் தலைமையுரையில் கூறிக்கொண்டு சென்றார்.

இது அன்றைய சூழ்நிலைக்குத் தேவையற்ற கருத்து. இங்கு வசிக்கும் தமிழர்கள் இந்நாட்டையே சொந்த நாடாகக் கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் உறவுகளை மறந்துவிட்டுத் தங்கிவிட வேண்டும்; சீனர்களைப் போல இங்கேயே வேரூன்ற வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக உள்ள சமயத்தில் இக்கருத்து முரண்பாடாக இருந்தது. இம்மாதிரிப் பேச்சுக்கள் இன ஒற்றுமையை வளர்க்கக் கூடியது அல்ல என்று அஞ்சி இதற்கு யார் பதில் கூறுவது என்று என்னைப் போன்றவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர்.

வரவேற்புக்குப் பதில் கூறப் பேராசிரியர் எழுந்தார். ''கூட்டத் தலைவர் கூறிய கருத்துக்கள் தவறானவை; அவை முரண்பாடானவை. இங்குள்ள தமிழர்கள் இங்கேயே, இந்நாட்டையே தாயகமாகக் கொண்டு நிரந்தரமாகத் தங்கி விட வேண்டும். இந்நாட்டைவிட வசிப்பதற்கு ஏற்றநாடு வேறு ஏதும் இல்லை. ஆகவே தமிழ்நாட்டைப் பற்றி ஏதும் எண்ணாமல் இங்குள்ள தமிழர்கள் இங்கேயே தங்கிவிடவேண்டும்'' என்று திட்டவட்டமாகக் கூறினார். சில ஆண்டுகளுக்கு முன் மலையகத்துக்கு வந்த மறைந்த அறிஞர் அண்ணா அவர்களும் இதே கருத்தை நாடு முழுவதும் பறைசாற்றி வந்தார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

''சீர்திருத்தவாதிகளிலேயே சீர்திருத்தப்பட வேண்டியவர்களும் பலர் உண்டு'' என்று துணிந்து கூறும் ஆற்றல் பேராசிரியர் அன்பழகனரிடம் தவிர வேறு யாரிடமும் நான் காணாத ஒன்றாகும். ஆசிரியராகப் பணியாற்றி அரசியலுக்கு வந்ததால் முன் இருந்த பணியிலிருந்த நல்ல வரை முறைகள் அரசியலிலும் அவரால் பயன்படுத்தப்பட்டன. காய்ப்பு உவத்தல் இன்றிப் பெரியோர் சிறியோர் என்ற பாகுபாடு இன்றி ஒரே விதமாகப் பழகும்

தலைவர் அன்பழகனார் என்று என்னால் திண்ணமாகக் கூறமுடியும்.

துரோணர்—ஏகலைவன் போன்ற ஆசிரிய—மாணவ உறவை நான் அவருடன் கொண்டிருந்தாலும், அவர் தம் மாணவனாக அல்லாது நண்பனாக என்னைக் கருதிப் பழகும் பாங்கு என்னால் மறக்கக் கூடியது அன்று. பழகியவர்களை எளிதில் மறந்துவிடக்கூடிய மற்ற அரசியல்வாதிகளைப் போலன்றி, இவர் மறந்துவிடாது நினைவு கூரும் தன்மையில் தலைவராகத் திகழ்கிறார்.

அன்று பச்சையப்பனில் ஆசிரியராக இருந்த போதும், பிறகு சட்டமன்ற உறுப்பினராகவும், மேலவை உறுப்பினராகவும், பாராளு மன்றத் தி. மு. கழகப் பிரிவின் தலைவராகவும், இப்போது பொது நலத்துறை அமைச்சராக இருக்கும்போதும் எவ்விதமான மாறுதலையும் — தன்மையிலும் — குண நலத்திலும்—அடையாதவர் அன்பழகனார் என்றால் அது மிகையாகாது.

கீழ்மட்டத்தில் உள்ள சிலர் ஊராட்சித் தலைவராக அல்லது சட்ட மன்ற உறுப்பினராக மாறிய பின்னர் அவர்கள் நடையுடையே முற்றிலும் மாறக்கூடிய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் அன்று இருந்தவாறே இன்றும் ஒரே மாதிரியாகக் காட்சியளிக்கும் தலைவர் அன்பழகனார் அவர்கள்.

பேராசிரியர் அவர்கள் கனவுலகில் சஞ்சரிப்பவர் அல்லர். அவருடைய கொள்கைகள் அனைத்தும் செயல் பூர்வமானவை. மக்கள் நன்மைக்காகக் கொள்கையே தவிர, கொள்கைக்காக மக்கள் என்று எண்ணுபவரல்

பொன் விழாவை நோக்கி அடியெடுத்து வைக்கும் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் நாடும் மக்களும் நலம்பெறப் பன்னெடுங்காலம் வாழ்ந்து நற்பணியாற்ற வாழ்த்துகிறேன். ★

சொல்லுதல் வல்ல தூயோய்!

நெறியழ கிலங்கும் பண்பின் நிறையழ கொளிர ஆட்சி
முறையழ கமையத் தென்னர் மொழியழ கினிக்க நாளும்
அறிவழ கோங்க வாழும் அன்பழ கென்னும் அண்ணல்!
இறையழ கொளிரப் பல்லாண் டின்பழ கோங்க வாழி!

சொல்லுதல் வல்ல தூயோய்! சூழ்திறன் தேர்ந்த மேலோய்!
இல்லவர் புன்கண் தீர்க்கும் இயல்புடை அண்ணல்! அண்ணா
சொல்லிய நெறியில் நாடு துலங்கநற் றேண்டு போற்றி
அல்லொடு பகலும் அன்பால் அரும்பணி புரிவோய்! வாழி!

— காந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வழங்கிய
வரவேற்பு வாழ்த்தில் ஒரு பகுதி.

3—9—'71



முல்லைப்பூ வெள்ளை உள்ளம்!



தம் மாணாக்கர் தலைமையில் தமிழ் விழாப் பேருரை!

காஞ்சிக் கவிஞனின் தீஞ்சுவைக் காவியம்

கவிஞர் முருகு சுந்தரம்

புரட்சியின் சிகரம் என்னைப் போலக்
குள்ளமாய் இராதென்று கூறினர் அண்ணா.
அண்ணா மலையில் பயின்றஅன் பழகனார்
இந்நாள் அதற்கோர் எடுத்துக் காட்டு.
குட்டுவன் போல நெட்டை உருவமும்
நக்கீரன் போல நாக்குத் துணிவும்
செழியன் போலச் செருமுனை விருப்பமும்
பெருஞ்சித் திரன்போல் புலமைச் செருக்கும்
பொருந்தி யிருக்கும் இவரோ, யார்க்கும்
மருட்சியைக் கொடுக்கும் புரட்சியின் சிகரம்.
துடும்ப டித்துக் கூட்டம் சேர்த்துக்
கடும்பகை நடுவில் கட்சி வளர்த்த
பட்டுக் கோட்டை அழகிரி சாமியும்
முஜ்பீர் மீசைப் பன்னீர்ச் செல்வமும்
பிறப்பெ டுத்துப் பெரும்புகழ் நிறுவிய
முந்திரித் தோப்புத் தஞ்சைத் தரணி
தந்த மறவர், செந்தமிழ்க் குரவர்.
தாரூர் மார்புத் தமிழவேள் பிறந்த
ஆரூர் நகருக் கடுத்தஊர்க் காரர்.
அந்நாள் அண்ணா மலைக்கழ கத்துப்
பண்டித மணிகளின் பட்டியில் வளர்ந்த
ஆட்டு மந்தையின் நடுவே கிளம்பிய
காட்டூர் வரிப்புலி! கடல்மடைப் பேச்சர்!

காஞ்சிக் கவிஞன் கையில் வளர்ந்த
தீஞ்சுவைக் காப்பியம்; பாண்டியன் ஆண்ட
பெரும்புகழ் மதுரையில் ஈரோட் டிராவணன்
கருஞ்சட்டை மாநாடு நடத்திய சமயம்
அங்குவாழ்ந் திருந்த ஆஞ்ச நேயர்கள்
லங்கா தகனம் நடத்தினர்; அந்நாள்
தொண்டர் படைக்குத் தலைமை ஏற்றுக்
கண்டவர் வியக்கக் கடமைகள் புரிந்தவர்.
தாடிப் பெரியார் தலைமையில் புதுவை
மீசைப் பாவேந்தர் பாராட் டுரைக்க
வெற்றிச் செல்வியின் வீணைக் கரங்களைப்
பற்றிக் காதற் பண்கள் இசைத்தவர்.
திலகர் போலவும் கோகலே போலவும்
ஜாமியா மில்லியா கல்லூரி கண்ட
ஜாஹீர் உசேன் சாகிபு போலவும்
வங்க நாட்டுக் கபீர் போலவும்
அமெரிக்க நாட்டுக் கால்ப்ரெய்த் போலவும்
அரசியற் களத்தில் வந்து குதித்து
முரசு முழக்கும் பேரா சிரியர்.
விண்ணும் மண்ணும் போலிரு பெண்களும்
கண்மணி போலோர் அன்புச் செல்வமும்
பெற்றவர்; குடும்பக் கட்டுப் பாடு
கற்றவர்; நலத்துறை நடத்தும் அமைச்சர்.
'கோடு உயர்ந்தது; குன்றந் தாழ்ந்தது'
என்று பேரறிஞரால் ஏற்றம் பெற்ற
திருச்செங் கோட்டின் தேர்தல் வீரர்.
தூய கையர்; தொண்டு மெய்யர்.
வளர்கஅன் பழகனுர் ஆண்டுகள், அண்ணு
நூல்களில் உள்ள எழுத்தினும் பலவே!

பதினாறு பேறுகளும் சிறக்கப் பெற்றவர்

பேராசிரியர். பூ. ஆலாலசுந்தரன். M.A

திருமணக் காலத்தில் சான்றோர் மண மக்களை வாழ்த்தும்போது ''பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க'' என வாழ்த்துவது இயல்பாகும். பதினாறும் பெற்று என்பதற்குச் சிலர் பதினாறு குழந்தைகள் பெற்று என்று தவறாகப் பொருள் கொள்வதுண்டு. பதினாறு பேறுகள் என்பன பதினாறு செல்வங்களைக் குறிப்பனவாம். கல்வி, வலிமை, வெற்றி, புகழ், அழகு, இளமை, அறிவு, பெருமை, நல்லூழ், நெல், பொன், நுகர்ச்சி, துணிவு, வாழ்நாள், நோயின்மை, நன்மக்கட்பேறு என்பன பதினாறுபேறுகளாம். மக்களுள் ஒரு சிலரே இப் பதினாறு பேறுகளையும் ஒருங்கே பெற்றுள்ளனர். என் அருமை நண்பர் மாண்புமிகு திருவாளர் க. அன்பழகன் இப் பதினாறு பேறுகளையும் பெற்றவர். அவற்றுள் சில பேறுகளை நிரம்பப் பெற்றவர் எனவும் கூறலாம். இனி அவர் பெற்றுள்ள பேறுகளை ஆராய்போம்.

''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்டது திருவாரூர். அத்தகைய திருவாரூருக்கு அருகிலுள்ள காட்டூரில் பிறந்தவர் நம் பாராட்டுதலுக்குரிய அன்பழக னார். இவர் கல்வி என்ற அழியாச் செல்வத் தினைச் சிறக்கப் பெற்றவர்; 1939-1944இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று தமிழ் எம். ஏ. பட்டம் பெற்றார். தாம் மாணவ ராக இருந்த காலத்திலேயே இவர் சிறந்த பேச்சாளராக விளங்கினார்.

''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க்
கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்''

என்ற பொய்யா மொழியின் வண்ணம் இவரது சொற்பொழிவு கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாகும்: இவரது சொல் வன்மையைக் கண்டு வியந்த அறிஞர் அண்ணா அவர்கள் இவரைத் தம் தொண்டர் குழுவில் சேர்த்துக் கொண்டார். திரு. அன்பழகனார் அவர்கள் சிறந்த எழுத்தாளர் என்பதும் அவர் நடத்திய ''புதுவாழ்வு'' என்ற திங்களிதழா லும் அவர் எழுதிய ''கலையும் வாழ்வும்'' ''உரிமை வாழ்வு, விடுதலைக் கவிஞர்'' முதலிய நூல்களாலும் அறியலாகும். இவரது தோற்றத்தைக் கண்டே இவர் உடல் வலிமை பெற்றவர் என்பது புலனாகும். இவர் வாழ்க் கையில் கண்ட வெற்றிகள் பல. 1957-ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழகச் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் தேர்தலில் இவர் வெற்றி பெற்றார். 1967ஆம் ஆண்டில் இந்திய நாடாளு மன்ற உறுப்பினர் தேர்தலில் வெற்றி பெற்ற தோடு, அம் மன்றத்தின் கழக உறுப்பினர் தலைவராகவும் 1971-வரை பணி ஆற்றினார். 1962-முதல் 1967 வரை தமிழகச் சட்ட மன்ற மேலவை உறுப்பினர் தேர்தலில் வெற்றி பெற்று அம் மன்ற உறுப்பினராகப் பணி புரிந்தார். இவைகள் எல்லாம் இவர் வாழ்க்கையில் பெற்றுள்ள வெற்றிகளுக்கும் புகழுக்கும் பெருமைக்கும் சான்றாக அமைந்துள்ளன. இவர் பெயரிலேயே அழகு என்ற சொல்

அமைந்துள்ளது. இவர் தோற்றத்தில் அழகினையும் இளமையினையும் காணலாம். ஐம்பது ஆண்டுகள் நிரம்பப் பெற்றுள்ள இவரது தோற்றத்தைக் காண்பவர் இவரது வயது நாற்பது என்றே கூறுவர். எனவே இவர் என்றும் இளையவராய்த் தோற்றம் அளிப்பது சாலவும் பாராட்டத்தக்கது. இவர் அறிவுடைமை நிரம்பப் பெற்றவர் என்பது இவரது பேச்சாலும் எழுத்தாலும் அறிந்து கொள்ளலாம். இவர் நல்லூழ் பெற்றுள்ளதால் சிறந்த பதவிகளைப் பெற்றுள்ளார். ''சோழநாடு சோறுடைத்து'' என்பதனால் இவர் சோழ நாட்டில் பிறந்துள்ளதால் நெல் மிகவும் பெற்றுள்ளார் போலும். இவரிடத்துப் பொருட் செல்வமும் உண்டு என்பதை இவரது வாழ்க்கையால் அறியலாம். சிலருக்குச் செல்வம் இருக்கலாம்; ஆனால் அவர்கள் அதை நன்கு துய்ப்பதில்லை. நம் அன்பழகனார் செல்வத்தை நல்ல முறையில் அனுபவிக்கும் நுகர்ச்சி என்ற பேறு பெற்றவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக 13 ஆண்டுகள் பணியாற்றிய இவர் மிகவும் துணிவு கொண்டு அப் பதவியினின்றும் விலகி அரசியல் தொண்டிலும் சமூகத் தொண்டிலும் ஈடுபட்டார். இந்த வீரச் செயல் இவரது துணிவுக்கு எடுத்துக் காட்டாக அமைவதாகும். எதையும் தாங்கும் இதயம் இவரிடத்து உண்டு என்பதை யான் அறிவேன்.

''இன்பம் விழையான் இடும்பை யியல்
பென்பான்
துன்ப முறுத லிலன்''

என்ற வள்ளுவரின் வாக்கின் வண்ணம் வாழ்க்கை நடத்துபவர் இவர் என்பதை இவரிடத்தில் நெருங்கிப் பழகியவர் நன்கு அறிவர். எனவே கவலையை வென்று வாழ்வதால் நெடு நாள் வாழும் வாழ்நாள் என்ற பேறு இவருக்கு உண்டு. கவலையற்றவர் நீண்ட நாள் வாழ்வர் என்பதனை ''யாண்டு பலவாக'' என்ற புறநானூற்றுச் செய்யுள் விளக்குவது காண்க. அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி இவர் தமது கட்சியின் ஆக்கத்திற்கு உழைத்து வருவதைப் பார்க்கும் போது நோயின்மை என்ற பேறும் இவருக்கு உண்டு என்பது போதரும்.

''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை
யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற''

என்ற திருக்குறளுக்கு இலக்காக எம் நண்பர் திரு. அன்பழகனாருக்கு அறிவறிந்த மக்கட் பேறும் உள்ளது. செந்தாமரை, மணமல்லி, அன்புச் செல்வன் என்ற மூவரும் நம் பேராசிரியரின் அறிவறிந்த மக்கட் செல்வங்களாகத் திகழ்கின்றனர்.

பதினாறு பேறுகளும் பெற்றுள்ள பேராசிரியர் அன்பழகன் அவர்கள் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் தமிழக ஆட்சியில் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பணிபுரிதல் சாலவும் போற்றற்குரியது. கல்வித் துறையிலும் சமூகத் துறையிலும் அரசியல் துறையிலும் அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் என் அருமை நண்பர் போராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பல்லாண்டுகள் இன்னும் சிறக்க வாழுமாறு எல்லாம் வல்ல இறைவனை யான் என் மன மொழி மெய்களான் இறைஞ்சுகின்றேன். அவரது புகழ் வாழ்க! வளர்க! அவரது அரிய பணி வெல்க!

அண்ணனே வாழ்க

புலவர் மு. அருச்சுனன்

இனிக்கின்ற தமிழே! எங்கள்
இதயமே! சுவைகுன்ரு நல்
கனிகொழிப் பேச்சால் அன்பால்
கருத்துரை வழங்கும் சான்றீர்
தனிப்புகழ் கொண்ட அண்ணு
தந்தநற் றலைவ நாங்கள்
பனிமொழி கொண்டு நும்மைப்
பாராட்டிப் போற்று கின்ருேம்.

நீர்இந்த நாட்டின் முன்னே
நிகழ்த்திய உரைக ளாலே
சீர்பெற்ற நெஞ்சம் கொண்டோர்
சிந்தித்தோர் பலபே ராவர்.
ஆர்வமுற் றுழைத்துத் தூய
அறத்தினைக் கொண்ட மேலோய்
பார்போற்றும் உங்கள் தூய
பணிபோற்றி வாழ்த்து கின்ருேம்.

கரும்பினைத் தொட்டுத் தொட்டுப்
பார்ப்பதால் சுவைதோன் ருது
இரும்பினை நெருப்பி லிட்டு
எரிக்காது வாள்கிட் டாது
பெரும்பயன் தமிழர் நாடு
பெற்றிட, தமிழின் மாட்சி
அரும்பிட வேண்டு மென்றீர்
அதற்காகப் பாடு பட்டீர்.

அறம்காட்டும் நீதி நூல்கள்
அகிலத்தில் தூய்மை சேர்க்க
மறம்காட்டும் வீரமோ நம்
மண்காக்க மானம் காக்க
திறம்காட்டும் பெரியீர் உங்கள்
தொண்டினுல் இந்த நாட்டில்
சிறந்தது அறிவு ஆட்சி
செழித்தது தமிழின் மாட்சி.

எரிகின்ற கதிரோன் வானில்
ஏறினல் இந்த நாடு
பெரும்பயன் பெறுதல் போன்று
பெருந்தகை யாள ராம்நீர்
அருந்தமிழ் நாட்டில் நல்ல
ஆதவன் போல உள்ளீர்
திருமிக்க அண்ணனே நும்
திறம்போற்றி வாழ்த்து கின்ருேம்.

அறிஞர்நம் அண்ணன் இந்த
அகிலமே வியக்கும் வண்ணம்
நெறிபடும் அரசை இங்கே
நிறுவினர் அவர்தம் எண்ணம்
முறைபட நல்ல ஆட்சி
முகிழ்த்திட நேர்மை யோடு
சிறந்தநல் அறத்தை மேவும்
சீலரே வாழ்க நீவிர்.

சீர்பெற்ற இந்த நாடு
சிறப்பினில் தாழ்ந்த போது
பேர்பெற்ற பெரியோர் அந்தப்
பெருமைகள் இந்த நாட்டில்
வேர்விட்டுத் தழைக்க நல்ல
வெற்றிகள் வந்து சேர
ஊருக்கென் றுழைத்தார் அந்த
உத்தமர் போல நீரும்

சீரெலாம் பெறுதற் காகச்
சிறந்தநற் பணிகள் செய்தீர்
காரெனும் பெயர்கொண் டுள்ள
கருமேக மழைத்தண் ணீர்போல்
ஊருக்கும் தமிழர் நாட்டு
உயர்வுக்கும் உழைத்தீர் அந்த
சீர்போற்று கின்ருேம் உங்கள்
திறம்போற்றி வாழ்த்து கின்ருேம்.

வாழ்க பேராசிரியர் வளம் பல பெற்றே!

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ்விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

அறிவாற்றல் சான்ற எங்கள் மதிப்பிற்குரிய பேராசிரியர் க. அன்பழகனார் பொன்விழாக் காணுகின்றார் என்பதனையறியும்பொழுது அவருடைய மாணவச் செல்வங்களாகிய எங்கள் மனமெல்லாம் மகிழுகின்றன. நாடும் மொழியும் நற்றமிழர் இனமும் ஒரு முகமாகப் பாராட்டி மகிழும் பேராசிரியர் தம் பெருவாழ்வு இரு திறத்ததாகும்.

முதற்பகுதி வாழ்வு அரசியல் சார்ந்த இலக்கிய வாழ்வு; பிற்பகுதி இலக்கியஞ் சார்ந்த அரசியல் வாழ்வு. 1936-ஆம் ஆண்டிலேயே அதாவது தம்முடைய பதினைந்தாவது வயதிலேயே பகுத்தறிவுப் பாசறை — தன்மானத் தந்தை — ஈரோட்டுப் பெரியாரைக் கண்டார். தன்மரியாதை உணர்வும், பகுத்தறிவு எண்ணமும், முற்போக்குக் கொள்கைகளுங் கொண்டார். பின்னர் 1940-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களைச் சந்திக்கும் பேறுபெற்றார். பேராசிரியர் அவர்கள் வாழ்வில் ஒரு பெருந் திருப்பம் ஏற்பட்டது.

இவருடைய தந்தையார் திரு.மு.கல்யாண சுந்தரனார் பெரியார் அவர்களின் தன்மான உணர்வினைப் போற்றிப் பின்பற்றி நடப்பவர்; சுயமரியாதை இயக்கத்தோடு அடிநாள் தொட்டுத் தீவிரமாகத் தொடர்பு கொண்டிருந்தார். எனவே வாழையடி வாழையாக நம் பேராசிரியர் தம் குடும்பத்திலிருந்தே நல்லுணர்வுகள் வாய்க்கப் பெற்றார் எனலாம்.

1940-இல் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் (நீதிக் கட்சியின்) சிறந்த உறுப்பினராக அமைந்து நற்பணியாற்றனார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும்பொழுதே மிக நல்லமுறையில் நம் பேராசிரியர் சொற்பொழிவாற்றுவார். நம் மதிப்பிற்குரிய நாவலர் அவர்களும் நம் பேராசிரியர் அவர்களோடு உடன் படித்த காரணத்தால் மேடைப் பேச்சுத் துறைக்கு வந்தார். மாண்புமிகு மதியழகன் அங்குப் படிக்க வந்ததும் மாணவர் பேரியக்கமே அங்குத் தொடங்கித் திறம்படச் செயலாற்றியது.

பேரறிஞர் அண்ணா அவர்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அழைத்து தமிழிலும், ஆங்கிலத்திலும் சொற்பொழிவாற்றச் செய்தவர் நம் பேராசிரியர் ஆவர். பெருமதிப்பிற்குரிய நம் தமிழக முதல்வர் தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் தாம் நம் பேராசிரியர் அவர்களையும் நாவலர் அவர்களையும் தம் ஊருக்கு அழைத்துச் சொற்பெருக்காற்றச் செய்தார். அவ்விருவரையும் அக்கூட்டத்தில் அவையோருக்கு அறிமுகப் படுத்தி வைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவர்.

நீதிக் கட்சியிலிருந்து 1945-இல் திராவிடக் கழகமும், 1949-இல் திராவிடக் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகமும் தோன்றின. துடிப்போடும் செயலாண்மையோடும் நன்முறையில் தொண்டு செய்து வருபவர் நம் பேராசிரியர் ஆவர்.

கணீரென்ற குரலில் செஞ்சொற்களால் வாக்கியம் அமைத்து நயம்பட உரையாற்றுவதில் நம் பேராசிரியர் வல்லவர். எவ்வளவு நீளமான தொடர் அவர் பேச்சில் அமைந்தாலும் அதில் இலக்கணக் கட்டுக்கோப்பும்

ஓர் இசையொழுங்கும் பொருந்தக் காணப் படும். தெளிவாகவும் திட்பமாகவும் பாடம் நடத்துவதில் இவர் வல்லவர். இண்டர் மீடியட், பி. ஏ. போன்ற பெருவகுப்புகளில் இவர் பாடம் நடத்தும் பொழுது இவர் வாயி னின்றும் சொற்கள் குற்றால அருவி கோடை காலத்தில் புனலைக் கொட்டுவதுபோல் இருக் கும்; மாற்றுக் கட்சியைச் சேர்ந்த மாணவர் கள் விடுக்கும் வினாக்களுக்கும் தர்க்க ரீதியில் அவர்கள் மனங்கொள, அவர்கள் மறுத்து வேறொன்றும் பேச முடியாத அளவிற்கு இவர் தம் பேச்சு அமையும்.

நான் இறுதியாண்டு பி. ஏ. (ஆனர்சு) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது இவர் அரசியலில் தீவிரப் பங்கு கொண்டார். 1957 சட்டமன்றத் தேர்தலில் எழும்பூர் தொகுதியில் நின்று வென்றார்; சட்ட மன்ற உறுப்பினர் ஆனார். அப்போதும் எங்கள் விடைபெறு விழாவில் கலந்துகொண்டு பேசி எங்களையெல்லாம் மகிழ்வித்தார். தம்மிடம் பயின்ற மாணவர்களிடம் இவருக்கு எப் போதுமே ஓர் தனியான ஒட்டுறவு உண்டு. அவர்கள் வாழ்வின் முன்னேற்றத்தில் அக்கறை உண்டு. 1962 முதல் 1967 வரை சென்னைச் சட்டமன்ற மேலவை உறுப்பின ராகவும் 1967 முதல் 1971 வரை நாடாளு மன்ற உறுப்பினராகவும் 1971 முதல் மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக வும் விளங்கும் நிலையிலும் தம்மிடம் படித்த மாணவர்களைக் கண்டால் அவர்தம் நலம் உசாவி, வாழ்க்கை வளங்கேட்டு அமை பவர் நம் பேராசிரியர் ஆவர். எனவே குடும்பத் தலைவராக அமையும் பாச உணர்வினை நாம் அவரிடத்தே காணலாம்.

நம் பேராசிரியர்க்கு வாய்த்திருந்த வாழ்க்கைத் துணைவியார் திருமதி வெற்றிச் செல்வி அம்மையார் வள்ளுவர் காட்டிய வாழ்க்கைத் துணைநலத்தை மாட்சி பெறச் செய்தவர்கள். அவர்களால் நம் பேராசிரியர் வாழ்வு அரசியலில் மேலும் உரம் பெற்றது எனலாம்.

பேச்சு வன்மையும் எழுத்தாற்றலும் ஒரு சேர வாய்க்கப் பெற்றவர் ஒரு சிலரே எனலாம். பேரறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர் அவர் கள் போல நம் பேராசிரியர் அவர்களும் திறம் பட எழுதக் கூடியவர். 'வகுப்புரிமைப் போராட்டம்', 'கலையும் வாழ்வும்' 'அழகரசி', 'தொண்டா? துவேசமா?' 'உரிமை வாழ்வு' முதலான இவர் எழுதியுள்ள நூல்களும், இவர் 1947 முதல் 1948 வரை நடத்திய 'புதுவாழ்வு' என்னும் இதழும் இவர் எழுத்தாற்றலை விளக்கி நிற்பனவாகும்.

நம் பேராசிரியர் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவர்கள். அவர் உள்ளம் நினைப்பதை அவர் உதட்டிலிருந்து வரும் சொற்கள் வெளிப்படுத்தி விடும். சிறுமை கண்டு பொங்கும் பண்பு இவரிடம் எந்நாளும் உண்டு. தம் மனத்தில்பட்ட எண்ணத்தை ஒளிவு மறைவின்றி எந்த மேடையிலும் யார் முன்னிலையிலும் பிரதிபலிப்பார். எதிலும் ஓர் ஒழுங்கும் வரன்முறையும் கட்டுப்பாடும் இருக்க வேண்டும் என்பதில் இவர் கண்டிப்பானவர் ஆவர். அஞ்சா நெஞ்சம் இவர் தம் அழியாச் சொத்தாகும்.

இத்தகு நல்லியல்புகள் பல வாய்க்கப் பெற்ற நம் பேராசிரியர் அவர்கள் 19-12-1971 அன்று ஐம்பதாம் அகவை பிறந்த நாள் பெருஞ்சிறப்புப் பெறுகிறார்கள். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக முத்தான தமிழ்த் தொண்டினையும் அரசியல் தொண்டினையும் அயராது ஆற்றி வரும் நம் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் தமிழகத்தில் வாழ வேண்டும். அவர் வாழும் நாட்கள் தமிழகம் பல்லாற்றானும் பயனுறும் நல்ல நாட்களாகும். தமிழர்க்கு அவர் தொண் டினைத் துய்க்கும் நல்லூழ் வாய்ப்பதாகுக.

புன்முறுவலும் புரட்சியும்!



பண்பாகப் பழக வருவார்க்கு என்றும் இனியர்!

16—ஜூலை 1948



“புதுவாழ்வு” காண்பதற்கே இதழ்நடத்திப்
புதுநடையைப் புகுத்தியநல் எழுத்து வேந்தர்!”

நெஞ்சத்து அகநக நட்பது நட்பு.

கறையிலா வாழ்வே வாழ்க

க.இளங்கீரன் எம்.ஏ

உப்புக் கடலடியில் உருவாகி வருகின்ற
சிப்பி வாய்திறந்தால் செழுமுத்துத் தான்பிறக்கும்
கொள்ளை யழகுக் கோதையவள் வாய்திறந்தால்
கள்ளை நிகர்த்த காதலது தான்பிறக்கும்
கனிகுலுங்கக் காயுதவும் தளிரிலையின் பனிதுயிலும்
நனிமலர் வாய்திறந்தால் நல்லமணம் தான்பிறக்கும்
திருவானில் கருவாகித் திசையெலாம் தான்சுழலும்
கருமேகம் வாய்திறந்தால் கனமழை தான்பிறக்கும்
அழியாப் புகழ்சேர் அண்ணன் காட்டிய
வழியாய் வந்து வகையாய் வளர்ந்த
தண்டமிழ் ஆசான் தன்வாய் திறந்தால்
சண்டமாருதம் தான்வீசும் சாய்ந்திடுவர் எதிரிகளும்
குறுக்கு வழிசெல்லும் கொடுமதி கொண்டோர்க்கு
நறுக்குத் தெறித்தாற்போல் நல்லபதில் தான்பிறக்கும்
உடலால் மெலிவும் உள்ளத்தால் வலிவும்
கடல்போல் திறனும் கறையிலா வாழ்வும்
பால்போல் மனமும் பனிபோல் பார்வையும்
ஆல்போல் தழைத்து ஐம்பதாம் ஆண்டில்
நுழைந்திடும் அன்பே, நும்பணி சிறக்க
விழைந்திடு கின்றேன்; விருப்புடன் வாழ்த்துகின்றேன்
மக்கள் வாழ்வு மட்டிலா வளத்துடன்
தக்க வழியில் தரத்துடன் மலர்ந்திட
பொதுப்பணி புரிந்து பொற்றமிழ் வாழ
புதுப்பலம் பெற்றுப் புகழ்ந்திட வாழ்க!

பேராசிரியர் அன்பழகன்!

ரா. சீனிவாசன்
எம்.ஏ.,எம்.லிட்.,
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை

பெரியார் துவக்கி வைத்த பகுத்தறிவு இயக்கம் கழகமாக உருவெடுத்தது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அழகிய பெயரைத் தாங்கியது. அறிஞர் ஒருவரின் தலைமையில் கலைஞரையும் நாவலரையும் பேராசிரியரையும் மற்றும் பல செயல் வீரர்களையும் கொண்டு இக் கழகம் செயல்பட்டது. இக் கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இந் நால்வரைக் கொண்டே விளங்கியது எனில் மிகை இல்லை. அறிஞர் அண்ணா அவர்களின் அறிவும், கலைஞர் அவர்களின் கலைத் திறனும், நாவலர் அவர்களின் நாவன்மையும், பேராசிரியர் அவர்களின் பேச்சும் நாட்டில் எழுச்சியையும் விழிப்பு உணர்ச்சியையும் உண்டு பண்ணின.

'பேராசிரியர் அன்பழகன்' என்ற பெயர் இன்று தமிழகம் அறிந்த பெயராகும். அவர் பேராசிரியர் என்ற சிறப்புப் பெயர் பெறுவதற்குப் பச்சையப்பன் கல்லூரி நிலைக்களனாக அமைந்தது. அவரோடு பணியாற்றும் பெருமை வாய்த்த என்னைப் போன்ற ஆசிரியர்கள் அதைப் பற்றிப் பெருமை கொள்ள முடிகிறது.

பதின்மூன்று ஆண்டுகள் பச்சையப்பன் கல்லூரியில் பணி செய்தார்கள். அப்பொழுதே அவர் தனிப் பெருமை பட்டி தொட்டிகளில் எல்லாம் பரவியது. பச்சையப்பன் கல்லூரி உரிமை அளித்த கல்லூரி; திறமை வளர்வதற்கு எந்த வகையிலும் தடையாக இருந்தது இல்லை. டாக்டர் மு. வரதராசனர் இன்று மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர். திரு. அ. ச. ஞானசம்பந்தனர் இன்று மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர். பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் இன்று பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர்; பேராசிரியர் திரு. அன்பு கணபதி அவர்களும் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகத் திகழ்கிருர். இவர்களின் வளர்ச்சிக்குப் பச்சையப்பன் கல்லூரி பெரிதும் உதவி செய்துள்ளது. பச்சையப்பன் வரலாற்றில் டாக்டர் மு. வ. அவர்களும் ஞானசம்பந்தம் அவர்களும் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் பணி செய்து வந்தது மறக்க முடியாத நிகழ்ச்சிகளாகும்.

பேராசிரியர் அன்பழகன் நேர்மையும் ஒழுங்கும் கட்டுப்பாடும் மிக்க பேராசிரியர். அவர் வகுப்புக்களில் அவர் நா நலன், சொல்லாற்றல், பகுத்தறிவுக்கு ஒத்த விளக்கங்கள், தடையற்ற பேச்சு, எடுப்பான குரல், தாம் கூறுவதில் அசையாத நம்பிக்கை, பழமையைச் சாடிப் புதுமைக்குக் கொண்டு செல்லும் போக்கு இவை மாணவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன.

கல்லூரியில் மட்டும் அவர் சொற்பொழிவுகள் நடத்தவில்லை. அவர் பேசாத கல்லூரி மேடைகள் இல்லை; பேசாத கட்சிக் கூட்டம் இல்லை; பட்டி தொட்டிகள் இல்லை. எங்கும் அவர் சொற்பொழிவுகள் ஒலித்துக் கொண்டே இருந்தன. 'அன்பழகன்' என்ற பெயர் நாடறிந்த பெயராயிற்று. 'அன்பழகன்' என்ற பெயரே அவர் படைப்புத்தான். அதற்கு முன்னுல் இந்தப் பெயர் யாருக்கும் இருந்தது இல்லை. இன்று இருபத்தைந்து வயதுக்கு உட்பட்ட இளைஞர்களின் பெயர்களில் 'அன்பழகன்' என்ற பெயர் வழங்குகின்றது. இது ஒன்றே அவர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் உள்ளத்தைக் கவர்ந்த பேராசிரியர் என்று கூறுவதற்குச் சான்ருகும்.

பேராசிரியர் கந்தசாமி முதலியார் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த பொழுது திரு. அன்பழகன் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி ஏற்றார். அவர் ஒவ்வொரு வகுப்புக்கும் செல்லும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டார். அவர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணி யேற்றது தொழிற்காக அல்ல; பல மாணவர் களைச் சந்தித்து அவர்களிடம் எல்லாம் பகுத்தறிவு விளக்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதும், 'உரிமையும் கடமையும்' என்ற பொருள் பற்றி அவர்கள் அறிய வேண்டும் என்பதும் அவர் நோக்கமாக இருந்தது.

'உரிமையும் கடமையும்' என்ற பொருள் அவருக்குப் பிடித்தமான பொருள். நாட்டில் உரிமை வேட்கை எழ வேண்டும் என்பதும் ஆரிய நூல்களுக்கும் வட மொழிக்கும் தமிழர் கள் அடிமையாக இருத்தல்கூடாது என்பதும் கழகத்தின் ஆக்கமே நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோலுவது என்பதும் அவர் பரப்பி வந்த கொள்கைகள் ஆகும்.

திரு. அ. ச. ஞானசம்பந்தமும் திரு. அன்பழகனும் துறையில் நடத்தும் விவாதங் கள் மிக அழகாக விளங்கின. திரு. அ. ச. ஞா. பழமைக்கு விஞ்ஞானக் கண்ணோட்டம் தந்து நிலை நாட்டுபவர். அதே வாதங்களால் தாக்கி எதிர்க்கும் ஆற்றல் திரு. அன்பழகன் அவர் களிடம் காணப்பட்டது. சைவப் பழமாக அ. ச. ஞா. விளங்கினார். பகுத்தறிவு விளக் கத்திற்குப் பரிந்து பேசியவர் நம் பேராசிரியர். நகைச்சுவை இவர்தம் விவாதங்களில் தலை யெடுத்து விளங்கியது.

அன்பும் அழகும் அவரிடம் நிறைந்த பண்புகள். அவர் யாரையும் கடிந்து பேசிய தைக் கண்டதே இல்லை. சீற்றம் கொள்வர்; அஃது ஆற்றல் மிக்க பேச்சாக வெளிப்படும். தனிப்பட்ட முறையில் கடிந்து பேசியதைக் கண்டதே இல்லை. அன்பின் உறைவிடமாகத் திகழும் தலைவர்களுள் ஒருவர். அவர் 'அழகு' என்பதைப் பற்றி எடுத்துச் சொல்ல எழுத்துத் தேவையில்லை. ஐம்பதிலும் அவர் இளையரா கவே காட்சி அளிப்பது அவர் இளமை உள்ளத் திற்குச் சான்று ஆகும்.

உறுதியும் கலங்கா நெஞ்சும் பகைவரைச் சாடும் ஆற்றலும் விளங்கிய அவர் தோற்றத் திலும் பேச்சிலும் ஜனநாயகப் பண்பை இழந் ததே இல்லை. அவர் பணி செய்த பச்சை யப்பன் அறநிலையக் குழுவின் காவலர் ஒருவரே தேர்தலில் எதிர்த்து நிற்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது அரிய வாய்ப்பாகும். நேற்று வரை தாம் பணி செய்யும் நிறுவ னத்தின் தலைவராக விளங்கிய ஒருவரை இன்று நேர் எதிரியாகத் தேர்தல் களத்தில் சந்தித்தது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். தனிப்பட்ட முறையில் அவரை ஒரு சிறிதும் தாக்கிப் பேசியது இல்லை. கழகத்தின் கொள்கையைப் பேசியே அவர் வெற்றியைப் பெற்றார்.

பேராசிரியராகப் பணிசெய்த பொழுது அவர் பயின்ற சூழலை அவர் பெருமைப்படுத் தினார். அவர் உடையில் என்றும் அழகு மிளிர்ந் திருந்தது. அதில் ஓர் முழுமை விளங்கியது. பல பேராசிரியர்களின் கருத்துக்களை மிகக் கண்ணியமாக எதிர்த்துப் பேசி இருக்கின்றார்.

சொற்களை அவர் தேடிச் செல்வதில்லை. சொற்கள் அவரை நாடி வருகின்றன. சிறு வாக்கியங்கள் அவருக்குப் பேசத் தெரியாது. இலக்கியம் படிப்பதுபோல இருக்கும் அவர் நீண்ட வாக்கியங்கள். மேடைகளில் அவர் பேசும் பொழுதும் சரி, மாநாடுகளில் அவர் விளக்கங்கள் தரும் பொழுதும் சரி, நீண்ட சொற்பொழிவுதான் அவரால் பேச முடியுமே யன்றிச் சுருக்கமாக எதையும் சொல்லத் தெரியாது. வகுப்புக்களில் ஒரு மணி நேரம் பேசிப் பழக்கம். அவ் வகுப்புக்களில் தோற்றம் தொடர்பு முடிவு அமைய அவர் பேச்சு விளங்கியது. பாராளுமன்றம் அவர் பேச்சின் உண்மையை உணர்ந்தது. கல்லூரி அறை களிலும் நாட்டுப் பொது மேடைகளிலும் பேசிப் பழகிய இவர் பாராளு மன்றத்தின் ஒரு கட்சித் தலைவராகவே விளங்கிப் பணியாற்றியது மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். இவ்வளவு அனுபவம் நிறைந்த இப் பேராசிரியர் அமைச்சர் குழுவில் இருந்து பணியாற்றுவது நாட்டுக்கும் கழகத்திற்கும் பெருமை தரத்தக்க ஒன்றாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் பேராசிரி யர்க்கு அரசியல் ஆசிரியர். அவர் அறிவின் ஒளி நம் பேராசிரியரை அரசியலுக்கு இழுத்துச் சென்றுவிட்டது. இல்லாவிட்டால் அவர்தாம்

இன்றும் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர். அவர் கீழ்ப் பணி செய்யும் பெருமை எங்களுக்குக் கிடைத்திருக்கும். அரசியல் அவரை இழுத்துக் கொண்டது என்றாலும் அவர் ஒரு பேராசிரியர் என்பதை நாடு மறக்கவில்லை. பேராசிரியராக யார் வேண்டுமானாலும் திகழலாம்; அமைச்சராக விளங்கும் தகுதியும் பெருமையும் ஒரு சிலருக்கே வாய்க்கும்.

வாழ்க மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் என்று வாழ்த்துகிறது எங்கள் மனம்; பெருக அவர் தொண்டு; வளர்க அவர் புகழ் எனப் பேசுகிறது பச்சையப்பன் கல்லூரி; அறிஞர் அண்ணா அவர்கள் பயின்ற கல்லூரியில் அவர் அடிக்கடி அதைச் சொல்லிப் பெருமைப்படுவது உண்டு. பேராசிரியர் அன்பழகன் எங்கள் கல்லூரியில் பணியாற்றியதை நாங்கள் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்ப் புலவர்கள் நாட்டு மனநோய்க்கு மருந்துகள் கவிகளின் வாயிலாகச் சொல்லி இருக்கிறார்கள். தமிழ்ப் பேராசிரியர் மருத்துவத் துறைக்குத் தலைமை வகித்து மக்கள் உடல் நோயைப் போக்கும் பணி போற்றுதற்கு உரியது.

வாழ்த்து!

டாக்டர், ந. சஞ்சீவி,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

கூரியர் கூற்றிலே கோள்கைவாழ் சீரியர்
வீரியர் தோண்டிலே வீங்குபுகழ்—வாரியர்
அன்பழகர் என்பரவர் அன்பறிந்தார்! வாழ்கவே!
போன்னேனஎன் ஆசான் போலிந்து!



ஐம்பதாம் அகவையோ!
நம்ப முடியவில்லை!

சென்னை மாநகர் வாழ்த்து!

நீதிக் கட்சி! நீள் வரலாறு!

பொன்விழா நாளில் பொன்னான அண்ணனுக்கு அஞ்சலி!

அண்ணனின் தம்பியர்! ஆட்சியின் அணிகலன்கள்!



அந்தநாள் ஆசிரியக் கோலமோ!

தோழரும் கொள்கை வழித் துணைவரும்!

முல்லை உள்ளம்!

கா.வேழவேந்தன், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.,

முல்லைப்பூ வெள்ளை உள்ளம்!
முருங்கைபோல் ஒடிந்த தேகம்!
வெல்லத்தை வெல்லும் சொற்கள்!
வெண்ணிலாக் குளிர்ச்சிக் கண்கள்!
தொல்லையே கொடுக்காப் பண்பு!
தொண்டர்க்குப் பணியும் போக்கு!
அல்பகல் உழைக்கும் நேர்மை!
ஆம், 'அன்புக் கழகர்' நீங்கள்!

'உரிமையின் வாழ்வு' பற்றி
ஒப்பற்ற நூலைத் தந்தீர்!
அரும்'அழ கரசி' என்னும்
அற்புதப் புதினம் செய்தீர்!
'வரும்; மேலும் வருமா?' என்றே
வந்துள்ள கூட்டம் ஏங்க
கரும்பான சொல்ல டுக்கிக்
கருத்தெலாம் எடுத்து வைத்தீர்!

ஓய்வெனில் பாசி தேடி
ஒடுங்கிடும் மீன்கள்! காட்டில்
பாய்கின்ற மான்க ளைத்தால்
பதுங்கிடும் புதரைத் தேடி!
தாய்த்தமிழ் கோட்டை ஆளச்
சளைக்காமல் உழைத்த அண்ணா
ஓய்வென்றால், கவலை யென்றால்
உமதில்லம் வந்தார் அன்றோ?

வள்ளுவர் நெறியைப் பற்றி
வகுப்பறைக் குள்ளே சொன்னீர்!
உள்ளதோர் சாதி நோயை
ஓட்டிட மருந்து தந்தீர்!
தெள்ளிய தமிழ கத்தில்
தி.மு.க. ஆளும் போது
கொள்ளைநோய் ஓட்டி, வாழ்வின்
குறைபோக்கும் அமைச்ச ரானீர்!

அண்ணாவின் நிழலே! எங்கள்
அகத்துள்ள சிமிழ்வி ளக்கே!
வெண்கலக் குரலே! நாளும்
விரைந்தோடும் உழைப்புத் தேரே!
எண்ணத்தில், செயலில் எல்லாம்
எதையுமே மறைத்தி டாத
கண்ணியச் சுடரே! நீங்கள்
காலத்தை வென்று வாழ்க!

படைத் தலைவா! வாழ்க!

புறப்பட்டுச் சிறக்கும் வண்ணம் பொருளுரைக்கும் பேரா சானாய்ப்
புறப்பட்டுப் பொய்மை மிக்க போலிகள் தந்த துன்பம்
அறப்பாட்டுப் பாட வென்றே அரசியலில் நுழைந்த மைச்சர்
பொறுப்பேற்ற பொருள்போ திந்த புறப்பாட்டின் தலைவா வருக!

திக்கெட்டும் வெற்றி கொண்ட தீந்தமிழர் வீரம் குன்றி
வக்கற்று நின்ற போது வழிகாட்டி யாக நின்று
சிக்ககற்ற வந்த செம்மல் கீர்த்திமிகு அண்ணா தன்னின்
பக்கத்தே அணிவ குத்த படைத்த லைவா வருக! வாழ்க!!

— கருமாண்டி செல்லிபாளையம் பொதுமக்கள்
சார்பில் வாசித்தளித்த வரவேற்பு வாழ்த்திதழில்
ஒரு பகுதி. 29—9—'71

அண்ணாமலை அளித்த அறிவுச் சுடர்!

மு. விஸ்வநாதன், எம். ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், வேலூர்.

சில ஆண்டுகளுக்கு முன் பண்டித நேரு இலண்டன் மாநகரம் சென்றிருந்த காலை, பத்திரிகை நிருபர்கள் அறிஞர் பெர்னுஷாவைச் சந்தித்து "நேருவைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

"ஒரு சம காலத்துப் பெரியாரைப் பற்றி அபிப்ராயம் சொல்ல நாம் யார்? அதைப் பிற் காலத்துக்கு விட்டுவிடுங்கள்" என்று பதிலளித் தார் ஷா. ஓர் அரசியல்வாதியை அவருடைய வாழ்நாளில் சரியாக மதிப்பிட்டு எழுதுவதில் உள்ள சிரமத்திற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. எனினும் என் மனம் என் பேராசிரியரைக் குறித்து எழுது எழுது என்று மூன்று திங்களாக என்னை வற்புறுத்துகிறது.

அன்பழகன்; எவ்வளவு அழகிய பெயர்; அன்பிலே வடித்தெடுத்த ஆனந்த ஓவியம்; இன்றைய தமிழரின் இன்பக்கனவு! இருதய கீதம். அன்பு தமிழரின் பண்பு. அழகு தமிழ ரின் உணர்வு; பண்பும் உணர்வும் ஒருங்கே அமைந்த ஓவிய உயிர்; நடுத்தர உயரம். அதிகமாகப் படித்து அதிகமாகப் பேசுவதால் மெலிந்த உடல்; அறிவுத் தீட்சண்யத்தை வெளிப் படுத்தும் அகன்ற நெற்றி; ஆழ்ந்த சிந்தனையில் மிதக்கும் பெரிய கண்கள்; அழகுக்கு அழகு செய்வதுபோல் கண்களுக்கு அணிசெய்யும் கண்ணுடி; ஆட்களைக் கவரும் எடுப்பான மூக்கு; கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல்; வசீகரமான குரல்; உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பதற்கேற்ப 'கிராப்பு'த் தலை; தலையை அடர்ந்த முடி அழகு செய்கிறது; புன் முறுவல் பூத்த முகம்; திறமைக் கடல்; பகுத் தறிவு இயக்கத்தூண்; பைந்தமிழ்க் கலைமான்; சிறந்த சிந்தனையாளர்; எழுச்சியின் பிறப்பிடம்; எளிமையின் இருப்பிடம்; அண்ணாமலைப் பல் கலைக்கழகம் தந்த அறிவுச் சுடர்; ஏழை பங்காளர்; தொழிலாளர் தோழர்; பாட்டாளி களின் பந்து மித்திரர்; சீர்திருத்தச் செம்மல்; தமிழ்நாட்டுக்குத் தொண்டு செய்வதையே தம் பேச்சாகவும், மூச்சாகவும் கொண்ட செயல் வீரர்; தகுதியும் திறமையும் படைத்தவர்; அஞ்சா நெஞ்சினர்; ஆற்றல் மிக்க அறிஞர்; கொள்கை வீரர்; எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் இயல்புடையவர்.

தமிழில் தேர்ந்த புலமை பெற்றவர்; கல் லூரியில் முறையாகப் பயின்று எம். ஏ. பட்டம் பெற்றவர். பச்சையப்பன் கல்லூரியில் பன் னீராண்டு தமிழ்த் துறையில் பணியாற்றியவர். அருவி பொழிவதைப்போல் அவர் பேசும் தமிழ்ப் பேச்சு எலும்புகளையும் துடிக்கச் செய்யும். அவரது உணர்ச்சி கலந்த அரசி யல் பேச்சுக்கள், புரட்சிக்கனல் கக்கும் பெற்றிமை உடையன. பொருள் பொதித்த அவரது பேச்சில் தெளிவு இருக்கும்; அவர் உள்ளத்திலிருந்து எழும் சந்தர்ப்ப உணர்ச்சிக் கேற்பச் சொற்கள் சரளமாக வெளிவந்து கொண்டிருக்கும்.

கல்வியில்லாமல் நாட்டுக்குப் பணிபுரியப் போனவரல்லர்; கலைக்கல்லூரியில் இறுதி வரை பயின்று பட்டம் பெற்றவர்; தொழில்

இல்லாமல் தேசத்நொண்டு செய்யப் புறப்பட்ட வர் அல்லர் அவர்; ஆசிரியத்தொழிலை அருமை யாக ஆற்றிவந்தவர்; வருமான மின்மையால் நாட்டுப் பற்றுக் காட்ட புறப்பட்ட போலி தேசீயவாதிகளைச் சேர்ந்தவர் அல்லர் அவர்; தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற்றுவந்த வர். 150 ரூபாய்க்கு ஆசைப்பட்டுச் சட்ட சபைக்குச் சென்றவர் அல்லர் அவர்; அதற் கும் மேல் ஆசிரியத் தொழில் அள்ளி வழங்கி யது; புகழுக்கும் பெருமைக்கும் விருப்பப்பட்டுப் பொதுத் தொண்டு புரியப் புறப்பட்டவர் அல் லர் அவர். எவ்வளவு தொண்டு புரிந்தாலும் பத்திரிகைகள் பாராட்டாத கட்சியைச் சேர்ந்த வர் அவர். மேதா விலாசத்தைக் காட்ட 'மேடை' ஏறினவர் அல்லர் அவர். பொது நலத் தொண்டாற்றவேண்டும் என்ற புனித எண்ணத்துடன் பேசும் போக்கினர்.

1962 தேர்தலில் அண்ணுவின் அருமைத் தம்பி என்பதை மெய்ப்பிப்பதுபோல் அன்பழ கன் தோற்றுக் காட்டினுர். பின்னர் மேலவை உறுப்பினராகி அரும்பணியாற்றினுர்.

1967 தேர்தலில் பாராளுமன்றத் தேர்த லுக்குத் திருச்செங்கோடு தொகுதியில் நின்று வெற்றிவாகை சூடினுர். பிறந்த தொகுதியும் அல்லாமல் வாழ்கின்ற தொகுதியும் அல்லாமல் புதிய தொகுதிக்குச் சென்று பெரிய தொகுதி யாகிய பாராளுமன்றத் தொகுதியில் நின்று வென்றது கழகத்தின் செல்வாக்கு மட்டுமல்ல பேராசிரியரின் தனிப்பட்ட செல்வாக்கும் காரணமாகும். பாராளுமன்றத் திராவிட முன் னேற்றக் கழகக் கட்சித் தலைவராக இருந்து 25 பாராளுமன்ற உறுப்பினர்களை வழி நடத் திச் சென்ற சிறந்த ஜனநாயக வாதிகள் திரா விட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் — அதைவிட — சிறந்த பாராளுமன்ற வாதிகள் என்ற பெருமையைக் கழகத்துக்குத் தேடித் தரக் காரணமாய் நின்ருர்.

1971 தேர்தலில் சட்டமன்றத்துக்கு நின்று வெற்றி பெற்று அமைச்சரானுர். தமக்கு உற்ற துணைவி வெற்றிச் செல்வியை இழந்து தவித் தாலும் அரசியல் அரங்கில் வெற்றிச்செல்வியை மணந்து மகிழ்கிருர்.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் அரசியல் அரங்கில் மனத்தில் பட்டதை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்று கூறக்கூடிய இயல்பினர். தவறு கண்ட இடத்து, தவறு செய்தவர் யாராகிலும், அவரால் எப்படிப்பட்ட தீங்கு தமக்கு விளையும் என்ருலும் விளைவுபற்றிக் கவலைப்படாது தவற்றை அப்பொழுதே சுட்டிக் காட்டித் திருத்தக் கூடிய சீர்திருத்தவாதி. கைராசி மிக்க கலைஞர் கருணநிதி இவரிடம் மருத்துவத் துறையைத் தந்துள்ளார். அறிஞர் அண்ணு அண்ணுமலைப் பல்கலைக்கழ கத்துக்குச் சென்றபொழுது அண்ணுவின் பாச வலையில் முதலில் சிக்கிக்கொண்டவர், அன்ப ழகன் என்பதை அண்ணு அவர்கள் பலமுறை சொல்லி மகிழ்ந்திருக்கிருர்.

காந்தி சொன்னுர்: ''அரசியல்வாதிக்குத் தனிப்பட்ட வாழ்க்கை வேறு; பொது வாழ்க்கை வேறு என்பதில்லை'' என்று. இப்பொன் வாக் குக்கு எடுத்துக்காட்டு பேராசிரியர் அன்பழ கன். அத்தகைய அண்ணுமலை அளித்த அறிவுச் சுடராம் பேராசிரியர், பச்சையப்பன் ஒளிபெற்று அரசியல் வானில் உதயதாரகை யாகத் திகழ்கிருர்.

இவ்வளவு பெருமைக்குரிய 'நல்வாழ்வுத் துறை அமைச்சர்' 'நிறை வாழ்வு' பெற்று வாழ அவரது அரை நூற்ருண்டு விழாவான 'பொன்விழா' ஆண்டில் வாழ்த்துகிறேன்.

நறுமண இதழ்ப்பெண்ணே உன் நலம் காணுர் ஞாலம் காணுர்!



அடிசிற் கினியாரும் அவர்தம் அன்புடையாரும்

பெருமைக்குரிய பேராசிரியர்!

முருகு. சுப்பிரமணியன் ஏ.எம்.என்.,
ஆசிரியர், தமிழ்நேசன்
கோலாலம்பூர்

தமிழக அரசின் சுகாதார அமைச்சரான பேராசிரியர் மாண்புமிகு அன்பழகன் அவர்களுக்கு ஐம்பதாண்டு நிறைவுப் பொன்விழா கொண்டாடப்படுவது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

என்பால் நெடுகிலும் உழுவலன்புமிக்க அமைச்சர் அன்பழகன் அவர்களுக்கு என் இனிய நல்வாழ்த்துக்களையும் மலேசியத் தமிழ் மக்களின் நல்வாழ்த்துக்களையும் இந்நாளில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க காலச் சிற்பிகளில்—அண்ணாவின் நம்பிக்கைக்குரிய தம்பிமார்களில் — அன்பழகனுருக்கு என்றும் சிறப்பிடம் உண்டு. முதலமைச்சரான பின்னரும்கூட மாண்புமிகு கருணாநிதி அவர்கள் "கலைஞர்" என்று தமிழக மக்களால் அன்பாக அழைக்கப்படுவது போல் அன்பழகன் அவர்களும் அன்றும் இன்றும் என்றுமே "பேராசிரியர்" என்று அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றவராவார்.

தி. மு. கழகத்தின் இன்றைய அரசோச்சும் நிலைக்கு அன்று வித்திட்ட அருந்தொண்டர்களில் ஒருவரான அன்பழகன் அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலம் தொட்டுப் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய காலம் வரையில் மாணவர் பாசறைகளையும் கல்லூரிகளையும் கழகத்தின் மாபெரிய கோட்டைகளாக மாற்றியமைத்த மகத்தான பெருமையுண்டு.

மலேசியாவுக்கு வருகை புரிந்தபோது மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கு வரவேற்பு நல்கிச் சிறப்புச் செய்தோம். பெருந்திரளான மக்கள் கூடியிருந்த அக் கூட்டத்தில் பேராசிரியர் நிகழ்த்திய உரை இன்றும் பசுமையாக இங்குள்ள அன்பர்களின் மனத்தில் நிழலாடிக் கொண்டிருக்கிறது. கடல் கடந்த தமிழ் மக்களின் எதிர்காலம் அவர்கள் வாழுகிற நாடுகளில் உறுதியாகக் காலூன்றுவதிலேயே அடங்கியிருக்கிறது என்னும் கருத்தைப் பெருமைக்குரிய பேராசிரியர் அன்று அழுத்தமாக வலியுறுத்தினர்.

அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் பேராசிரியர் அரசியலில் மேலும் சீரும் சிறப்புமாகப் புகழொளியோடு — நற்பேறுகளோடு— உடல் நலத்தோடு — பல்லாண்டு இனிதே வாழ்வாங்கு வாழ என் மனமுவந்த நல்வாழ்த்துக்களை அன்னருக்கு உரிமைப்படுத்துகிறேன்.

வாழ்க!

சி. தேவராசன், எம்.ஏ., தமிழ் விரிவுரையாளர்,
ஊரிசுக் கல்லூரி, வேலூர்.

விண்பழகு சீர்த்தி வளத்தமிழில் நெஞ்சோடு
கண்பழகும் பேற்றில் திளைப்பவனே!—அன்பழக!
அண்ணன் புகழ்போல், அகல்வான நீட்டம்போல்
மண்மீதில் வாழ்க மலர்ந்து!

கொச்சையப்பர் ஆண்டக்கால் காணும் தமிழரெலாம்
பிச்சையப்பர் ஆன பிழைகண்டு—பச்சையப்பர்
கல்லூரி விட்டே களத்தில் குதித்தனை, நீ!
வல்லூறு நீங்கியதே வான்!

பாராளு மன்றில் புலித்தமிழர் போர்ப்படைமுன்
சீராளன் நீநின்ற செம்மையினால்—ஏரார்
தமிழ்நாடும் அண்ணன் தலைமையிலே ‘சென்னை’,
தமிழ்நாடா யிற்றே! சிறப்பு!!

பொன்பழகு மேனியன்நீ, பைந்தமிழ்க்காய்ப் போராடிப்
புண்பழகு மேனிப் புறங்கொண்டாய்!—அன்பழக!
வீறாண்ட நெஞ்சோடு, வெற்றி மரபோடு
நூறாண்டும் வாழ்க நிறைந்து!

புலத்துறை முற்று புலவ, நீ “மக்கள்
நலத்துறை” நாட்டம் நிறைந்தாய்!—நிலத்துறையும்
நாளெல்லாம் மக்கள் நலம்நிறைய உன்குறிக்
கோளெல்லாம் செய்து குவி!

நிலை குலைந்த மலை!

டி.எஸ்.கல்யாணசுந்தரம்
திருத்துறைப்பூண்டி

அன்பின் உருவம், ஆர்வத்தின் உறைவிடம், இன்ப ஊற்று, ஈகைச்சின்னம், உண்மைக் களஞ்சியம், ஊக்கத்தின் பிறப்பிடம், எழுச்சிமுரசு, ஏற்றத்தின் இருப்பிடம்! ஆம், அவர்தாம் நாற்பத்தொன்பது ஆண்டுகளைக் கடந்து ஐம்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் ஒளிவிளக்கு; ஓயாது உழைக்கும் உத்தமர்; தமிழகத்து மக்களுக்கு வாழ்வளிக்கும் ஔடதம்; மக்கள் பிணி தீர்க்கும் மருத்துவர்; மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராய், காட்சிக்கெளியவராய், கடுஞ்சொல் கூறாதவராய் விளங்கிவரும் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் ஆவார்கள். அவருடன் கழகம் துவங்கிய காலமுதல் ஏறத்தாழ இருபது ஆண்டுக்கு மேலாக நான் நெருங்கிய தொடர்பு கொண்டு தஞ்சை மாவட்டத்தின் பட்டி, தொட்டிகளுக்கெல்லாம் கால்நடையாகவும், சைக்கிள் மூலமாகவும், மாட்டு வண்டிகளிலும், காரிலும் சென்று கழகப் பிராச்சாரங்களை நடத்தி அவர்களது சொற்பொழிவினைப் பத்திரிக்கைகளுக்கெல்லாம் எழுதி அனுப்பிப் பழகியவன். 1957 ஆகஸ்டு 31 சனிக்கிழமையன்றுதான் அவர்களது சீரிய தலைமையில் நான் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழாவினை ஏற்றுக்கொண்டேன். அன்றுமுதல் பேராசிரியர் அவர்கள் எனது குடும்பத்துக்கே தலைவராகவும் என் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்கி என்னைப்பல வகைகளில் பெருமைப்படுத்தி வருகின்றார்கள். அவர்க்ள் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராக, கழகத்தின் மிகச் சிறந்த சொற்பொழிவாளராக, கழகத்தின் தொழிற் சங்கச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, மேலவை உறுப்பினராக, பாராளு மன்றக் குழுத் தலைவராக, பல்வேறு நிலைகளில் பணியாற்றுகிறபோது எப்படி நண்பர்களிடம் பழகினாரோ அதேபோல்தான் இன்று அமைச்சராகியும் பழகுகிற அளவுக்கு இயல்பான மன உணர்ச்சியைப் பெற்றிருக்கின்றார்கள். அவரைப் போன்றவர்களில் அத்தகைய மனத்திட்பத்தைப் பெற்றவர்கள் மிகச் சிலரே.

இவ்வளவு நற்குணங்களை அவர் பெற்றிருந்தாலும் தம் குடும்பத்தினராயினும், நெருங்கிய நண்பர்களாயினும், உறவினர்களாயினும், கழகத் தோழர்களாயினும், யாராயினும் சரி, நியாயத்திற்கும் நேர்மைக்கும் புறம்பாக யாருக்கும் அவர் சலுகை காட்டியதில்லை. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல் பேராசிரியர் அவர்கள் தம் மனத்தில் சரி எனப் பட்டதை ஒளிவு மறைவு இன்றி யாருடைய அச்சத்திற்கும் ஆட்படாமல் தயவு தாட்சண்யமின்றிப் பளிச்சென்று சொல்லக்கூடியவர். 1957–இல் அவர் முதன் முறையாகச் சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டபோது 'நான் ஒழுங்காகவும், நேர்மையாகவும், சட்டமன்றத்தில் பணியாற்றுவேன் என்று பொது மக்களாகிய நீங்கள் நம்பினால் எனக்கு வாக்களியுங்கள்' என்றுதான் மக்களிடம் கேட்டுக்கொண்டார். அவர் வெற்றி பெற்றுச் சட்ட மன்றம் சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவராகப் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ் ஆற்றியுள்ள அரும் பணியினை யாரும் எளிதில் மறந்து விட முடியாது.

1962 தேர்தலில் அதே எழும்பூர்த் தொகுதியில் மீண்டும் கழக வேட்பாளராகத் திருமதி

சோதி அம்மையார் அவர்களுடன் போட்டி யிட்டபோது அவரது ஐந்தாண்டுச் சட்ட மன்றப் பணிகளைப் புத்தகமாக அச்சிட்டுத் தொகுதி மக்களுக்கு வழங்க வேண்டுமென்று நானும் எங்கள் குலவிளக்கும் — குடும்பத் திலகமும் — ஆக விளங்கிய வெற்றிச் செல்வி அண்ணியார் அவர்களும் முடிவு செய்து அதற் கான துவக்க முயற்சிகளில் ஈடுபட்டபோதும் அதை மறுத்து இந்தத் தொகுதி மக்கள் என் பொதுத் தொண்டினையும் செய்துள்ள பணிகளை யும் உணர்ந்து வாக்களித்தால் அளிக்கட்டும்; அளிக்காவிட்டால் அதற்காக நான் வருந்தப் போவதில்லை என்று சொல்லி அதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டார்கள். அந்தத் தேர்த லில் பொதுக் கூட்டங்களில் பேசும் போதும் தனித்தனியாகக் கழகத் தோழர்களிடம் பேசும் போதும், 'எனது ஐந்தாண்டுக்காலப் பணியினை எந்த அளவுக்கு மக்கள் தெரிந்து கொண்டிருக் கிறார்கள் என்பதை அறியவும் மக்களது மனப் பான்மையைப் புரிந்து கொள்ளவும் தான் நான் சட்ட மன்றத்திற்குப் போட்டியிடுகின்றேனே தவிர, எப்படியாவது சட்டமன்ற உறுப்பின ராகிவிட வேண்டும் என்பதற்காக அல்ல என்றும் வெற்றி வாய்ப்புகள் பாதிக்கப்பட்டு வெற்றி பெறத் தவறினால் ஆசிரியப் பொறுப் பினை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வேன்' என்றும் ஆணித்தரமாகவும், உறுதியாகவும் பேசி னார்கள். பொது வாழ்க்கையில் எதைச் செய்தாகினும் எப்பாடுபட்டாகினும், எதை இழந்தாகினும் வெற்றி பெற்றேயாக வேண்டும் என்ற எண்ணம் வேகமாக அரசியல் அரங்கில் மலிந்துள்ள நிலையில் பேராசிரியர் அவர்களின் போக்குக் குறித்து ஒரு வகையில் அதிர்ச்சியும், மற்றொரு வகையில் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

1962 தேர்தலில் பேராசிரியர் அவர்கள் வெற்றி வாய்ப்பினை இழந்த செய்தி அறிவிக்கப் பட்டபோதும் அவர் மனம் கலங்காமலும், நிலைகுலையாமலும் மனம் கலங்கிய என் போன்றவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறிக் கொண்டும் அதே வேளையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சித் தொகுதியில் வெற்றி பெறத் தவறியதற்காக வருந்திக் கொண்டிருந்த சமயம் காஞ்சி தந்த கருவூலம் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடிப்பிசைப் புலவர் காலஞ்சென்ற K. R. ராமசாமி அவர்கள் இல்லத்திலிருந்து பேராசிரியருக்கு "போன்" செய்து 'நான் காஞ்சியில் தோல்வி யடைந்த தைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. நீயா வது இருந்து சட்டமன்ற நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வாய் என்று நம்பி யிருந்தேன். உன் நிலையும் இப்படி ஆகி விட்டதே' என்று வருந்தியபோது, பேராசிரியர் அவர்கள் குறுக்கிட்டு நீங்களே இல்லாத இடத் தில் நான் இருந்து என்ன செய்து விடப் போகிறேன் என்றும் தாங்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம் என்றும் நாவலர் வெற்றி பெற்றிருக்கிறார்; நாம் சட்ட மன்றத்தில் இடம் பெறாத குறையை அவர் ஈடுகட்டுவார்; நாம் வெளியிலிருந்து கழகப் பணிகளைக் கவனிப்போம் என்றும் அவர் அண்ணா அவர் களுக்குக் கூறிய சொற்கள் இன்றும் என் காது களில் ஒலித்துக் கொண்டுள்ளன.

பின்னர் என்போன்ற நண்பர்களின் ஓயாத வற்புறுத்தலுக்கிணங்க அண்ணா அவர்களின் சம்மதத்துடன் சென்னை—செங்கற்பட்டு ஆசிரி யர் தொகுதியில் போட்டியிட்டுப் பெருவாரி யான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மேலவை உறுப்பினராக அங்கும் சிறப் பாகப் பணி யாற்றினார்கள். 1967 தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியில் பாராளுமன்றத் துக்குப் போட்டியிட்ட போதும் அவர் பேசு கிற பொதுக்கூட்டங்களில் 'நான் இத்தொகுதி யில் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் ஈடுபடவில்லை என்றும் தி. மு. கழகத்தின் சட்டமன்றப் பணிகளையும், சாதனைகளையும் எந்த அளவுக்கு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் அவற்றை எடுத்து விளக்கவும், விளக்குவதின்மூலம் இப்பகுதிகளில், குறிப்பாக, திருச்செங்கோடு தொகுதிக்குள் அடங்கிய சட்டமன்றத் தொகுதிகளிலும், அதையொட்டிச் சேலம் மாவட்டத்தில் போட்டியிடும் கழக நண்பர்களின் வெற்றிக்குப பணியாற்றவே அறிஞர் அண்ணா அவர்கள் என்னை அனுப்பி யிருக்கிறார்கள் என்றும் அத்றகாகவேதான் நான் போட்டியிடுகின்றேனே தவிர என்னு டைய வெற்றிக்காக மட்டும் அல்ல' என்றும் ஆணித்தரமாகவே எல்லாக் கூட்டங்களிலும் பேசினார்கள்.

இப்படி எல்லாக் கட்டங்களிலும் மலை குலைந் தாலும் நிலை குலையாதவர் என்ற வகையில் பெருமை பெற்றவர் பேராசிரியர் அவர்களா

வார்கள். இத்தகைய குணக் குன்று, கொள்கைக் கோமான், பேராசிரியர் அவர்களே, அவரது வாழ்வில் நிலை குலைந்த காட்சி நடக்கத்தான் செய்தது. இயற்கையின் சூழலை யார்தான் தவிர்க்க முடியும். அதற்குப் பேராசிரியர் அவர்களும் விலக்கல்ல. வாழ்க்கைத் துணைவியார் திருமதி வெற்றிச் செல்வி அவர்களைப் பிரிந்த அன்று அவர்களது கலங்காத உள்ளமும் கலங்கி, கண்கள் குளமாகி, என்னிடம் 'கல்யாணம், நான் தைரியமாக இருக்கத்தான் முயல்கிறேன், ஆனால் என்னால் முடியவில்லை' என்று சொல்லிய காட்சியை எண்ணும்போது இன்றும் என் நெஞ்சு வெடித்து விடும் நிலையில் உள்ளது. அவருடன் நிழல் போல் பழகி அவரது உள்ளப் பாங்கினைப் புரிந்து கொண்டவன் என்ற நிலையில் ஓரளவு மனத்திட்பம் பெற்றிருந்த நானும் அக்காட்சியைக்கண்டு அதிர்ச்சி யடைந்ததோடு மட்டுமல்லாமல் எதற்கும் அஞ்சாத அவர்களே கலங்கினால் அவருக்கு யார் ஆறுதல் கூற முடியும்? அவரது பொது வாழ்வின் பிற்பகுதி இருண்ட அத்தியாயமாக ஆகிவிடுமோ என்றே அஞ்சினேன்; ஆனால் நமது தமிழகத்தின் தவப்புதல்வரும் கழகத்தின் வழிகாட்டியுமான கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணியார் படத் திறப்பு விழாவின்போது பேசுகையில், 'நாங்களெல்லாம் கூடியுள்ள உங்களுக்காகப் பேசுவோம்; எழுதுவோம்; பேராசிரியர் அவர்கள் எங்கள் போன்றவர்களுக்காக எழுதக்கூடியவர், பேசக்கூடியவர்; எனவே அவருக்கு ஆறுதல் கூறக்கூடிய நிலையில் நான் இல்லை. மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற கடமையை உணர்ந்து அவர்களாகவே துன்பச் சூழலிலிருந்து விடுபட்டு மக்களுக்குத் தொண்டாற்ற, காலப் போக்கில் முன் வரவேண்டுமென்று—அறிவுரை அல்ல—வேண்டுகோள் விடுக்கிறேன்' என்றார்கள்.

நான் சில திங்களுக்குமுன் அமைச்சர் பேராசிரியர் அவர்களுடன் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை, செங்கம் பகுதிகளுக்குச் சென்றபோது வழியில் உள்ள செஞ்சியில் தேசிங்கு ராஜன் கோட்டை போன்றவைகளையும், அப்பகுதியில் உள்ள மலைகளையும் பார்த்துக்கொண்டே சென்றேன். அப்போது அந்த மலைகளெல்லாம் கற்பாறைகளாக நொறுங்கிக் கிடந்ததைப் பார்த்து நான் பேராசிரியர் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளைவிடக் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் நீண்ட காலமான மலைகள் என்றும் வயது முதிர்வின் காரணமாக அவைகள் முதிர்ச்சியடைந்து நொறுங்கி விட்டன என்றும் விளக்கமளித்தார்கள். அவர்களது விளக்கத்தைக் கேட்டபோதுதான் நான் எண்ணினேன். கற்பாறைகளைக் கொண்ட மலைகளே வயது முதிர்வின் காரணமாக ஏற்படும் துன்பங்களைத் தாங்க முடியாமல் நிலைகுலைந்தபோது மனிதர்கள் துன்பங்கள் ஏற்படும்போது நிலை குலைவது சாதாரணமானதுதான் என்ற உணர்வினைப் பெற்றேன். ஆனால் நம் பேராசிரியப் பெருந்தகை தம்மைப்போல் துயருற்ற மக்களை எண்ணி அவர்களது துயர் துடைக்கும் பணியில் ஈடுபடவேண்டிய கடமையினை உணர்ந்து தம் துன்பத்தையும் மறந்து நிலை குலைந்த மலையாக நின்று விடாமல் நாட்டுப் பணியில் நாட்டம் கொண்டு செயலாற்றி வருகிறார்கள்.

ஐம்பதாண்டில் அடி எடுத்து வைக்கும் இவர் இன்று போல் என்றும் இளைஞராக—நோயற்றவராக—இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து, என் போன்ற எண்ணற்ற நண்பர்களுக்கும் ஊக்கமூட்டி வாழச்செய்து, அண்ணா அவர்களின் நேரிய நெறி முறைகளை மக்களுக்கு விளக்கி, மக்கள் தொண்டாற்றி வர வேண்டு மென்றே விரும்புகிறேன். இயற்கையின் துணை கொண்டு எங்களது இல்லத்தரசி—மறைந்த மாமணி—வெற்றிச் செல்வி அண்ணியார் அவர்களின் கனவுகளை நிறைவேற்ற நிமிர்ந்த நிலையில் நீடித்த நிறை வாழ்வு வாழ்வாரென்று நம்புவோமாக. வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் தொண்டு!!

பழம்புகழ் காத்தாய் வாழி!

திருமதி. சௌந்தரா கைலாசம், சென்னை

பத்துநூ றுயிரம் பேர் பகைத்தன ரேனும் நெஞ்சிற்(கு)
ஒத்ததை அன்றி வேறென்(று) உரைத்திடார், சிந்தனைப்பூங்
கொத்தென வாழ்வில் நின்று குலுங்கும்அன் பழகன் என்றே
அத்தனை நெஞ்சும் போற்ற அமைந்தசொல் லரசன் நீயே!

எழுதிய எழுத்துப் போல்தான் எதுவுமே நடக்கு மென்று
கழுவிய கைய ராகக் கடமையின் நீங்கி மெள்ள
நழுவிய மூடக் கொள்கை நண்பரைத் திருத்தும் தொண்டில்
முழுகிய அறிவே! வெற்றி முழக்கமே நீடு வாழி!

அணியுடன் திகழும் எங்கள் அருந்தமி ழன்னை துன்பப்
பிணியுற லாமோ பிஞ்சுப் பிறமொழி வரவால் என்று
துணிவுடன் எழுந்து நெஞ்சம் துடித்துநம் மொழியி னுக்குப்
பணிமிகச் செய்தாய்; வாய்த்த **பழம்புகழ் காத்தாய் வாழி!**

தழைத்ததோர் இனிய வாழ்க்கை தமிழுக் கின்று, நீயன்று
உழைத்ததோர் உழைப்பி னுலே; உணர்வுபெற் றெழுவாய் வாவென்(று)
அழைத்ததோர் அழைப் பினுலே; அறிவிலார் பலருங் கூடி
இழைத்தபேர் இடர்கண் டேநீ இளஞ்சிரிப் புதிர்த்த தாலே!

வென்றநற் கட்சி யாக விளங்கிடும் திமுக வில்
அன்றுதொட் டுள்ளாய்; ஆளும் அமைச்சரி ன்ருனுய்; வைய
மன்றுகண் டுவக்க நாளும் வளர்ந்திடும் கட்சித் தூணுய்
நின்றுகொண் டிருப்பாய்; அன்பில் நெஞ்சமுற் றினிப்பாய் வாழி!

புயலெனப் பகை வந்தாலும் புன்னகை செய்து வெல்லும்
செயலினைப் புரிய வல்ல சிந்தனைத் தெளிவே! கோல
மயிலினில் வருவான் ஞான மணியிள முருகன் என்றும்
தயவினைப் புரிவான் இன்பத் தமிழெனச் செழிப்பாய் நீயே!



வ. திருஞானசம்பந்தன், பி.ஏ.,
பொன்விழா மலர்க்குழு எழுத்தர்

"என் தலைவர்!"

டாக்டர்கள் திருமணம்
டாக்டர் கலைஞர் தலைமையில்!



திருமதி வெற்றிச் செல்வியார்
தம் செல்வங்களுடன்!



"எங்கள் அய்யா!"

எங்கள் அய்யா!

எம்.சி.இலட்சுமணன்
மக்கள்நல்வாழ்வுத்-துறை, அமைச்சரின் ஓட்டுநர்

அய்யா அவர்களைப் பற்றி எவ்வளவோ பேசலாம், எவ்வளவோ எழுதலாம். பல்லாண்டுகளாக அய்யா அவர்களிடம் டிரைவராகப் பணியாற்றி வருகிறேன். அய்யா அமைச்சராக வருவதற்கு முன்னரும் அவரிடம் பணி செய்து இருக்கிறேன்; அமைச்சரான பின்னரும் பணி செய்து வருகிறேன். ஆனால் அன்றைக்கு அவர் எப்படி எனக்குக் காட்சியளித்தாரோ அதே போல் இன்றைக்கும் எனக்குக் காட்சியளிக்கிறார். அன்றைக்கு எப்படி நடந்து கொண்டாரோ அதே போன்றுதான் இன்றும் நடந்து கொள்கிறார். எவ்வித மாற்றத்தையும் என்னால் காணமுடியவில்லை.

அய்யா அவர்களின் கண்டிப்புக்கு ஆளாகியிருக்கிறேன். அடுத்த சில நிமிடங்களிலேயே அவருடைய கனிவுக்கும் ஆளாகியிருக்கிறேன். 'கண்டிப்பான குணம் கொண்ட அய்யா அவர்களிடம் எப்படிப் பணி செய்கிறாய்' என்று கூடச் சிலர் என்னைக் கேட்பார்கள். அய்யா அவர்களிடம் எவ்வளவு கண்டிப்பு இருக்கிறதோ அதனைப்போலப் பன் மடங்கு கனிவும் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது.

அய்யா நான் நீண்ட தூரம் கார் ஓட்டிவிட்டால் ''லட்சுமணா, கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள் - நான் கார் ஓட்டுகிறேன்'' என்பார். அய்யா அமைச்சரான பின்னர் அவர் கார் ஓட்ட நான் உட்கார்ந்து கொண்டு வருவதா? ''இல்லை அய்யா நான் ஏற்கனவே ஓய்வு எடுத்துக் கொண்டு விட்டேன் நானே ஓட்டுகிறேன்,'' என்று கூறுவேன்.

ஒருமுறை திண்டிவனத்திலிருந்து புதுவை வழியாகச் சென்று கொண்டிருந்தோம். அப்போது அய்யா. ''நான் கார் ஓட்டவா?'' என்று கேட்டார். ''நானே நன்றாக ஓட்டுகிறேன்'' என்றேன். ''நீ நன்றாகத்தான் ஓட்டுவாய். எதிரில் வருபவனை முட்டாள் என்று நினைத்துக்கொண்டு ஓட்டு'' என்றார்.

நெஞ்சம் மறவா அறிவுரை :

அய்யா அமைச்சரான மறுதினமே என்னை அழைத்துக் கூறிய அறிவுரை என் வாழ்நாளிலேயே மறக்க முடியாததாகும்.

''லட்சுமணா! இப்போது நம்மைப் பார்க்க எவ்வளவோ பேர் வருவார்கள். மெழுகுவர்த்தியாக இருக்கும்போது வருகின்ற பூச்சிகளும் உண்டு. இப்போது மின்சார வெளிச்சத்திற்கு வருகின்ற பூச்சிகளும் உண்டு. நீதான் பார்த்து நடந்துகொள்ள வேண்டும்'' என்று கூறினார். ஒவ்வொரு நாளும் அய்யா வீட்டின் முன்போ அலுவலகத்தின் முன்போ நான் நிற்கும்போதும் இந்த மணிவாசகத்தை நினைத்துக் கொள்கிறேன்.

அய்யா இல்லத்தில் இருக்கும்போது எப்போது வேண்டுமானாலும் அவரைப் பார்க்கலாம். கால வரம்பு கிடையாது. யாராவது வயது முதிர்ந்த பெரியவர்கள் அவரைப் பார்க்க வந்து நின்று கொண்டிருந்து, அதனை அய்யா பார்த்துவிட்டால் கோபம் வந்துவிடும். பெரியவர்கள் உட்கார இடம் தேடிக் கொடுக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

அய்யாவுக்கு ஆடம்பரம் பிடிக்காது. முழுக்க முழுக்க எளிமையையே விரும்புவார். எங்காவது அவருக்கு ஆடம்பர வரவேற்புக் கொடுக்கப்பட்டால் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவரை அழைத்து "ஏன் இந்த ஆடம்பரம்? இதற்கு ஆன செலவை வேறு பொதுப் பணிக்குப் பயன்படுத்தியிருக்கலாமே" என்று கூறுவார்.

'எப்போது வெற்றிலை போட்டுப் பழகினீர்கள்' என்று ஒருமுறை நண்பர்கள் அய்யாவைக் கேட்டனர். "என்னிடம் ஏதாவது கேட்டால் கேட்டவருக்கு உடனடியாகப் பதில் கூறி விடுகிறேன்; இதனால் ஒரு சிலருக்குக் கோபம் வருவதுபோல் தெரிந்தது. அதற்காகச் 'சட்'டென்று பதில் கூறக் கூடாது என்பதற்காக— நாவை அடக்க வேண்டும் என்பதற்காக — வாய் நிறைய வெற்றிலை போட்டுக்கொள்கிறேன்" என்றார்.

அய்யாவைப் பார்க்க எத்தனையோ பேர் இல்லத்திற்கு வருகிறார்கள்; தங்களுடைய கோரிக்கைகளைக் கூறுகிறார்கள். அதற்கு உடனடியாக "உண்டு" அல்லது "இல்லை" என்று பதில் கிடைத்துவிடும். கூறுவது யார் என்று பார்ப்பது இல்லை. கூறுவதில் நியாயம் இருக்கிறதா? இல்லையா என்றுதான் அய்யா பார்க்கிறார்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்து ஓர் அம்மையார் தம் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அய்யாவைப் பார்க்க வந்தார். அவர் மருத்துவத் துறையில் பணி செய்பவர். அவரை வேறு ஊருக்கு மாற்றி விட்டார்கள். அவரை மாற்ற வேண்டும் என்று கோரியிருந்தவர் செல்வாக்கு வாய்த்த ஒருவர். அந்த அம்மையார் இருந்த இடத்திற்கு இன்னொருவர் வரவேண்டும் என்பதற்காக அந்தச் செல்வாக்கு வாய்த்தவர் இந்த அம்மையாரை வேறு ஊருக்கு மாறுதல் செய்யும்படி கூறி இருக்கிறார். அய்யாவிடம் வந்த அம்மையார் முறையிட்டார். அந்த அம்மையார் கூறியதில் நியாயம் இருந்தது. உடனடியாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டார். அந்த அம்மையார் ஏற்கனவே பணிசெய்த இடத்தில் பணிசெய்ய உத்திர விட்டார்.

"இப்போது இந்த அம்மையாரை மாற்றினால் இந்தக் குழந்தைகளின் படிப்பு என்ன ஆவது!' என்று கடிந்து கொண்டார். இங்கே "செல்வாக்கு" வெற்றி பெறவில்லை. நியாயம் தான் வென்றது.

அய்யா அமைச்சராக இருக்கிறார். அவரிடம் பணி செய்யும் எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் பெருமையாகத்தான் இருக்கிறது. என்றாலும் என் உள்ளத்தில் மட்டும் அவ்வப்போது ஒரு துயரம் கிளம்பி வாட்டும்.

அய்யா அவர்கள் அமைச்சராகிவிட்டார். ஆனால் இதனைப் பார்த்து மகிழ எங்கள் அம்மா (வெற்றிச்செல்வி அன்பழகன்) இல்லையே என்ற துயரம்தான் அந்தத் துயரம். ஏனெனில் ஐயா அவர்கள் மட்டும் கழகப் பணியில் ஈடுபடவில்லை. அய்யாவோடு அம்மாவும்தான் கழகப் பணியில் ஈடுபட்டார்கள். இதனை அண்ணாவே பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறார். வாழ்க்கையில் துன்பம் வந்த போதெல்லாம் எங்கள் அம்மா அய்யாவுக்கு எவ்வளவு உறுதுணையாக இருந்தார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இன்று அம்மா இல்லையே... இதனை எண்ணும்போது கண்களில் கண்ணீர் துளிர்க்கிறது.



நல்ல குடும்பம், பல்கலைக்கழகம்.

அளவான குடும்பத்தோடு நம் அன்பான அமைச்சர்!

நெஞ்சுறையும் நேசநிலா!

புலவர், தி. எதிராசன்,
சு. சா. உயர்நிலைப்பள்ளி, ஆரணி.

நெஞ்சுறையும் நேசநிலா; நேர்மைக் குன்றம்;
நேர்த்திபெறு வெண்முல்லை; நேற்றும் இன்றும்
செஞ்சொல்லால் சொன்மாரி செய்யும் கொண்டல்;
செந்தமிழ்க்கே வாழ்ந்திடுவோன்; சேர நாட்டுக்
குஞ்சரமாய்ப் புகழ்பெறுவோன்; குடிலர் சூழ்ச்சி
குறுக்கிட்டால் துவளாத குமர நெஞ்சன்;
அஞ்சாமை, அறிவூக்கம் அமையப் பெற்ற
அமைச்சரவர் அன்பழகர் ஆல்போல் வாழ்க!

ஓங்கிவளர் மலைத்தீபம்; ஒருவர்க் கென்றும்
ஒருதீங்கும் செய்யாத உண்மைத் தொண்டன்;
பூங்கோதை பொன்முடிமேல் கொண்ட காதல்
பூந்தமிழ்மேல் தான்கொண்டு புனித முற்றோன்;
ஏங்கிடுவோர் துயர்துடைக்க எழுவோன்; அண்ணா
இதயமலர் மணமூட்டி இனிமை கொண்டோன்;
தூங்காமை துணிவுடைமை கல்வி மூன்றின்
துறைதேர்ந்த அன்பழகர் துலங்கி வாழ்க!

புறப்பாட்டில் புதுவாழ்வு கண்டோன்; சங்கப்
புலவரமு தளிக்கின்ற நல்லோன்; அண்ணா
அறப்போரைத் தொடுத்திட்ட அந்நாள் தொட்டே
அரிமாப் போல் எழுந்துலவி வென்ற வல்லோன்;
மறனிழுக்கா மானத்தை மதித்த மேதை;
மாப்புகழோன்; மனிதகுல விளக்கு; வெல்லும்
திறனனைத்தும் கொள்கின்ற கோமான்; எங்கள்
தீஞ்சுவைசேர் அன்பழகர் திளைத்து வாழ்க!

புவிவாழத் தன்னுயிரை ஈவோன்; மக்கள்
பூரிக்கப் பணியாற்றிச் சிறப்போன்; வெற்றிக்
கவிபாடும் கலைஞர்க்கு காலத் தோடு
கவசமென விளங்கிடுவோன்; கடமை யாற்றிக்
குவியாத தாமரையாய்க் குளிர்வோன்; கொள்கைக்
குயிர்நல்கும் குணநிதியம்; கோடை நீழல்;
செவிகைப்பச் சொற்பொறுக்கும் செம்மல்; என்றும்
சினவாத அன்பழகர் சிறந்து வாழ்க!

வகுப்புரிமைப் போராட்டம் நடத்தி, அஞ்சா
வரிப்புலியாய்ச் செயலாற்றி வாகை பெற்ற
பகுத்தறிவுச் செம்பரிதி; பழமைக் கூற்றம்;
பண்பாட்டுக் களஞ்சியமாய்ப் பழகித் தேர்ந்தோன்;
தகுதியெலாம் தானமைத்து வாழ்வோன்; பேசும்
தாய்மொழியின் தன்மானம் தழைக்க வைப்போன்;
பகுத்துண்டு பல்லுயிரை ஓம்பு தற்கே
பாராளும் அன்பழகர் பன்னாள் வாழ்க!

துதிக்கென்றும் மயங்காத தூயோன்; தொட்ட
துறையனைத்தும் துலங்குமொளி கண்ட மேலோன்;
எதிர்ப்புக்கு நடுங்காத ஏந்தல்; ஏலம்
மணக்கின்ற மொழித்தூய்மை மாந்தும் நூலோன்;
'விதி'யென்று விளம்பாத வீரன்; காதல்
விளையாடும் அகப்பாடல் விதந்து ரைப்போன்:
மதிநுட்பம் நூலோடு மிக்கோன்; நல்லோர்
மதிக்கின்ற அன்பழகர் மகிழ்ந்து வாழ்க!

பச்சையப்பனில் எங்கள் பேராசிரியர்!

திருமதி. மோசூர் வாசுகி, எம்.ஏ., எம்.லிட். பேராசிரியை, தமிழ்த்துறை, மிராண்டா மகளிர் கல்லூரி
தில்லிப் பல்கலைக் கழகம்.

முன்னுரை

மாண்புமிகு அமைச்சர் அன்பழகன் அவர்களுக்குப் பொன்விழாமலர் வெளியிடப் போகின்றார்கள் என்று கேள்வியுற்றபோது மகிழ்ந்தேன். அவரை வாழ்த்த எனக்குத் தகுதியில்லாவிட்டாலும், அவர் சீரும் சிறப்புமாக வாழவேண்டும் என்று நினைக்கும் நெஞ்சமுடையேன்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் சில பசுமையான நினைவுகள் உண்டு. எனக்கும் சில நினைவுகள் உண்டு. அவற்றுள் தலைசிறந்து விளங்குவன பச்சையப்பன் கல்லூரியோடு தொடர்புடைய பசுமையான நினைவுகளாகும். பச்சையப்பன் கல்லூரி என்றால் பைந்தமிழ்ச் சோலை என்று நினைவு வரும். அந்தக் கல்லூரியை நினைக்கும்போது தமிழ்த்துறை தான் முதலில் தோன்றும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் பேராசிரியர் மோசூர். கந்தசாமி முதலியார் மறைந்தார். அவர் வாழ்ந்தபோது அடிக்கடி கல்லூரியைப் பற்றி அறிஞர்களிடம் பேசியதைக் கேட்டிருக்கிறேன். அவை என் நினைவில் என்றும் பசுமையாக உள்ளன.

முதலியார் காலத்தில் கற்றுப் பட்டம் பெற்று வெளியேறிய எண்ணற்ற மாணவர்களும், அவருடன் பணியாற்றி முன்னேற்றங் கருதி வெளியே சென்றவர்களும் பலராவர். இன்று சிறப்பாகப் பலருடைய பாராட்டையும், புகழையும் பெற்று வாழ்கின்ற அறிஞர்கள் பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (முன்னாள் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்), டாக்டர் மு. வரதராசனார் (மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்), டாக்டர் மொ.அ. துரை அரங்கனார், (மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர்), திரு. அ. ச. ஞானசம்பந்தம், (மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்), மாண்புமிகு அமைச்சர் க. அன்பழகன் முதலியோர் ஆவர். மறைந்த மாணிக்கம் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் பச்சையப்பன் அளித்த பண்புடைய தலைவர் ஆவார். மேலே குறிப்பிட்ட அறிஞர்கள் அனைவரும் (அறிஞர் அண்ணாவைத் தவிர) எனக்குப் பேராசிரியர்களாக இருந்தனர். அவர்களுடைய பெருமையைப் பேசும்போது எனக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன; நான் அவர்களுடைய மாணவி என்று நினைக்கும்போது பெருமிதமும் தோன்றுகிறது.

அமைச்சரா! ஆசிரியரா!

பேராசிரியரைப் பற்றிப் பலரும் அறிந்த பெருமைகளையும், சிறப்புக்களையுந்தான் நான் எழுதப்போகின்றேன். அறிஞர்களின் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்கும் வாய்ப்பு எனக்குண்டு. அமைச்சர் அவர்களின் பேச்சைக் கேட்கும் வாய்ப்பும் சில சமயங்களில் ஏற்பட்டதுண்டு. மோசூர் கந்தசாமி முதலியார் — என் தந்தையார் — அடிக்கடி பச்சையப்பன் கல்லூரியைப் பற்றியும், அங்கு நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் வீட்டில் பலருடன் பேசும்போதும் நான் சில கருத்துக்களைக் கேட்டதுண்டு. அன்பழகன்

அவர்களைப் பற்றியும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டதுண்டு. அவரை ஆசிரியராகவும், அமைச்சராகவும் காணும் வாய்ப்பு ஏற்பட்டது குறித்து மகிழ்வுறுகின்றேன்.

எங்கள் பேராசிரியர்

பச்சையப்பன் கல்லூரியில் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றிப் பல நல்ல மாணாக்கர்களை உருவாக்கியவர். நான் கல்லூரியில் சேர்ந்தபின் எம்.ஏ. வகுப்பிற்குச் சில மாதங்கள் பாடம் எடுத்தார். தெளிவாக இனிமையாக எளிமையாகப் புன்முறுவலுடன் அவர் வகுப்பை நடத்திச் செல்லும் அழகு ஒரு தனிக்கலையாகும். அடிக்கடி ''தில்லி நம்மை ஆள்வதுபோல் சேரன் சிற்றரசர்களை ஆண்டான்'' என்று சொல்வது இன்றும் என் செவிகளில் ஒலிக்கிறது. நல்ல ஆசிரியராக மட்டுமின்றி, மாணவர்களின் தோழராகவும் இருந்தார். வகுப்பில் நுழைந்ததும் மாணவர்கள் மனம்விட்டுத் தாராளமாக ஆசிரியரிடம் பேசுவர். அவரும் சிரித்துக்கொண்டே அமைதியான முறையில் பதிலிறுப்பார். பாடம் படிப்பதுபோன்று இராமல், ஏதோ சுவையான உரையாடல் போன்று வகுப்புச் செல்லும்.

அமைதியும் அன்பும்

பேராசிரியர் எல்லா நிலையிலும் அமைதியாக நடந்துகொள்ளும் பண்புடையவர். அவருடைய அமைதியான பேச்சு, அன்பாக நடந்துகொள்ளும் முறை முதலியவற்றால் பலருக்கு அவரிடம் அளவுகடந்த ஈடுபாடு ஏற்பட்டது. பேராசிரியராக இருந்த காலத்திலும் மாணவர்களிடையே அன்பாகவும், அமைதியாகவும் நடந்துகொள்வார். அமைச்சராகப் பணியாற்றும் போதும் அமைதியின் இருப்பிடமாகவே உள்ளார்.

அன்றும் இன்றும்

அமைச்சர் ஆனபோதும் அவரிடம் எந்த மாற்றமும் காண முடியவில்லை. நான் எம். ஏ. படித்தபோது அவரைப் பேராசிரியராகப் பார்த்தேன். பத்து ஆண்டுகள் கழித்து அவரைத் தில்லியில் பாராளுமன்ற உறுப்பினராகப் பார்த்தேன். நான் பார்த்தபோது அவர்பால் ஒருவித மாறுபாடும் தெரியவில்லை. தோற்றத்தில்கூட வேறுபாடு இல்லை. வியப்பாக இருந்தது. அமைச்சரான பிறகும் அதேபோன்று அமைதியான தோற்றமும், அன்பான பேச்சும் கண்டேன். நூற்றுக்கணக்கான மக்கள் ஓயாது வந்து போகும் போதும் ஒரேமாதிரியாக இருக்கின்ற பண்பைப் பெற்ற இவரை அதிசய மனிதர் என்றுகூடச் சொல்லத்தோன்றுகின்றது. ஓயாது உழைக்கும் இவருக்கு எப்படித்தான் இவ்வளவு அமைதியாக இருந்து அனைவரிடமும் அன்பாகப் பேசும் பண்பு உள்ளதோவென்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு.

முடிவுரை

பேராசிரியராக இருந்து மாணவர் உள்ளங்களைக் கவர்ந்து பணியாற்றியதுபோல் அமைச்சராக இருந்து மக்கள் உள்ளங்களைக் கவரும்படி பணியாற்றி வருவது பாராட்டிற்குரியதாகும். இங்கு வள்ளுவர் குறளை நினைக்கத் தோன்றுகின்றது. அதாவது கூரிய அறிவு, கவர்ச்சியான தோற்றம், ஆராய்ச்சிப் படிப்பு ஆகிய இம்மூன்றின் சேர்க்கையுடையவரே தூது செல்லத் தகுதியுடையவர்.

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்பவர் எங்கள் பேராசிரியர்.

மாணவர்களுக்கு ஒரு நல்ல ஆசிரியராக இருந்து இன்று நாட்டு மக்களுக்கு மனமகிழச் சேவை செய்யும் ஒரு நல்ல அமைச்சராக வளர்ந்து பணியாற்றும் பொறுப்பு அவருடைய அமைதியான தோற்றத்திற்கும், அன்பான பேச்சுக்கும், கூர்மையான அறிவுக்கும் மெருகிட்டதுபோல் உள்ளது. அவருடைய சேவை சிறக்க, வளர்க, வெல்க என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.

திருமதி வெற்றிச் செல்வி தம் தந்தையார், தமையனர், செல்வர், கொழுநரோடு.

மகளிர் மன்றப் பணி!   அண்ணனும் அண்ணியும்!   வெற்றிச் செல்வி அம்மையார்!

பருதிபோல் வாழ்கவே!

அ. திருமலை முத்துசுவாமி
விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக் கழக
நூலகம்

தக்க புகழும் சால்புச் சிறப்பும்
மிக்க மேன்மை விளைத்திடும் செறிவும்
அடக்கமும் அன்பும் அருங்குணப் பண்பும்
நடக்கத் தன்னை நடாத்திச் செல்லும்
ஒப்புயர் வில்லா உத்தமர் என்றன்
செப்புசெந் தமிழ்போல் சீர்சிறப் போங்கும்
அமைச்சர்! ஆக்கம் அணிபுது மைதரும்
நமின்பே ராசான்! நம்அன்பு அழகர்!
அன்னார் தம்கீழ் அருமா ணாக்கனாய்
நன்னிலை பொருந்திய நாட்களை நினைக்கின்றேன்
என்னே புலமை! என்னே அருமை!
பாடம் நடத்தும் பாங்கை நினைத்தால்,
கோடி நினைவுகள் கொஞ்சும் நெஞ்சில்!
மாணவர் தம்மின் மலரும் இதயம்
பேணும் தெய்வம் பேரா சிரியராம்!
உரைக்கும் உரைகள் உயர்த்தி அறியாமை
கரைக்கும் மருந்தாம்! கரும்பும் தோற்கும்
அமுதப் பேச்சும் அழகு நடையும்
குமுத விழிகள் கொட்டும் கருணையும்
போற்றார் உண்டோ? பொறுமைக் குணத்தால்
ஆற்றல் பெருக்கலில் அவர்க்கிணை உண்டோ?
உண்மை தனக்கே ஓருரு உண்டெனில்,
திண்மை அறிஞர் செழுமைப் பணிசெய்
அன்பழ கர்க்கிணை அன்பழ கர்தான்!

என்றால் மிகையோ? எண்ணிப் பார்த்தால்,
இன்பம் வருகையில் எக்காள மிடாமல்
துன்பம் வருகையில் தொடைந டுங்காமல்,
விருப்பையும் வெறுப்பையும் வெவ்வே றாக்கா
பெருந்தன் மையுடைப் பெரிய மனிதர்
பேரா சான்போல் பிழைமலி அரசியலில்
யாரே காணுவர்! நண்பரே சொல்வீர்!
ஐம்பதாம் அகவை அடியெடுத் திட்டார்
பைம்புகழ் நலம்செய் பதம்தரு வளம்செய்
அவர்புகழ் குணத்தை யானே கூறுவன்!
தவமணி போன்றும் தண்டமிழ் போன்றும்
உலகிடை வாழ்ந்து ஒளிர
பலமுறை வாழ்த்தினம் **பருதிபோல் வாழ்கவே!**

எந்நாளும் எம்நெஞ்சில்

அண்ணாவை இந்நாட்டார் நினைக்கும் தோறும்
அந்நாவால் நம்பெயரும் துதித்தே நிற்பர்.
அந்நாவால் அன்பழகைப் போற்றல் செய்யார்
அவனியிலே எந்நாளும் இருந்ததில்லை
எந்நாளும் எம்நெஞ்சில் கோயில் கொண்டு
இருந்தாலும் இறையாகத் திருவு மாகப்
பண்பாலே திகழும் அன்பு அழகர் உம்மைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம் வரவேற்கின்றோம்.

— **நான்குநேரி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில்**
வாசித்தளித்த வரவேற்பிதழில் ஒரு பகுதி.
6—10—'71

கொள்கைக் குன்று!

சு. கந்தசாமி, பட்டிவீரன்பட்டி.

பேராசிரியர் அவர்களைப்பற்றி என்வரையில் 1939ஆம் ஆண்டிலிருந்து பத்திரிகை மூலம் தெரிந்து கொண்டவன் நான். பெரியார் அவர்களின் தன்மான இலக்கியத்தின் ஆரம்ப கால மாணவத் தொண்டராகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர் அவர். தாய்த் தமிழ் காக்கும் தூய தமிழ்த் தொண்டனுக்கிக் கொள்ளும் பேரார்வத்தில் ராமன் பெயர் தொடர்பான ராமையா என்ற சொல்லை அன்பழகன் என்று மனமார ஏற்றுக் கொண்டவர்.

தமிழ் வளர்ச்சி, தன்மான உணர்வு போன்ற சீர்திருத்த நோக்குக்கு, வலுவானதும், ஏற்றுக் கொண்டவர்களுக்கு அழிவையே தரக்கூடியதுமான பயங்கர சூழ்நிலை உருவாகித் தாண்டவமாடிக் கொண்டிருந்த காலம். பகுத்தறிவு வாதிகளுக்கு எந்நேரத்தில் என்ன விளையுமோ என்று உள்ளூர உணர்வுள்ளவர்கள் பயந்து கொண்டிருந்த நேரம். பொது மேடைகளில் தமிழில் பேசுவது அநாகரிகம் என்று பொதுமக்களிடம் புகழ் பெற்றறியாத பெருந்தலைவர்கள்—அரசு அரவணைப்பிலே இன்பம் கண்டு கொண்டிருந்தவர்கள்—வெளியில் கருத்தினைச் சொல்ல ஊமைகளாக முடங்கிக்கிடந்த நேரம், அரசினரின் அடக்குமுறை நோக்கு, பகுத்தறிவு வாதிகளின் கொள்கைக்கு முட்டுக் கட்டை போட்டுக் கொண்டிருந்த நேரம். மாணவர்கள் அரசியலில் பங்கு பெறக் கூடாது; அரசு ஊழியர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் அரசியலில் பங்கு பெறக் கூடாது என்றெல்லாம் அரசு ஆணை பிறப்பித்துக் கொண்டும், அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டுமிருந்த நேரம். மாணவர்கள் அரசியலில் பங்கேற்றால் படிப்புப் பாழ்பட்டு விடும்; கல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்படலாம் என்ற பயமுறுத்தல் முழங்கிக் கொண்டிருந்த கொந்தளிப்பான நேரத்தில் துணிந்து மாணவப்பருவமே அரசியல் விழிப்புணர்ச்சி பெறும் பருவம் என்று பொது மேடைகளுக்குப் பிரசாரகாரகத் தம்மை அப்பணித்துத் தன்மான இயக்கப் பிரசாரகராகவும், பெரியாரின் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொண்டவராகவும், படிப்புக் கெட்டுவிடவில்லை என்று கல்லூரிப் பட்டதாரியாகவும் ஒளி விட்ட வல்லவர்—நல்லவர்—பேராசிரியர்—அமைச்சர் மாண்புமிகு அன்பழகனுவார்கள்.

நான் அவரை நடிகராகவும் கண்டவன். சோழனுவந்தானில் திராவிடர் கழக மாநாட்டையொட்டி இரவு சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடகம் ஏற்பாடகியிருந்தது. அன்றைய நாடகத்திற்குச் சுயமரியாதைச் செம்மல், அஞ்சா நெஞ்சன், சௌந்தர பாண்டியனுர் அவர்கள் தலைமையேற்றிருந்தார்கள். பேராசிரியர் அவர்கள் அந்நாடகத்தில் விவசாயியாகப் பங்கேற்றிருந்தார்கள். சட்டை அணியாத, முழங்கால் வரை வேட்டியை ஏற்றித் தார்கட்டி, மண்வெட்டியைத் தோளில் சுமந்தபடியே பெருந்திரு. சௌந்திர பாண்டியனுர் அவர்கள் பார்வையாளர்களிடையே ஒருவராக அமர்ந்து, உடல் நலக் குறைவால் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தபடியால் தலைவர் உரையைப் பேராசிரியர் அவர்களே பேசிமுடித்ததும், விவசாயியாக மாறி, மக்களைப் பார்த்துக் கேட்டார்கள். ''ஏய்யா, சாமி, ஆதிசேடனுங்கிற பாம்பு, பூமியைத் தன் தலையில் சுமக்குதுங்கிறுங்களே, அப்ப இந்தப் பாம்பை எது

தாங்குதுன்னு கேட்கிறேன்'', என்று தன் தோளில் சுமந்திருந்த மண்வெட்டியால் ஓங்கி ஒரு வெட்டு வெட்டினுர்கள். மக்கள் வெள்ளம் கையொலி எழுப்பியது அடங்க 10 நிமிடங்கள் பிடித்தன. பூமியில் மண்வெட்டியால் வெட்டினது, கண்மூடிப் பழக்கம் மண் மூடிப் போகட்டும் என்பதுபோல் இருந்தது. அன்று நாடகத் தலைவருக்காக உரையாற்றிய பேராசிரியர் அவர்கள், மறைந்துவிட்ட தலைவர், சௌந்திர பாண்டினுர் அவர்களின் ''5ஆம்'' ஆண்டு நினைவு விழாவில் கலந்து கொண்டார்கள். விழாவினில், மறைந்துவிட்ட திரு. அ. பொன்னம்பலனுர், மாண்புமிகு அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களும் கலந்து கெண்டார்கள். அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருந்தவன் நான். அம்மையார் பேச்சினூடே, உள்ளூர்க் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைச் சட்டமன்றத்தில் பேசுவதில்லை என்று கூறிவிட்டார்கள். காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து ஒரு துடுக்கான கேள்விச் சீட்டு எனக்கு வந்து சேர்ந்தது. நான் பேராசிரியர் அவர்களிடம் சீட்டைக் காண்பித்து நானே துடுக்காகப் பதில் கூறுகிறேன் என்றேன். பேராசிரியர் அவர்களே கேள்வி கேட்டவர், நாணித் தலை குனியும் வண்ணம் நயம்படப் பதில் தந்த பண்பாளர். அதுமட்டுமல்ல, இடைத் தேர்தல் வாக்குப் பதிவுக்கு 5 நாட்கள் முன்பு பட்டிவீரன் பட்டியில் தேர்தல் விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பேராசிரியர் அவர்கள் கலந்து கொண்டார்கள். தேர்தல் முடிவில் முதல்வர் பதவியில் குழப்பம் வரும் என்று எதிர் முகாமிலிருந்தவர்கள் ஆருடம் கணித்துக் கொண்டிருந்த நேரம். கூட்ட ஆரம்பத்திலேயே அரசு அமைப்பது, தி. மு. க.வே; கலைஞர் அவர்களே முதல்வர் என்று விளக்கம் தந்த பண்பாளர் என்பதை மட்டும் எழுதிப் 'பேராசிரியர் வாழ்க' என்று முடிக்கின்றேன்.

கொள்கையுடை எழிலன்பே

சீலமிகு செழுந்தமிழைச் சூடும் ஆட்சிச்
சேறிவோங்கு நல்லரசின் அமைச்சே! சூழுங்
கோலமிகு பெருந்தலைவன் அண்ணு தந்த
கொள்கையுடை எழிலன்பே வருவீராக!
நீலமிகு திரைக்கடலின் ஓரம் வள்ளல்
நாடுபுகழ்ப் பச்சையப்பர் பெயரைப் பூண்ட
ஞாலமுயர் கல்லூரி தன்னில் மூத்த
நல்லாசான் எனத்திகழ்ந்தோய் வருவீராக!

— தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் சார்பாகப் படித்தளித்த வரவேற்பிதழின் ஒரு பகுதி. **26—9—'71**

முத்தமிழும் முறையே போற்றுதல் நம் நெறியே!

கன்னித் தமிழில் கலைக்கல்வி வேண்டும் என்ற கருத்துரை!

பணியுமாம் என்றும் பெருமை!

டாக்டர் ஏ. ஆர். முதலியாருடன்!

தன்மானத் தமிழ்த் தொண்டர்

மு. பி. பாலசுப்பிரமணியன், எம். ஏ.,
துணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்.

பொதுவாழ்வு சிறைவாழ்வு புரட்சி வாழ்வு
புகழ்வாழ்வு வாழ்ந்துவரும் அஞ்சா நெஞ்சர்;
"புதுவாழ்வு" காண்பதற்கே இதழ்ந டத்திப்
புதுநடையைப் புகுத்தியநல் எழுத்து வேந்தர்;
எதுவாழ்வு? எனஏங்கித் தவிக்கும் ஏழை
இதழோரம் தான்இறைவன் இருப்பான் என்றே
புதுமுறையில் ஆண்டவனைக் கண்ட அண்ணா
புகழ்பாடி மகிழ்கின்ற அண்ணா தாசர்!

தொண்டென்றால் தம்வீட்டுத் தொண்டா? இல்லை!
தமிழுக்குச் செயுந்தொண்டே தலைசி றந்த
தொண்டாகும் எனும்கொள்கை வழியில் செல்லும்
தமிழ்த்தொண்டர்; தன்மானங் கொண்டோர்; அண்ணன்
தொண்டுவழி நடைபோடும் கலைஞ ருக்குத்
துணைநிற்கும் நல்லமைச்சர்; நம்அ மைச்சர்!
தொண்டுள்ளத் தால்உயர்ந்த தூய நெஞ்சர்;
துணிவுள்ள அன்பழகர்; துடிப்பு மிக்கார்!

காட்டூரில் பிறந்தவர்தான்; அறிஞர் அண்ணா
காட்டும்ஊர் சென்றிட்ட கடமை வீரர்!
நோட்டூரில் மயங்காத கொள்கைத் தங்கம்
நொடிப்பொழுதும் சோராத ஆண்மைச் சிங்கம்!
பாட்டூரில் பவனி வந்த பாவேந் தர்தம்
பாராட்டை அந்நாளில் பெற்ற செம்மல்!
ஏட்டூரில் புகழ்மகுடம் பெற்றி லங்கும்
இறவாத பொன்னெழுத்து வரிகள் பாரீர்!

★ ★ ★

"திருநின்ற என்றன் தமிழகத்துச் சீர்த்தி
உருநின்று அழியாமை ஓம்புபடை கூட்டி
வருகின்றார் அன்பழகர் என்றொருநாள் கேட்டு
விரிகின்ற செந்தமிழ்க்கு வெற்றிஇனி என்றேனே!

நன்றுண்ட மூவேந்தர் நாகரிகம் ஏமாற்றி
வென்றுண்ட ஆரியத்தை வென்றுளத் தோன்றியவர்
குன்று மறவர் குரிசிலார் அன்பழகர்
என்றேழர் என்னல் எனக்குப் பெருமையதே!"

★ ★ ★

பண்பாளர் அன்பழகர் பெருமை அன்றே
பாவேந்தர் பாட்டினிலே சிறக்கக் கண்டோம்!
கண்போலச் செந்தமிழைக் காக்கும் தீரர்
கடுஞ்சிறைக்கும் கல்லடிக்கும் கலங்கா வீரர்
அண்ணாவின் அரவணைப்பில் ஒளிர்ந்த முத்தாம்
அன்பழகர், தஞ்சைநமக்(கு) அளித்த சொத்தாம்!
புண்ணியத்தாய் பெற்றெடுத்த புதல்வர் வாழ்க!
பூவுலகில் அன்பழகர் என்றும் வாழ்க!!

ஒரு சிலரில் ஒருவர்!

எம். பூபாலன், பி.ஏ., பி.எல்.,
கும்பகோணம்

மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான். பிறப்புக்கும், இறப்புக்கும் உள்ள இடைவெளியில் வாழ்வோர் சிலர் வேதனைப்படுவோர் பலர்; சாதனைகள் புரிவோர் ஒரு சிலர். வாழ்பவர்கள் வாழ்க்கையின் சுகங்களை அனுபவிப்பவர்கள். ஏன் பிறந்தோம் இவ்வுலகில் என்று வெந்து, நொந்து வாழ்க்கைப் போராட்டம் நடத்துபவர்கள் வேதனைப்படுவோர். அத்தகைய வேதனைப்படுவோரையும் வாழவைப்பதற்காக, சுயநலத்தை மறந்து பொதுநலத்தொண்டில் தம் வாழ்வைப் பணயம் வைத்து ஈடுபட்டு வெற்றிபெறுவோர் ஒரு சிலர்.

அந்த ஒரு சிலரில் மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. அன்பழகன் ஒருவராவார்.

பொதுவாழ்விலும், சமூகத் தொண்டிலும் ஈடுபடுவோர் பலர். ஆனால் பொது வாழ்விற்கும் சமூகத் தொண்டிற்கும் தம்மையே அர்ப்பணித்துக்கொள்வோர் ஒரு சிலர். பொதுவாழ்வில் ஈடுபடுவோரில் பலர் சுய தேவை பூர்த்திக்காகவும், விளம்பரத்துக்காகவும் மட்டுமே ஈடுபடுவதுண்டு. ஆனால் தம்மையே அர்ப்பணித்துக்கொள்ளும் ஒரு சிலரின் சிந்தனை வாழ்நாள் முழுவதும் முன்னேற்றத்தையே சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

அந்த ஒரு சிலரில் பேராசிரியர் திரு. க. அன்பழகன் ஒருவர்.

முற்போக்குக் கொள்கை என்னும் ஆயுதம் தாங்கி, மூடப்பழக்கங்கள், சாதி சமூக வேறுபாடுகள் என்ற இன்னல் இடையூறுகளைத் தகர்த்தெறிந்து, வாருங்களடா தம்பிகாள் நாமும் வாழ்வதற்கே பிறந்தவர்கள் என்று வழிகாட்டி, எதையும் தாங்கும் இதயத்தோடு பல காட்டாறுகளைக் கடந்து, இடர்ப்பாடுகளை அகற்றி, இருளில் அடைபட்டுக் கிடந்தோர்க்கு உதயசூரியனின் ஒளியைக் காண்பித்து, அதன் ஒளியிலே சீரும், சிறப்பும், வளமும், வாய்ப்புமிக்க ஓர் பாதை அமைத்து, இனி உங்கள் பயனத்தை இனிது தொடருங்கள் தம்பிகளே, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை மறவாது உங்கள் தொண்டினைத் தொடரவும் என்று கூறி, தாம் ஓய்வுபெற்று உறங்கிக்கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் அமைத்துக்கொடுத்த தமிழக அரசு இன்று டாக்டர் கலைஞர் தலைமையோடும், துணையோடும் வெற்றி நடை போட்டுக்கொண்டு ஒளிமயமான எதிர் காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஏழைகள் சிரிப்பிலே, உழைப்பாளிகளின் உவகையிலே தொழிலாளர்களின் நலனிலே இன்பம் காண்கிறது இன்றைய தமிழக அரசு. இத்தகைய தமிழக அரசை உருவாக்க ஆரம்பமுதல், அல்லும் பகலும் பாடுபட்டு, ஊன் மறந்து உறக்கம் துறந்து உயிரைத் துச்சமென மதித்துப் போராடி வெற்றி கண்ட ஒரு சிலரில் நம் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களும் ஒருவர்.

படித்துப் பட்டம் பெற்று ஆசிரியாராகப் பணியாற்றுவோர் பலர். ஆனால் பேராசிரியர் பொறுப்பேற்று, மாணவர்களுக்குப் பாட அறிவு

மட்டும் விளக்குவதுதான் கடமை என்று கருதாது மாணவ சமுதாயத்திலேயே எழுச்சியையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்த, மாணவ சமுதாயம் வருங்கால சமூகம், அந்தச் சமூகம் நல்ல முறையிலே அமைய, மாணவ சமுதாயம் நல்ல முறையிலே இருக்கவேண்டும் என்பதைத் தம்மிடம் பாடம் பயின்ற மாணவர்கள் தாங்களே உணர்ந்து முன்னேறவும், அத்தகைய மாணவர்களிடையே சில தலைவர்களையும் உருவாக்கிய பெருமை ஒரு சில பேராசிரியர்களையே சாரும். அந்த ஒரு சிலரில் நம் பேராசிரியர் திரு. க. அன்பழகன் ஒருவர்.

சுவரை வைத்துச் சித்திரம் எழுது, உடலை வைத்துப் பாடுபடு என்று கூறுவார்கள். ஒரு நாட்டின் செல்வம் அந்நாட்டின் தாதுப் பொருள்களில் மட்டும் அல்ல. நல்ல சுகாதாரமான மக்களே அந்நாட்டின் செல்வமாகும். மக்கள் நல்ல சுகாதாரத்துடன் இருக்க நல்ல மருத்துவம் தேவை. நல்ல மருத்துவம் தேவையென்றால், நல்ல நல்வாழ்வுத்துறை அமைச்சர் தேவை. இத்தகைய பொறுப்பினை ஏற்று நல்ல சீரிய முறையிலே செவ்வனே நடத்திச் செல்லும் நம் பேராசிரியர் நம் தமிழக அரசின் — தமிழ்நாட்டின் — செல்வம் என்றால் மிகையாகாது.

பிறந்த நாள் கொண்டாடுவதிலே இரண்டு விதம் உண்டு. முதலாவதாகத் தன் பிறந்த நாளைத் தானே கொண்டாடிக் கொள்வது. செல்வந்தர்களும், சீமான்களும், சினிமா நடிகர்களும் சமுதாயத்திலே தமக்கு ஓர் அந்தஸ்தை ஏற்படுத்திக்கொள்வதற்காகக் கொண்டாடுவர். இத்தகைய விழா கொண்டாடுவோர் பலர். இரண்டாவதாக ஒருவர் பிறந்த நாளை மற்றவர்களும், நாட்டு மக்களும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுவது. நாட்டின் நலனுக்காக, மக்களின் நல்வாழ்வுக்காக, இரவென்றும் பகலென்றும் பாராது, அயராது உழைத்து ஏழை எளியவர்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டுத்தன்னை மறந்து, தன் சுற்றத்தை மறந்து, மக்கள் எல்லோரும் தன் சுற்றத்தார் என்ற பரந்த நோக்கோடு பொதுப் பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட, ஒருசில நல்லெண்ணங்கொண்ட தனிப்பெரும் தலைவர்களுக்குத்தான் நாட்டு மக்கள் எல்லோரும் முன்வந்து அவர்தம் பிறந்த நாளைக் கொண்டாடுவார்கள். அத்தகைய ஒரு சிலரில் நம் பேராசிரியரும் ஒருவர்.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்றுக் காட்சிக்கு எளியவராய், ஏழைபங்காளராய், கருத்தோவியமாக இருக்கும் நம் பேராசிரியர் அவர்கள் சேவைகள் ஏட்டில் அடங்கா. அவர்தம் பொன்விழா தமிழக அரசின் பொற்காலத்தில் இடம் பெறுவது ஓர் தனிச்சிறப்பாகும். பேராசிரியர் அவர்களின் பொன்விழா சிறப்பாக அமைக!

வாழ்க பல்லாண்டு!

வளர்க அவர்தம் தொண்டு.!

புரசைப் பகுதி—தி.மு. கழக நிர்வாகிகள், செயலாளர்களோடு.

நேர்முக உதவியாளர்களோடு

பழகு தமிழ்ப் பேராசிரியர்

எஸ். மெய்யப்பன், எம். ஏ.

நண்டெடுத்த நடையைப்போல் செயலில் வேகம்!
நாற்றெடுத்த பசுமையைப்போல் கருணை நெஞ்சம்!
வண்டெடுத்த ரீங்காரம் அன்னவர்தம் குரல்
வளையெடுத்தால் எதிரொலிக்கும்! மேடை தன்னில்
துண்டெடுத்துப் போட்டுக்கொண்டு பேச நின்றால்
தேனெடுத்த பெருமழைதான் பெய்யும்; நறுங்கற்
கண்டெடுத்து வைரமணித் தட்டில் வைத்து
களிப்போடு சுவைக்கின்ற விருந்து கிட்டும்!

ஆறடியை நெருங்குகிற உயரம்! அன்பில்
அரவணைக்கும் அன்னைமனச் சிகரம்! அறிவில்
நூறடியை நெருங்குகிற தெளிவு! வாழ்வில்
நலிந்தவரைக் காக்கின்ற பரிவு! தூற்றும்
ஊரடியைத் தாங்குகிற நெஞ்சம்! என்றும்
உரிமைப்போர் காலடியில் மஞ்சம்! நெருப்புச்
சேறடியில் புடம்போட்ட தங்கம்! எங்கள்
பெருமைமிகு பேராசிரியரென்றும் சிங்கம்.

காவதனில் மலர்மணக்கும்! வாசச் சந்தனக்
காடதனில் மணமிருக்கும்; வண்டரற்றும்
பூவதனில் தேன்மணக்கும்! செல்வர் தம்மின்
பேழையிலே பொன்மணக்கும்! எடுத்தெடுத்து
ஈவதெனில் கைமணக்கும்! இல்லாள் வீசும்
பார்வையிலே குளிர்மணக்கும்! பேராசிரியர்
நாவதனில் தமிழ்மணக்கும்! சுவை மணக்கும்!
நாடுயுயர்த்தும் கருத்தெல்லாம் மணக்கு மம்மா.

முடிவைத்துப் பேசமாட்டார் பிறரின் முன்னே
முகஸ்துதியைத் தான்சொன்னேன்! மற்றவர்க்குப்
பிடிவைத்துப் பேசமாட்டார்! பகைப் புலமேல்
வசைவைத்துப் பேசமாட்டார்! வேண்டுமானல்
பொடிவைத்துப் பேசிடுவார்! நல்ல நல்ல
பொருள்வைத்துப் பேசிடுவார்! சிலசமயத்தில்
வெடிவைத்துப் பேசிடுவார் காரமாக
பொடிப்பொடியாய் எதிரிகளை ஆக்குதற்கு!

காடெல்லாம் மணக்கின்ற சந்தனம்போல்
களிப்பாக இரண்டோடு வாழச்சொல்லி
வீடெல்லாம் மணப்பதற்கு வழியுரைக்கும்
வித்தாரப் பெருமகனர் அமைச்சரன்பர்!
ஏடெல்லாம் என்றென்றும் போற்றும் படியும்,
எழிலெல்லாம் மிகக்குலுங்கிச் சிறக்குமிந்த
நாடெல்லாம் நாவார வாழ்த்தும் படியும்
நூருண்டு மேல்நிலைத்து வாழ்வா ராக!

திரு மறு மார்பன்

பேராசிரியை பா. இராச இராசேசுவரி, எம்.ஏ., எம்.லிட்.,
இராணிமேரி கல்லூரி,
சென்னை.

இன்றைக்கு இருபது ஆண்டுகட்கு முன்னர் 1952இல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை வகுப்பில் மாணவியாகச் சேரும் பேறு கிடைத்தது; பள்ளி இறுதி வகுப்பில் படிக்கும் போதெல்லாம் பச்சையப்பன் கல்லூரி என்றாலே தமிழ் என்றுதான் என் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது; இளமையில் என் வேகம் காட்டாற்றின் வேகத்தைப் போன்றது; தமிழ், தமிழ் இனம், தமிழ் நாடு என்றால் எனக்குச் சொல்ல முடியாத பற்று; எனவே தமிழுக்குத் தாயாக இருந்த பச்சையப்பன் கல்லூரியை நினைத்தாலே என்னையறியாத ஓர் இன்ப உணர்வு என் இரத்தத்துடன் கலந்திருந்ததில் வியப்பொன்றுமில்லை. இக்காரணம் தான் என் இல்லம் மாநிலக் கல்லூரிக்கு அருகிலிருந்த போதும், தொலைவிலிருந்த பச்சையப்பன் கல்லூரியைப் 'பழுமரம் தேரும் பறவை' போன்று என் மனம் நாடச் செய்தது.

என் நாட்டம் தவறில்லை எம் மதிப்பிற்குரிய பேராசிரியர் டாக்டர். மு. வ. அவர்களின் தலைமையில் நல்ல பேராசிரியர்கள் தமிழ்த்துறையில் இருந்தனர். அவருள் ஒருவராகத்தான் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களைக் கண்டேன். உறங்கும் மாணவரும் உறங்காத வகையில் கணீரென்ற குரலில் புறப்பொருள் வெண்பா மாலையினை அவர் கற்பிக்க நான் கேட்கும் வாய்ப்புப் பெற்றேன். வாரத்தில் ஒரு மணி நேரம்தான் பாடம்; எனினும் அவ்வொருமணி நேரம் மாணவர் மனத்தில் எத்தனையோ சிந்தனைகளைத் தூண்டிவிடும். அதற்குக் காரணம், கற்பிப்பார்க்கு அமைய வேண்டிய அனைத்துப் பண்புகளும்—மலை, நிலம், பூ, துலாக்கோல் போன்றவற்றின் பண்புகள்—அவரிடம் அமைந்திருந்தமையேயாகும். அளக்கலாகாப் பெருமையும், அருமையும், பொறையுடைமையும், மங்கலமுடைமையும், நடு நிலைமையும், அவர் தம் தனிப் பெருங்குணங்கள்; பாடம் கற்பிக்கும் ஆற்றலுடன் அவருடைய கொள்கைகளும், தமிழ், தமிழர், தமிழ் நாடு—இவற்றின் மீது அவருக்கிருந்த பற்றும் இரண்டறக் கலந்திருந்தன.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்கக் கலைபயில் தெளிவும், சொல்லாற்றலும் மிக்க பேராசிரியர் அவர்கள், பெயருக்கேற்ப அன்புள்ளம் கொண்டவர்; பார்வைக்குக் கண்டிப்புடையவர் போலத் தோன்றும்; அவர் நெஞ்சம் தமிழ் நெஞ்சம் என்பதனை அவருடன் நெருங்கிப் பழகுபவர் அறிவர்.

அவருடைய கொள்கையிலும், பண்பிலும் விருப்புக் கொண்ட நான் அவர் ஓர் அமைச்சராதல் வேண்டும் என்று விழைந்தேன். பிறரும் அவ்வாறே எண்ணியிருப்பர். அவ்வாறே அவர் அமைச்சரானார். பேராசிரியராகப் பணி புரிந்து மாணாக்கர்களின் மனக் கோட்டத்தை நீக்கிப் பழகிய அவர்—உடல் நோயைத் தீர்க்கும் மருத்துவத் துறைக்கு அமைச்சரான பின்னர், அத்துறையில் நிலவிய சூழல்களை நீக்கிச் செம்மைப் படுத்தியதில் பலருடைய புகழிற்கும் பாத்திரமாகின்றார்.

"திருமறு மார்பன்"போல் திறலும், "மாகடல் கலக்குற மா கொன்ற மடங்காப் போர் வேல் வல்லான்"போன்ற அழகும், ஆற்றலும், இள ஞாயிற்றின் வீறும், தண் மதியத்தின் அருளும் பெற்ற என் மதிப்பிற்குரிய பேராசிரியரை என் தந்தையோடு நெருங்கிப் பழகிய நண்பர் என்ற வகையில் என் தந்தையென்று எண்ணி, அவருக்கெடுக்கும் பொன்விழாவையொட்டிய மலருக்குப் பாராட்டுரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்ற நான், அவர் என்றென்றும் தமிழருள்ளத்தில் "நின்ற சொல்லராக, நீடு தோன்றினிய"ராகத் திகழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்

நலத்துறையின் நல்லமைச்சர் வாழ்க!

வித்துவான்:
நா. சிவராமமுத்துக் குமாரவேல்,
தேனி.

அன்பார் உளமதனுல், அன்பார் மொழியதனுல்,
அன்பார் செயலின் அழகதனுல்,—அன்பழகன்
என்னும்பேர் கொண்டிலகும் இன்பமிகு நல்லமைச்சர்
தென்தமிழ்போல் வாழ்க சிறந்து!

பேரா சிரியப் பெருந்தகையாம் அன்பமைச்சர்,
சீரார் நலத்துறையின் சீரமைச்சர்—ஏரார்ந்த
தோற்றப் பொலிவமைச்சர், தூய்மைமிகு நல்லமைச்சர்,
ஆற்றலுடன் வாழ்க அமைந்து!

திட்டமிட்டு வாழுஞ் சிறப்பான நற்குடும்பக்
கட்டுப்பா டென்பதனைக் கண்ணியமாய்—அட்டியின்றி
எல்லார்க்குஞ் சொல்லி இனிதாற்றும் நல்லமைச்சர்,
வல்லமையாய் வாழ்க மகிழ்ந்து!

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமெனத்"
தாயன்பு கொண்டே தனித்தாய்ந்து—நேயமுடன்
மன்பதைக்குத் தொண்டாற்றும் மாண்புமிகு நல்லமைச்சர்
இன்பமுடன் வாழ்க இசைந்து!

அன்புப் பணியதனில் ஆர்வமுறும் நல்லமைச்சர்
இன்பத் தமிழ்போல் இறையருளால்—மன்பெரிதும்
எல்லா நலமும் இனிதடைந்து பல்லாண்டு
நல்வாழ்வு வாழ்க நயந்து!



‘புது வாழ்வு’ மக்கள் எய்த எது வழி?

மலேசியா வாழ் நண்பர்களுடன் கோலாலம்பூரில்!

பச்சையப்பர் பாசறையில் பணியாற்றிய காலத்தில்!



நண்பரிருவரோடு நம் பேராசிரியர்

'எங்கள் பேராசிரியர்'

க.த. திருநாவுக்கரசு, எம்.ஏ., எம்.லிட்.,
திருக்குறள் ஆராய்ச்சித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பண்டைத் தமிழின் பண்பாளன்; பாவலர் போற்றும் பேராசான்; கண்ணைக் கழகத்தைக் காத்திடுவோன்; கருத்தாய்க் காஞ்சித் தலைவன் வழிநிற்போன்; தண்ணார் தமிழவேளின் தனித் துணைவன்; மக்கள் மன நலத்தோடு உடல் நலமும் பெற்று வாழ மக்கள் நலத்துறை அமைச்சராய்ப் பணிபுரிவோன் என்று நாட்டு மக்களால் போற்றப்பெறும் சான்றோருக்குப் பொன்விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

கழகத் தலைவர்களும் தோழர்களும் அன்போடு 'பேராசிரியர்' என்று அழைக்கப் பெறும் சிறப்பிற்குரியவர் மாண்புமிகு மக்கள் நலத்துறை அமைச்சர் க. அன்பழகனார். 'பேராசிரியர்' என்பது அவருடைய சிறப்புப் பெயராகவும், செல்லப் பெயராகவும் வழங்கப் பட்டு வருகிறது. பண்டைக் காலத்திய அறிஞர்களுள் சிலர் 'பேராசிரியர்' என்னும் பெயராலேயே போற்றப்பட்டதைப் பழைய தமிழ் இலக்கியங்கள் சிலவற்றால் நாம் அறிகிறோம்.

பேராசிரியர் என்பது இயற்பெயர் அன்று; கல்விச் சிறப்பால் வந்த பெயராகும். இப் பெயரைப் பெற்றிருந்த புலவர்கள் அறுவர், இடைக்காலத் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கினர். தொல்காப்பியத்திற்குப் பொதுப் பாயிரம் செய்த பேராசிரியரை 'ஆத்திரையன் பேராசிரியர்' என்று கூறுவர். திருக்கோவையாருக்கு உரை கண்டவர் 'பேராசிரியர்' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றார். யாப்பருங்கல விருத்தியுரையில் யாப்பு இலக்கண நூல் ஒன்றை இயற்றிய மயேச்சுரர் என்பவர் 'பேராசிரியர்' என்று குறிப்பிடப்படுகின்றார். தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவரான 'பேராசிரியர்' பரந்துபட்ட அறிவும், நுண்மாண் நுழைபுலமும் உடையவர். குறுந்தொகைக்கு உரை எழுதிய பேராசிரியர், 'நல்லறிவுடைய தொல்பேராசான், கல்வியும் காட்சியும் காசினி' அறிந்தது என்று போற்றப் படுகின்றார். நேமிநாதர் என்பவருக்கும் 'பேராசிரியர்' என்ற பெயர் வழங்கியமை 'தமிழ் நாவலர் சரிதையால்' அறியம் பெறுகிறது.

இவர்களுடைய இயற்பெயர்கள் மறைந்து, அவர்களுடைய கல்வியறிவையும், ஒழுக்கத்தையும் உலகிற்கு உணர்த்தும் சிறப்புப் பெயரே பொன்றாப் புகழுடன் பொலிவுறுகிறது. இன்றைக்கு நாட்டிலே தொழில் முறையில் 'பேராசிரியர்' என்னும் பதவிக்குரிய பெயரைப் பெற்றவர்கள் பலர் உள்ளனர். ஆயினும், 'பேராசிரியர்' என்னும் சிறப்புப் பெயரால் நாடறிந்த நற்றமிழ்த் தொண்டராகச் சிறப்புற்று விளங்குபவர் மாண்புமிகு அமைச்சரேயாவார். மக்கள் அவரைப் 'பேராசிரியர்' என்று போற்றுகின்றனர். ஆனால், '**எங்கள் பேராசிரியர்**' என்று உரிமை கொண்டாடும் பேறு, அவரிடம் கல்வி பயின்ற என்னைப் போன்ற மாணவர்க்கே உரியதாகும். அதிலும், அவருடன் நெருக்கமான தொடர்பு

கொண்டுள்ள மாணவர்க்கே உரிய சிறப்புரிமையாகும்.

வகுப்பறையில் பாடம் நடத்தும் பேராசிரியராக மட்டும் அவர் எங்களுக்கு விளங்கவில்லை; எங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பரிவோடு கேட்டு, அறிவுரையும் ஆறுதல் மொழியும் அளிக்கும் அன்பராகவும் திகழ்ந்தார். இவ்வகையில் எங்களை நெறிப்படுத்திய வழிகாட்டியாக அவர் எங்களுக்கு விளங்கினர். இவற்றிற்கு மேலாகப் பண்டைத் தமிழ்ச் சான்றேர்கள் பலருடைய ஒப்புயர்வற்ற பண்புகளின் நிலைக்களனுக நாங்கள் அவரைக் கண்டோம். அவருடைய நாவீறு நக்கீரனை நினைவுபடுத்தியது; பகைவரை மதித்துப் போற்றும் பண்பும், பிறருக்கு இன்னு செய்ய விரும்பாத அவருடைய இனிய உள்ளமும் வள்ளுவனைக் கண் எதிரில் காண்பதைப் போன்ற உணர்வினை ஊட்டியது; அவருடைய செயலாற்றுந் திறன் சேரன் செங்குட்டுவனை நினைந்து மகிழச் செய்தது.

அந்த நாட்களில் அவரிடத்து உள்ளார்ந்த பண்புகளாக இருந்த இயல்புகளே, இன்று அவரைச் சிறப்புமிக்க அமைச்சராக வீறுடன் விளங்கச் செய்துள்ளன. நூலறிவோடு பொருந்திய மதிநுட்பமும், மனத்திட்பத்தால் வெளிப்படும் வினைத்திட்பமும், நாநலத்தால் நாட்டவரைப் பிணிக்கும் நல்திறனும், மனத்துக்கண் மாசற்ற மாண்பும், கொண்ட கொள்கையில் உறுதிப்பாடும், பிறருடைய இயல்பு அறிந்து ஒழுகும் பண்பாடும் பேராசிரியரைச் சான்றேராக்கியுள்ளன.

தமிழகத்தின் இளைஞர் சமுதாயம் பேராசிரியரின் பண்புகளை உணர்ந்து, போற்றிப், பின்பற்றி வாழ்வில் முன்னேற்றங் காண வேண்டும். இத்தகைய சிறப்பிற்குரிய ‘எங்கள் பேராசிரியர்’ அண்ணுவின் அன்புநெறியினையும் பண்புநெறியினையும் அனைத்துலக வாழ்வியல் நெறியாக மாற்ற அயராது பன்னெடுங்காலம் பணிபுரிவாராக!

பேராசிரியப் பெருமகனே வாழி!

கவிஞர்
வா.மு. சேதுராமன்

விளம்பரத் தாலும் தன்னின்
வேடிக்கைப் பேச்சினுலும்
வளம்தரு பொருளின் பம்சேர்
வாடிக்கைச் செயல்களாலும்
உளம்விற்றுத் தலைவ ராகும்
உத்தமர் உண்டு! வாழ்வுக்
களமதனில் 'அன்ப' ரைப்போல்
கடமைக்காய் வாழ்ந்தார் உண்டா?

ஆர்ப்பாட்டம் செய்வோ ரெல்லாம்
அரசியல் குருக்கள் இன்று!
யார்பாட்டுப் பாடி னுலும்
நம்பாட்டுப் பின்பாட் டென்றே
பேர்பாட்டுப் பாடு வோர்முன்
பெரும்பண்பாம் அடக்கப் பாட்டுச்
சீர்போட்டுத் தளைபோ டும்எம்
செழுந்தமிழ் அன்பே வாழி!

அன்புக்கே அழகு செய்யும்
'அன்பழ காஉம் மேன்மை
இன்பத்தின் காட்சி ஆண்மை
இதயத்தின் மாட்சி! என்றும்
துன்பம்கொள் சமுதா யத்துத்
துயரிருள் மாற்றும் ஆட்சி
நன்மைகள் அன்றித் தீமை
நாடாத அறிவே வாழி!

புத்தனைப் போன்றே ஆசைப்
பொல்லாத அல்லல் வென்ருய்!
சித்தனும் காந்தியைப் போல்
சீர்பெற்ருய்! இயேசு வைப்போல்
சத்தியம் காக்க வேண்டில்
சகலமும் ஈவாய்! இந்த
மெத்தநல் நம்பிக் கையால்
'வெற்றிமகள்' கணவ வாழி!

என்றுமுள தென்தமிழர்

மே. வே. சக்கரவர்த்தி, எம்.ஏ., பி.டி.,
புதுக்கல்லூரி, சென்னை.

உருவத்திற்கு ஏற்ற உள்ளமோ உள்ளத்திற்கு ஏற்ற உருவமோ அமைவது அரிது. சிலருக்குத்தான் உருவமும் உள்ளமும் அழகுற ஒழுங்குற அமைகின்றன. அதற்கு ஏற்றாற் போலப் பெயரும் பொருத்தமாய் அமைகிறது. அத்தகைய பெயர்ப் பொருத்தமும் செயல் பொருத்தமும் மிக்கவரே பேராசிரியர் அன்பழகனார் என்பது பொய்யுரையன்று; புனைந்துரையுமன்று; மெய்யுரையாம் ஒன்று.

பேராசிரியர் அவர்களை இந்த நாடு நன்கறியும். காரணம் அவர் தம் பேச்சாலும் பெருந் தொண்டாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல்லாண்டு காலமாகச் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்து வருகிறார் என்பதுதான். எவரும் மெச்சத்தக்க வகையில் அவர்தம் உச்சி குளிரக் கச்சிதமாய்ப் பேசித் தம் கருத்துகளைப் பரப்பி மகிழ்ந்தும் மகிழ்வித்தும் வருகிறார் என்பதன் வாயிலாக அவருக்குள்ள ஆற்றலும் அசைவிலா ஊக்கமும் தெள்ளிதின் விளங்குகின்றன.

கண்ணுக்கும் செவிக்கும் இனிய அவரை எவரும் எண்ணியும் எழுதியும் இன்புறலாம். அத்தகைய பெருந்தகையாளர் ஒருவரைப் பாராட்ட வேண்டுமென்று நல்ல உள்ளங்கள் எண்ணுவதும் எண்ணியவாறே செயலாற்ற நண்ணுவதும் இயல்பேயன்றோ?

தம் பேச்சாலும் எழுத்தாலுமே ஒருவர் ஏற்றம் பெற்றுவிட இயலாது. மூச்சுள்ளவரையில்தான் பேச்சும் எழுத்தும். அதன் பின்னரும் நிலைத்து நிற்பது அழியாப் புகழ் ஒன்றுதான். அப்புகழ் நேர்மையாலும் நெறிபிறழாமையாலும் நிலைப்பது. பேராசிரியர் பேச்சை விட-எழுத்தை விட - தோற்றத்தைவிட அவர் தம் நேர்மையும், எதையும் வெளிப்படையாக எடுத்துச் சொல்லும் பான்மையுமே எல்லாரையும் கவர்வனவாகும்.

பச்சையப்பன் கல்லூரியில் அவர் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் நானும் என் நண்பர்களும் அவரிடம் தமிழ் கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தோம். அப்பொழுது ஓர் எதிர்கால அமைச்சரிடம் தமிழ் பயின்று கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் எழவில்லை. ஆனால் ஓர் அமைச்சராவதற்கு உரிய ஏற்றமும் தோற்றமும் பேச்சும் செயலும் அன்றே அவரிடம் நிழலாடிக் கொண்டிருந்தன என்பதை அவர் அமைச்சரான இன்றுதான் என்னைப் பொருத்தவரையில் புரிந்துகொள்ள முடிகிறது.

காட்சிக்கு எளிய தோற்றம். ஆனால் எடுப்பான தோற்றம். பேச்சிலே இனிமை எனினும், பேசுங்கால் வன்மை. நடையிலே மென்மை. நாவிலே உண்மை. உள்ளத்தில் தெளிவு. கண்களில் கனிவு. காலத்தில் கருத்து. சீர்திருத்தம் காண்பதில் சிந்தனை. படித்தவரிடம் மதிப்பு. பண்பாளர்களைக் கண்டால் பணிவு. அடங்கவேண்டிய இடத்தில் அடக்கம். முழங்கவேண்டிய இடத்தில் முழக்கம். கன்னித்தமிழில் சொல்லொணா ஆர்வம். இதயத்துடிப்பு; அச்சமில்லாத வாழ்வு இவை அத்தனையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால், நினைவு கூட்டினால், நின்று நிதானித்துக் கவனித்தால் அங்கே அன்பழகனாரைப் பார்க்கலாம். தமிழர் ஒவ்வொருவரும் தம் நினைவில் கொள்ளத்தக்க பெருந்தமிழர் அவர்.

பேராசிரியர் கட்சிக்கே உரியவர் என்று எவரேனும் எண்ணினால் அது தவறு. அவர் அனைவருக்கும் உரியவர் என்று எண்ணு

வதே சரி. பிறரிடம் கருத்து வேறுபாடு அவருக்கு உண்டே தவிரப் பிறரை வெறுக்கும் கூறுபாடு அவரிடம் இல்லை. அவர் நன்னெஞ்சர் என்பதற்கு இதுவே சான்று.

வெறும் வரட்டுப் பாடங்களைக் கற்பித்துக் கொண்டிராமல், எல்லாவற்றையும் மனப்பாடம் செய்து கொள்ளுங்கள் என்றும் கூறிக்கொண்டிராமல், தேர்வுக்கு இவை இவை முக்கியம் இவை இவை முக்கியமல்ல என்று கூறி மாணவரைக் குறுக்கு வழியில் செலுத்திக் கொண்டிராமல் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவையே வளர்த்துக் கொண்டிருந்தால் அத்தகைய அறிவுத்திறம் மாணவரிடையே அவர் பேராசிரியர் என்னும் பெருமதிப்பைத் தேடித் தந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தனியிடமும் தனிச் சிறப்பும் தனித் தகுதியும் பெற்றவர் பேராசிரியர். அதற்குக் காரணம் அவர்தம் உண்மை உழைப்பும் உயரிய நோக்கமுமே யாகும். எத்தனைபேரை அன்பழகன் என்று பெயரிட்டழைத்தாலும் அத்தனைபேரையும் விலக்கிவிட்டு அந்தப் பெயருக்குப் பொருத்தமானவர் தாமே என்பதை அனைவர் நெஞ்சங்களிலும் தோன்றச் செய்யும் அளவுக்கு அவர் உயர்ந்திருக்கிறார் என்பதைவிட அவர் பெறவேண்டிய பேறு, அடையத்தக்க புகழ், ஈட்டவேண்டிய செல்வம் வேறு என்ன இருக்கிறது?

இளைஞர்களுக்கான வருங்காலத்தை உண்டாக்காமல் வருங்காலத்திற்கு ஏற்ற இளைஞர்களை உருவாக்கிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும். அண்ணாவால் உருவாக்கப்பட்ட, ஊக்குவிக்கப்பட்ட எவரும் பின்னாளில் பெருவீரர்களாய்த் திகழ்வர் என்பதற்கு இன்றைய அமைச்சரவை சிறந்த எடுத்துக்காட்டாகும். அத்தகைய அமைச்சரவையில் இடம் பெற்றுத் தாமும் ஓர் அமைச்சராய் அதுவும் சுகாதார அமைச்சராய் அரும்பணி ஆற்றி வருகிறார் பேராசிரியர்.

நாற்பது வயதில் இளமையில் முதுமையும், ஐம்பது வயதில் முதுமையில் இளமையும் தோன்றுகின்றன. இந்தக் கணக்குப்படி பார்த்தால் பேராசிரியருக்கு இப்பொழுதுதான் அனுபவ வாயிலாகச் செயலாற்றக்கூடிய முதுமையில் இளமை தொடங்குகிறது. இனி அவர் செயலாற்ற இருக்கும் பணிகள் பல, இதுவரை அவர் செயலாற்றியுள்ள பணிகளைவிடப் பிறர் போற்றுதலுக்கும் புகழ்தலுக்கும் உரியவனவாகும் என்பது மலை உச்சி மணி விளக்காகும்.

ஐம்பது ஆண்டுகள் நிரம்பப்பெற்ற ஒருவரை மற்றொருவர் வாழ்த்த நேரிட்டபோது, ‘‘மேலும் ஐம்பது ஆண்டுகள் வாழ்வீராக!’’ எனவாழ்த்தினாராம். அதற்கு வாழ்த்தப்பட்டவர் ‘‘மேலும் வாழ விருப்பமில்லை; ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்ததே அதிகப் பிரசங்கித்தனம்’’ என்றாராம். அப்படிச் சொல்வதற்கு இடமின்றிப் பேராசிரியர் தம் நாற்பத்தொன்பது ஆண்டுகளை வாழவேண்டிய முறையில் வாழ்ந்து கழித்திருக்கிறார். எனவே, அவர்தம் ஐம்பதாம் ஆண்டுப் பிறந்த நாளில் அவர் மேலும் பல ஆண்டுகள் பல்வகைச் செல்வமும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என உளமார வாயார மலரிட்டு வாழ்த்துகிறேன்.

எளிமை, இனிமை, தூய்மை, ஆழமுடைமை, இலக்கண வரம்பு கடவாமை, ஆகிய ஐந்து பண்புகளும் அருந்தமிழுக்குண்டு. இந்த ஐந்து பண்புகள் அன்பழகனாருக்கும் உண்டு. தோற்றத்தில் எளிமையும் பேச்சில் இனிமையும் உள்ளத்தில் தூய்மையும் கருத்தில் ஆழமுடைமையும் கட்சிக்கென்று வரையறுக்கப்பட்ட, தமக்கென்று வகுத்துக்கொண்ட இலக்கண நெறியினின்று மாறுபடாமையும் ஆகிய ஐந்துமே ஐந்து தூண்களாய் நின்று அவரைச் சான்றோருள் ஒருவராக்கிக் காட்டுகின்றன.

பேராசிரியர் உரம்பெற்றவர். அண்ணாவின் வரம் பெற்றவர். நல்ல திறம் பெற்றவர். உயர் தரம் பெற்றவர். அவரைத் தென்னகம் மறக்கவில்லை; தன்னகத்தே வைத்துப் போற்றுகிறது என்பதற்கு அடையாளமாகவே அவர் தம் பிறந்த நாளையொட்டி அழகிய மலரொன்று அன்பர்களால் வெளியிடப்படுகிறது. மலர் மலர வேண்டும். மணமது கமழவேண்டும். பேராசிரியர் பெருவாழ்வு என்றுமுள தென் தமிழாய் இலங்கவேண்டும். அவரும் என்றுமுள தென் தமிழராய், இணையிலாப் பெருந்தமிழராய்த் துலங்கவேண்டும். நீடூழி வாழவேண்டும்.

வாழ்க தமிழ்! வாழ்க அன்பழகனார்!

மலர் மனிதர்

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

இலைமனிதர் ஏராளம், நீரோ வாச
எழில்வட்ட மலர்மனிதர்! நரைநு ரைக்கும்
அலைமனிதர் ஏராளம். நீரோ சிப்பி
அளித்தமுத்துச் சுடர்மனிதர்! கரையும் உப்புச்
சிலைமனிதர் ஏராளம். ஆனால் நீரோ
சிதைவறியா ஒருமனிதர். காலப் போக்கில்
நிலைமனிதர் எனஅறிவோம் அதனால் எங்கள்
நெஞ்சங்கள் கொஞ்சுதமிழ் பாடி வாழ்த்தும்!

மனத்தோரம் உதடவிழ்க்கும் மலர்ம ணத்தை
மகரந்தப்பொன் சொற்களினால் பரப்பு கின்றீர்
தினந்தோறும் நொடிதோறும் தழுவுந் தென்றல்
தெவிட்டுகி றதா!நும்தேன் பேச்சால் எங்கள்
இனந்தேறக் காண்கின்றோம்! தெவிட்டல் இல்லை!
எரிமலையோ அலைகடலோ புயலோ என்று
சினப்பதெலாம் பகைவர்மேல்! பாலோ தேனோ
தேமாவோ எனஇனிப்பீர் எங்கட் காக!

வழிகாட்டும் சக்தி!

K. பரமசிவம்
பொதுச் செயலாளர், ஜஸ்டிஸ் கட்சி

பொதுவாழ்வில் ஊர்ந்து உயர்ந்தவர்களை, போற்றுவதும், பாராட்டுவதும், புகழ்பாடுவதும் வெறும் சம்பிரதாயம் அல்ல, அது தமிழ் மரபு.

நெடுஞ்சாலைகளில் ஒரு சுமைதாங்கிக்கல்லை அமைப்பவனுக்குக்கூட ஊரில் ஒரு தனி மரியாதையும், அந்த மரியாதைக் குரியவனுக்கு அந்தச் சுமைதாங்கிக் கல்லிலேயே பெயர் பொறிப்பதும்—தமிழ் மக்களின் வழக்கென்பதை நாடறியும்.

இந்நிலையில்,

இடர்ப்பாடுகள் நிறைந்த அரசியல் உலகில் கால் நூற்றாண்டு காலம்,

இன்னல்களுக்கும், சோதனைகளுக்கும் மனம் சலிக்காமல் தொடர் பயணம் செய்து, வெற்றிகாண்பவர்களைப் பாராட்டியும், போற்றியும் விழாவெடுப்பதும், மலர் வெளியிட்டுச் சிறப்பிப்பதும், நூற்றுக்கு நூறு நியாயமான பணி என்பதே எனது கருத்தாகும்.

அந்த வகையில்,

நம் பேராசிரியர் அவர்களுக்குப் பிறந்த நாள் விழாவெடுத்து, அந்த விழாவினைச் சிறப்பிக்கின்ற முறையில் ஒரு மலர் வெளியிட முன் வந்துள்ள மலர்க் குழுவினரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம்,

தமிழ்ச் செல்வர் பேராசிரியர் க. அன்பழகன் என்ற பெயர்ச் சொல், இன்று ஒரு தனி மனிதரைக் குறிப்பிடுவதல்ல,

அது ஒரு ஸ்தாபனத்தின் வரலாறு.
அது தமிழ் இலக்கியத்தின் குறியீடு.
அது திராவிட இன நாகரிகத்தின் முகப்பு.
அது தமிழ்ப் பண்பாட்டின் முன்னுரை.
அது கால் நூற்றாண்டு அரசியல் வாழ்வின் வெற்றிச் சொல்.

அது பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற இலட்சியங்களை டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலே செயல்படுத்தும் அரசியல் சேவைகளின் பரிணாமம்.

கரை எந்தப்பக்கம் என்று யூகிக்க முடியாத நிலையில் கப்பலேறிய கொலம்பசைப் போல், எதிர் காலத்தின் தெளிவான படப்பிடிப்பு இன்னதுதான் என்று தெரியாத நிலையில் அண்ணாவின் சுண்டுவிரல் பற்றிக்கொண்டு அரசியல் அரங்கம் ஏறியவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்.

காங்கிரஸ் கட்சி இந்திய பூபாகம் முழுவதிலும் கால்நீட்டிப் படுத்தபடி கொட்டாவி விட்டுக்கொண்டிருந்த தருணத்தில்,

அதன் போக்குகளைக் கண்டிக்கவும், அதன் நடவடிக்கைகளைக் காதைத் திருகிக் கேட்கவும், பார்ப்பனரல்லாத தமிழ் மக்களின் சுபிட்சத்திற்காகப் பாடுபடுவதற்காகவும் விடிவெள்ளியென முளைத்த ஜஸ்டிஸ் கட்சியில் தம்மை இணைத்துக்கொண்டு தமிழர் நலப்பணியாற்றியவர் நம் பேராசிரியர் அவர்கள்.

அரசியலுக்காக-அரசியலுக்கு வந்த அரசியல்வாதியல்ல நம் பேராசிரியர் அவர்கள்;

தமிழ் காக்க, தமிழர் நலம் காக்க, அரசியலைக் கருவியாக்கிக்கொண்டு வெற்றிகண்ட விற்பன்னர் அவர்.

அதனுல்தான், நீதிக்கட்சியில் அறிமுக மான அவர் அரசியல் வாழ்வு,

சுயமரியாதை இயக்கத்தின் செழிப்பிற்கு உரமாகி,

திராவிடர் கழகத்தின் கொள்கைகளுக்கு விளக்க நூல் ஆகி,

பேரறிஞர் அண்ணு கண்ட திராவிட முன் னேற்றக் கழகத்தின் இலட்சியங்களுக்கு விரி வுரையாக மலர்ந்து,

இன்று டாக்டர் தமிழவேள் கருணுநிதி அவர்களின் அமைச்சரவைக்கு, அணி சேர்க் கும் மாணிக்கப் பரலாக ஒளி பெற்றுத் திகழ்கிறது.

கழகக் குடும்பத்தில் தம்மைமட்டும் இணைத் துக்கொள்ளாமல், தம் குடும்பத்தையே கழக மாக மாற்றிக்கொண்ட பெருமைக்குச் சொந்தக் காரரான இவர்,

தம் மனச்சாட்சிக்குச் சரியென்று படாத எந்தப் பிரச்சினையானுலும் அதைத் தூக்கி எறி கின்ற வேகம் இவர் இரத்தத்தோடு பிறந்த இயல்பாகும்.

நீதி, நேர்மை, நாணயம், தூய்மை, ஒழுக்கம், துணிவு, அஞ்சாமை, வாய்மை, இத்தனைக்கும் அவர் நெஞ்சத்தில் சரியாசனம் உண்டு.

'சிரித்துப் பேசி அவரைச் சரிக்கட்டிவிட முடியும்' என்று எவனுவது நினைத்தால் அவன் ஏமாறப் போகிறவன் என்பது உலகறிந்த உண்மை.

அதேபோல், கழக வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட தொண்டர்களின் வியர்வைத்துளிகளை மதிக்கின்ற பெருந்தன்மை பேராசிரியர் அவர்களின் உடன் பிறந்த சொத் தாகும்.

கழகம் என்பது—தமிழ் நாட்டின், தமிழ் மக்களின், தமிழ் மொழியின் காவல் அரண் என்பது அவர் தீர்மானம்.

அந்தக் கழகம்—கட்டுக்கோப்புடன் வளர் வதையும், வலுப் பெறுவதையும் பொருத்துத் தான் ஜனநாயகம் மூளியாகாமல் இருக்க முடியும் என்பது அவர் சித்தாந்தம்.

பேராசிரியர் அன்பழகனுர் அவர்கள் ஒரு முழுமை பெற்ற 'ஜனநாயகவாதி' என்பதும் நாடறிந்த உண்மை.

கழகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவரான பேராசிரியர்,

இன்று அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னுல்,

அவர் துறையில் ஏற்பட்டுள்ள மகத்தான மாற்றங்களை நாட்டுக்குச் சொல்வது, நிலவை அடையாளம் காட்டுவதுபோன்ற வீண்வேலை யாகும்.

''தமிழறிந்தோர் தமிழகத்தை ஆளவேண் டும்'' என்று எனது அருமை நண்பர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிட்டதுபோல்,

தமிழறிந்த, தமிழ் உணர்ந்த, தமிழ் வளர்த்த—தமிழ் வளர்க்கும், பேராசிரியர் அன்பழகன் அவர்கள் இன்று கழக அரசின் அமைச்சர்களில் ஒருவராக இருப்பது,

தமிழுக்கு நல்ல காலம்!

தமிழருக்கு நல்ல காலம்!

வயதில் நடுப்பகல் ஞாயிறுபோல் ஆகிப் பிரகாசம் பொழியும் பேராசிரியர் அவர்கள்,

வருங்காலத் தமிழகத்திற்கு வழிகாட்டும் சக்தி என்பதை நான் அறிவேன்.

அந்தச் சக்தி, எல்லா நலன்களையும் பெற்று, நீடூழி காலம் வாழ்ந்து,

நாட்டுக்கும், மொழிக்கும் தொண்டாற்றி மகிழ்விக்க வேண்டும் என்பதே எனது ஆவல்!

அந்த ஆவலுடன் எனது நல்வாழ்த்துக் களை, நல்லெண்ணங்களை, பேராசிரியர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க பேராசிரியர்!

வெல்க அரசியல் நெறி!

என் தலைவர்

தேனி. மு. தங்கராசன்

1950-ஆம் ஆண்டு நான் தேனி நாடார் சரசுவதி உயர்நிலைப் பள்ளியில் நான்காம் படிவம் படித்துக் கொண்டிருந்தபோது என் தலைவர் பேராசிரியர் தொடர்பு எனக்குக் கிட்டியது. பள்ளியில் மறைமலையடிகள் மாணவர் மன்றம் அமைத்து அம் மன்றத்திற்கு நான் தலைவராக இருந்து பள்ளியின் வள்ளுவர் விழாவுக்குப் பேராசிரியர் அவர்களை அழைத்திருந்தேன். சில தவிர்க்க முடியாத வேலையின் காரணமாகத் தாம் வருவதற்கு வாய்ப்பில்லை என்று விருதுநகர் செந்திற் குமாரநாடார் கல்லூரியில் அப்போது புதிதாகச் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்திருந்த தம் இளவல் திரு. க. திருமாறன் M.A. அவர்களைக் கலந்து விழா இனிது நடைபெற ஏற்பாட்டினைச் செய்தார்கள். அதுபோலவே திரு. திருமாறன் அவர்களையும் திரு. A.V.P. ஆசைத்தம்பி அவர்களையும் பங்கேற்குமாறு செய்து விழாவினைச் சிறப்பாக நடத்தினேன். அந்த விபரங்களையும் பின்னர்ப் பேராசிரியர் அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். அதன்பின்பு நான் தேனி நகர் தி.மு. கழகத்தின் பொறுப்பினை ஏற்றிருந்த காலத்தில் தேனியை யடுத்த காமாட்சிபுரம், கோம்பை, கூடலூர், போன்ற பல்வேறு கழகக் கூட்டங்களில் கலந்து உரையாற்றினார்கள். அப்போது அவருடனே இருத்து நானும் கழகக் கூட்டங்களில் பேசுவேன். என்னை அவர் கலந்து கொள்ளும் கூட்டங்களில் முதலில் பேசச் சொல்லுவார்கள். சீக்கிரமாகப் பேச்சை முடித்துவிடும் என்னை அதிகநேரம் ஏன் பேசக் கூடாது? என்று கடிந்து கொள்வார்கள். ஓரளவு இன்றைக்கு நான் மேடை யேறிப் பேசுகின்றேன் என்றால் அது பேராசிரியரான என் தலைவரின் பயிற்சியேயாகும். அவர் பேசுகின்றபோது என் பேச்சைத் தொட்டு என் பெயரையும் உச்சரித்து என்னையும் பலரின் கவனத்துக்குக் கொண்டுவந்த அந்தப் பெருந் தன்மையை இன்றைக்கும் நினைத்து நான் பெருமகிழ்வு கொள்வதுண்டு. என் போன்ற தொண்டர்களையும் மதித்து ஊக்குவிக்கும் பான்மையினைக் கண்டு தேனி வட்டாரத்து மக்கள் இருபதாண்டுகளுக்கு முன்னமேயே ஆச்சரியப்பட்டதுண்டு.

என் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அவரிடம் ஆலோசனை கேட்பேன். அவர் சொல்லி நான் மீறி நடந்த நிகழ்ச்சிகளில் நான் மிகப் பெரிய தோல்வியைக் கண்டேன். 1959இல் என் தலைவர் தலைமை வகித்துப் பட்டிவீரன் பட்டியில் எனது திருமணத்தை நடத்தி வைத்தார்கள். மறு ஆண்டு என் குழந்தைக்கு 'மலர்க்கொடி' என்ற பெயரினையுமிட்டு மகிழ்ந்தார்கள். பின்னர் 1963இல் நான் சென்னை வந்து பத்திரிக்கை நடத்த விரும்புகின்றேன் என்று எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். அப்போது நாவலர் அவர்கள் 'மன்றத்தை' நிறுத்தி — சந்தாத் தொகையினைத் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்த நேரம். ''நான் 'விடுதலைக் குரல்' என்ற கிழமை இதழுக்கு நடத்தும் உரிமை பெற்றும் நடத்தாமல் இருக்கிறேன்; நாவலர் மன்றத்தை நிறுத்தி விட்டார்கள். எங்களைப்போல் நீ தமிழக மக்களுக்கு அறிமுகமானவனில்லை. நாங்களே சிந்திக்கின்ற ஒன்றினை நீ தொடவேண்டாம் — அந்த எண்ணத்தினைத் தொடர வேண்டாம். வேண்டுமானால் கழக இதழ்களுக்கு எழுது. அந்தப் பயிற்சியினை முதலில் பெறு.'' என்று கூறினார்கள். நான் அவரிடம் மறுமொழி கூறாது தலையசைத்து விட்டு மதுரை போய் 'வைகை' என்னும் திங்கள் இருமுறை ஏட்டினை—சொந்த அச்சகம் நிறுவித் தொடங்கிவிட்டேன். பேரிழப்பு ஏற்பட்டுப் பெரும் கடன் சுமைக்கும் ஆளானேன். தலைவர் இட்ட கட்டளையை ஏற்காததால் ஏற்பட்ட பலன் அது. எதையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பாணி அவருடையது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழகத்தில் பிளவினைத் தோற்றுவிக்க முயன்று கொண்டிருந்தபோது பேராசிரியர் அவர்களுக்கு உண்மை நிலை அறியக் கடிதம் எழுதினேன். அவர் எனக்கு ''நீதியும் நேர்மையும் அண்ணாவின் பக்கம். மற்றவை மற்றவர் பக்கம்'' என்பதாக இரத்தினச் சுருக்கமாக எழுதினார்கள். எனக்குப் பல்வேறு காலங்களில் வழிகாட்டியாகவிருந்து என் வாழ்வில் ஒளியேற்றிய மாசுமறுவற்ற என் தலைவருக்கு 50-ஆண்டுகள் நிறைவு பெற்ற இந்த நாளில் என் நன்றியெல்லாம் கூறி ''வாழ்க பல்லாண்டு'' என வாழ்த்துகின்றேன்.

கழகத்தின் சுடர் ஒளி!

"அன்புத் தமிழ்"

கன்னித் தமிழன்னை
　　கனிவோடு ஈன்றெடுத்துக்
கண்ணின் கரு மணியாம்
　　கழகத்தின் சுடர் ஒளியாம்
அன்பழகர் என்னும்நல்
　　அருமைசால் தலைவரினை
வண்ணப் பெயர் கொடுத்து
　　வையகத்திற் கனுப்பித்தான்

அன்பிருக்கும் இடத்திலே
　　அருளும் நிறைந்திருக்கும்
இன்புற்ற சொற்கள்தான்
　　என்றுமே வளர்ந்திருக்கும்
பண்பின் உறைவிடமாய்ப்
　　பலர்போற்ற வாழுமவர்
எண்சேர்ந்த நெஞ்சத்தார்
　　ஏற்றபுகழ் பெறுகுகவே!

வந்தவரை வரவேற்று
　　வாழ்த்தி மகிழுமவர்
சிந்தை மகிழும் வண்ணம்
　　செவிவிருந்து தந்திடுவார்.
விந்தைசெய் மனதுடனே
　　விளைபுகழ்சேர் கருத்தோடு
செந்தமிழின் வாழ்வுக்காய்த்
　　திருநாட்டில் வாழ்கின்றார்.

தமிழகத்தில் பிறந்துவிட்ட
　　தகுதிகொண்ட காரணத்தால்
அமிழ்தமொழி வழங்கும்
　　அறிவுடைமை பெற்றதனால்

இமயம் சேர் நற்புகழை
இன்றவர்தான் பெற்றுள்ளார்
தமிழ் நாட்டுத் தலைவரைநாம்
தமிழ்த்தேனல் வாழ்த்திடுவோம்.

திருவாரூர் அடுத்துள்ள
திருமலிசேர் காட்டூரில்
திருமிக்கார் கல்யாண
சுந்தரனார் என்பார்க்கும்
திருமலிசேர் சுவர்ணம்பாள்
என்கின்ற பெருமகட்கும்
அருமைப்பே ராசிரியர்
அன்பழகர் பிறந்திட்டார்.

தக்கதோர் வயதினிலே
தகுதிகள் பலபெற்று
மிக்காரும் வாழ்த்துகின்ற
மேன்மை பல பெற்றாரே!
திக்கெட்டும் போற்றுகின்ற
திறம் கொண்ட அன்னவரை
மக்களினச் சார்பில்யாம்
மகிழ்வோடு போற்றிடுவோம்.

இளமையாம் வயதிலவர்
எழுதியபேர் எழுத்துக்கள்
இலக்கிய உலகத்தில்
இணையில்லாப் பொருளாகும்
நலம்சூழும் பலவற்றை
நடைநுண்மாண் நுழைபுலத்தால்
பலம்பெற்றுச் சமுதாயம்
பயன்பெறவே வழங்கியுள்ளார்.

ஒருமுறை நம்அண்ணா
உணர்ச்சிப் பெருக்கோடு
நெறி வழுவா அன்பழகன்
நினைத்தவற்றை நினைத்தபடி
தருமத்தால் தயக்கமின்றித்
தமிழகத்தில் சொல்லிவரும்
நிறையன்பே உடையரென
நெஞ்சத்தால் வாழ்த்துரைத்தார்!

'பேராசிரியர் மூலம்
    பேசநான் கற்றறிந்தேன்
சீராசிரியர் அவர்தம்
    சிறப்புகளை உணர்வேனென'
ஏரார்ந்த நாவலர்தாம்
    ஏற்றமொடு எடுத்துரைத்தார்
பாரோர்கள் போற்று புகழ்
    பான்மைதனை நாடறியும்

தலைவரவர் மக்கள்முன்
    தமிழ்முழக்கம் செய்கையிலே
அலைஅலையாய்க் கூடியுள்ள
    அருந்தமிழர் அனைவருமே
நிலைமறந்து நின்றிருப்பார்
    நெஞ்சத்தால் தமிழ்சுமப்பார்
நிலைகுலையா நெஞ்சத்தார்
    நீடுபுகழ் பெற்றுயர்க

ஏழை எளியவர்க்கு
    என்றும் துணைநின்று
வாழையடி வாழையென
    வளம்பெற்றே வாழ்ந்திடுக
தோழமையால் இறைவன்என்
    முன்தோன்றி வருவானேல்
ஆழியைப்போல் அன்பழகர்
    ஆயிரம்ஆ யிரம்ஆண்டு

பூமிதனில் வாழ்ந்திருக்கும்
    புண்ணியமாம் வரம் கேட்பேன்!
தாமின்புற் றேஇந்தத்
    தரணியெல்லாம் இன்புறவே
தேமதுரத் தமிழேபோல்
    செழிப்புற்று வாழியரோ
பூமணம்போல் புகழ்மணம்போல்
    பொன்னேற்றம் பெற்றதைப்போல்

        வாழி நலம்சூழ
        வாழ்க அவர்பல்லாண்டு
        என்றே வணங்குகின்றேன்
        இதயத்தால் வாழ்த்துகின்றேன்.

எங்கள் அமைச்சர்

புரசைப் பகுதிக் கழக நிர்வாகிகள், செயலாளர்கள்.

1971-ஆம் ஆண்டு சட்டமன்றம் கலைக்கப் பட்டது; அதைத் தொடர்ந்து இடைத்தேர்தல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. தலைமைக் கழகம், கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கச் சிந்தித்துக் கொண்டிருந்தது. எங்கள் புரசைத் தொகுதிக்கு நாங்களும் ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுத்துத் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்க வேண்டியிருந்தது. நாங்கள் அனைவரும், பகுதிச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் கழகப்பற்றுடையோர் அத்தனை பேரும் ஒருமனதாகக் கழக வேட்பாளராகப் பேராசிரியர் அவர்களை நிறுத்த வேண்டும் என்று எங்கள் எண்ணத்தை ஒரே குரலில் கழகத் தலைமையிடம் தெரிவித்தோம். கழகத் தலைமையும் அதை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது; தலைமைக் கழகம் பேராசிரியர் அவர்களைப் புரசைத் தொகுதியில் நிறுத்தியது. பிறகு தொகுதியில் செயல் வீரர்கள் கூட்டங்கள் நடைபெற்றன. எல்லாக் கூட்டங்களிலும் பேராசிரியர் உள்ளதை உள்ளபடியே—எண்ணியதை எண்ணியாங்கு எடுத்துரைத்தார். அவருடைய ஒப்பற்ற பேச்சு—ஈடு இணையற்ற பேச்சு நடை கழகத்தின் வெற்றிக்குக் காரணமாயிருந்தது. அவர் கழகத் தொண்டர்களின் கடமையை எடுத்துக்கூறி—அண்ணாவின் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றும்படி ஆணையிட்டார்.

தேர்தல் கூட்டமாக இருந்தாலும், ஊர்வலமாக இருந்தாலும் குறித்த நேரத்தில் வந்து எங்களையெல்லாம் உற்சாகப்படுத்தித் திறம்படப் பணியாற்றி வெற்றியும் பெற்றார்கள். இந்த மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கழகத் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேராசிரியர் அவர்கள் இன்று மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுச் சீரிய தொண்டாற்றுகிறார்கள். நம் பேராசிரியர் அவர்கள் அடையாறு பகுதிக்குச் சென்று விட்டால் எங்களுடைய தொடர்பு குறைந்து விடுமோ என்று அஞ்சி, புரசைத் தொகுதிக்கு அருகிலேயே நாங்கள் அனைவரும் சென்று பார்க்க வசதியாகவும் — தொடர்பு வைத்துக் கொள்ளவும் ஏற்ற வகையிலே குடியிருப்பது அவரது தொண்டுள்ளத்தைக் காட்டுகிறது. நாங்கள் பெருமகிழ்வு எய்துகிறோம்.

பேராசிரியர் என்றவுடன் எங்களுக்கெல்லாம் என்றும் ஒரு பயம் இருந்துகொண்டேயிருக்கும். அதுவும் அமைச்சர் ஆனவுடன் எப்படி இருப்பார்களோ என்று எண்ணியதுண்டு. இன்று அவரிடம் பேசும்போதும், அவரைக்காணும் பொழுதும் எங்களுக்கு இருந்த பயம் பறந்து விட்டது.

புரசைப் பகுதியைப் பொருத்தவரையில் ஓர் அமைச்சரைப் பெற்ற தொகுதி என்ற பெருமை எங்களுக்கு உண்டு; அது எங்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சியைத் தருகிறது. தொகுதியின் குறைகளை நேரில் சென்று கூறினால் உடனுக்குடன் கவனித்து ஆவனசெய்துதரும் விதம் எங்களுக்கு மன நிறைவைத் தருகிறது.

எண்ணத்தை எண்ணியபடி
கூறிடும் இயல்புடையவராய்
நியாயத்தின் பக்கமே
என்றும் நிற்கும்
எங்கள் அமைச்சர்
பொன் விழா கொண்டாடும் நாளிது!
பொலிவோடும் வலிவோடும்
ஏற்றமிகு கருத்துக்களை
எடுத்தியம்பும் சுடரொளியாய்
வாழி! பல்லாண்டு வாழி!!

நன்றி!

கலைநலம் தோய்ந்த கட்டுரை நல்கி மலரை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றிய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி. கட்டுரை, கவிதைகள் வழங்கி மலரினைக் கவின்பெறச் செய்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் அறிஞர், கவிஞர் பெருமக்களுக்கும் நன்றி.

விளம்பரங்கள் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும் பிறர்க்கும் நன்றி.

பொன்விழா மலரினை அழகாக அச்சிட்டுக் காலத்தில் தந்த ஐடியல் அச்சகத்தார்க்கு நன்றி.

மலருக்கு எழிலூட்டிய ஓவியர்கள் திரு. கே. மாதவன், சின்னையன், ஆனந்தன் ஆகியோர்க்கு நன்றி.

மலர்ப்பணி சிறக்கப் பல்லாற்றானும் உதவிய திரு. மணிமன்ற வாணனுக்கு மனமார்ந்த நன்றி.

மலர்ப் பணியின் தொடக்க காலத்தில் துணை புரிந்த பேராசிரியர் திரு. நா. பாண்டுரங்கன் அவர்களுக்கு நன்றி.

உருவமைப்புக் கட்டைகள் (Blocks) உருவாக்கித் தந்த "கிளின் அன் பெயர்ல்", "கேயெம் புராசெஸ்" உரிமையாளர்களுக்கு உளமார்ந்த நன்றி.

மலராக்கத்திற்கு உடனிருந்து உழைத்துதவிய திரு. வ. திருஞான சம்பந்தன் அவர்களுக்கு நன்றி.

பொன்விழா மலர் பொலிவுற வெளிவருவதற்குத் துணைபுரிந்தார் அனைவர்க்கும் எங்கள் அகமார்ந்த நன்றி.

தொகுப்பாசிரியர்.

SIEMENS



X-ray diagnosis
X-rays in the operation theatre
Angiography
Radiotherapy
Nuclear medicine
Patient monitoring
Data processing in medicine

Seven examples from our programme which embraces the entire field of electro-medicine. Our Sales/Service Organisation has Offices all over India - for further details, please contact

SIEMENS INDIA LIMITED
Medical Division
Stadium House
81/83 Veer Nariman Road
Bombay-20

Siemens – advanced engineering for medical progress

ஐடியல் அச்சகம், சென்னை-6.